# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 02 செப்டெம்பர் 2005 பார்வை : 13 விலை : ரூபா.25.00



உள்ளே....

இ. அண்ணாமலை ■ மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு

மா. சின்னத்தம்பி ■ ஆசிரியர் பிள்ளைகளின் கல்வி - புதிய கவனம்

க. பூரணச்சந்திரன் ■ எரிக் ஃப்ராமின் மானுட ஆளுமை மாதிரிகள்

தா.சனாதனன் ■ கேள்வி - பதில்

தி. கமலநாதன் ■ இடைநிலைப் பாடசாலைகளில்
பா.தனபாலன் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

# POOBALASINGHAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS,
STATIONERS AND NEWS AGENTS.

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 2504266
Fax : 4-515775

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

60

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. : 2422321
தொ. நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

கிளை :
இல. 309 A-2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ. பே. : 2504266
தொ. நகல் : 4-515775

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா

நிர்வாக ஆசிரியர்:
மனோ இராஜசிங்கம்

ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்வித்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(கல்விப் பிரிவு,
கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(நிபுணத்துவ ஆலோசகர்,தொலைக்கல்வி
நவீனமாக்கற் செயற்றிட்டம்
(DEMP/DEPP), கல்வி அமைச்சு)
உ.நவரட்ணம்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)

அச்சு :
ரெக்னோ பிரின்ட்,கொழும்பு - 06
தொலைபேசி: 0777-301920

வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :
**AHAVILI**
3, Torrington Avenue, Colombo - 07.
Tel : 011-2506272
E-mail : ahavili@viluthu.org




பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம் சமூக மாற்றத்துக்கும் மேம்பாட்டுக்கும் கல்வி வளர்ச்சி தேவை என்பதாகும். அதேநேரம் கல்விச் சிந்தனைகளும் அவற்றைத் தொடரும் கல்விச் செயற்பாடுகளும் கூட சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களைத் தொடர்ந்தே புதிய வடிவம் பெறு-கின்றன. இது கல்வி வரலாறு கண்ட உண்மை ஆகும்.

காலத்துக்கு காலம் ஒவ்வொரு அரசாங்கமும் கல்வி மாற்றங்களுக்குக் காரணமாக இருந்து வருகின்றன. இருப்பி-னும் தொலைநோக்குப் பார்வையில் நாட்டின் சமூக அபி-விருத்தி, மனிதவள அபிவிருத்தி யாவற்றையும் ஊடறுத்து நிற்கும் பொறிமுறைச் செயற்பாடாக கல்விச் செயற்பாட்டைக் கருதிச் செயலாற்றுவதில் இவை பின்தங்கியுள்ளன. அதாவது கல்விமாற்றங்களுக்கான அடித்தளத்தை உருவாக்குவதில் அரசாங்கங்கள் தோல்வி கண்டிருக்கின்றன. இலங்கையைப் பொறுத்தவரை இது நியாயமாகவே உள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் கல்விச் சீர்திருத்தங்-கள் 'கல்வியின் விரிவாக்கம்' என்ற அம்சத்தில் அதற்கேயுரிய திசைவழியில் பயணப்படவில்லை. கல்வியறிவின்மைக்கு எதி-ரான போராட்டம் இன்னும் தீவிரமாவதற்கு உறுதுணையாக கல்விச் சீர்திருத்தங்கள் இடம் பெறவில்லை.

கல்விச் சீர்திருத்தங்களுக்கும் ஆசிரியர் கல்வி முறை-மைக்கும் இடையில் பெரும் பிளவு எப்போதும் நிரந்தரமாகவே உள்ளது. இதனால் கல்வியின் விரிவாக்கத்துக்கேற்ப ஆசிரியர் சமூகம் செயற்பட முடியாமல் உள்ளது. "மாற்றங்கள்" தொடருரு தன்மையைப் பேண முடியாமல் முடக்கப்படுகின்றன. இவை எதிர்கால கல்வியின் வளர்ச்சியில் எத்தகைய தாக்கம் செலுத்தும் என்பதைக் கூட உணராமல் செயற்படுவது மிக மோசமான விளைவுகளுக்கே இட்டுச் செல்லும்.

ஆகவே எமது சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் பெரும் இடைவெளி உண்டு. அப்படியானால் நாம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர முடியும்?

❑

# மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு

**புதிய தமிழ் என்று சொல்லும்போது புதிய காலத்தில் வழங்கும் தமிழ் என்று பலரும் பொருள் கொள்வார்கள். புதிய காலம் என்னும்போது புதிய வாழ்க்கை மதிப்பீடுகளைக் கொண்ட காலம் என்றே பொருள் கொள்ள வேண்டும். இந்தப் புதிய மதிப்பீடுகளை வெளியிடும் தமிழையே புதிய தமிழ் என்று சொல்ல வேண்டும். புதிய மதிப்பீடுகள் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினால் பிறப்பவை. வாழ்க்கை நோக்கிலும் நுகர் விலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் பண்பாட்டு மாற்றங்கள் விளைகின்றன. சமூகத்தின் அமைப்பு முறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும் புதிய மதிப்பீடுகள் பிறக்கின்றன.**

முனைவர். இ. அண்ணாமலை
மொழியியல் பேராசிரியர்
தமிழ்நாடு

தமிழ்ச் சமூகத்தில் ஜாதி, சமயம்,விவசாயம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வாழ்வு நெறி முறையே வர்க்கம், அரசியல், தொழிலியல், ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாக மாறும்போது புதிய மதிப்பீடுகள் பிறக்கின்றன. இவற்றையெல்லாம் உள்வாங்கி மொழி மாறுதல் அடைகிறது. சமூக வளர்ச்சியில் ஆட்சி அலுவலகங்கள், நீதிமன்றங்கள், தகவல்பரப்புச் சாதனங்கள் என்று புதிய அமைப்புக்கள் உருவாகும்போது அவற்றின் தேவைகளை நிறைவேற்ற மொழி மாறுதல் அடைகின்றது.

அகத்தூண்டுதலாலும் புறத்தூண்டுதலாலும் சமூகத்தில் ஏற்படும் புதிய போக்குகளாலும் மொழி மாறுதல் அடைகிறது. புதிய தமிழில் இரண்டு புதிய சமூகப் போக்குகளின் தாக்கம் இருக்கிறது எனலாம். முதலாவது, தற்காலத்தில் வளர்ந்துள்ள சமூக மாற்றத்தால் வந்த இலக்கிய வளர்ச்சிவட்டார இலக்கியத்தின் சிறப்பு அம்சம் வட்டாரத்துக்கே உரித்தான இருத்தலனுபவங்களை தமிழ்ச்சமூகத்தின் பொது அனுபவமாக்குவதாகும். பேச்சு மொழியில் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டுவந்த இந்த வட்டாரக் கலாசார அனுபவங்கள் எழுத்துத் தமிழின் மூலம் பொதுமைப் படுத்தப்படுகின்றன. தமிழ்ச் சங்கத்தின் அனுபவ அடிப்படை விரிவடைகிறது. இரண்டாவது , அறிவியல் வளர்ச்சி தற்காலத்தில் அறிவுநிலை ஒரு மொழிச் சமூகத்தைக் கடந்த உலகம் தழுவியதாக இருக்கிறது. இந்த உலகளாவிய அறிவின் அடிப்படையில் பல அறிவு துறைகளின் கருத்துகளும் பிரச்சனைகளும் எழுதப்படுகின்றன. அளவில், பரந்த தன்மையில் வேறான இந்தப் புதிய அறிவு வெளியீட்டுக்கு ஈடுகொடுக்கிறது புதிய தமிழ். இவ்வாறு புதிய தமிழ் இரண்டு வகைகளில் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. தன் பரப்பை விரிவாக்கியிருக்கிறது. இவை இரண்டும் புதிய தமிழின் உள்ளடக்கத்தில் விரிவை ஏற்படுத்தி அதன்மூலம் மொழியின் பொருளிலும் வடிவத்திலும் - புதிய பொருள்கள், புதிய சொற்கள், புதிய தொடர்கள், புதிய நடைகள், புதிய வெளியீட்டு வடிவங்கள் என்ற முறையில் - மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

மேலே சொன்னவை தமிழின் உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்படுத்திய சமூகப் போக்குகள். சில சமூக மாற்றங்களின் விளைவாக தமிழை வெளிப்படுத்தும் சாதனங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. செய்தித்தாள்கள், இதழ்கள் போன்ற தகவல் தொடர்புச் சாதனங்கள் தோன்றியிருக்கின்றன. தமிழின் பரப்பு விரியும் போது அதன் நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற தற்காப்பு உணர்வு ஒரு சமூகப் போக்காக உருவாகிறது. இந்த இரண்டு சமூகப் போக்குகளும் புதிய தமிழின் வடிவத்தில் நேரடியான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. முதலாவது புதிய இலக்கியவாதிகளாலும் பத்திரிகையாளர்களாலும் கொண்டுவரப்பட்ட எளிமையாக்கம். இது மொழியைப் புரிந்துகொள்தலை அதிகமாக்க ஏற்படும் மாற்றம். இது பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்தல், சொல்லின் வடிவ வேறுபாடுகளைத் தவிர்த்து அதன் வடிவச்சிதைவைக் குறைத்தல் என்ற இரண்டு முறைகளில் செய்யப்படுகிறது.

இடைவெளியைக் குறைப்பது சொல்வடிவத்தை மட்டும் (Spelling) விட்டு விட்டு, உருபியல், தொடரியல், பொருளியல் முதலிய மற்ற எல்லா இலக்கண நிலைகளிலும் நடக்கிறது,'படிக்கும்போது', 'படிப்பவர்கள்' 'படிப்பிற்கு' போன்ற எழுத்து வழக்கு வடிவங்களோடு 'படிக்கிறபோது',

'படிக்கிறவர்கள்' , 'படிப்புக்கு' என்ற பேச்சுவழக்கு வடிவங்கள் பரவலாக எழுதப்படுகின்றன..'அவன் கோபங் கொண்டான்', 'அவன் கோபமடைந்தான்' என்ற எழுத்து வழக்குக்கே உரிய தொடர்களோடு 'அவன் கோபப்பட்டான்', 'அவன் கோபித்துக் கொண்டான்', அவனுக்கு கோபம் வந்தது', என்ற பேச்சு வழக்குத் தொடர்கள் பெருவழக்காகி வருகின்றன.

சொல்வடிவத்தைச் சிதைக்காமல் சிரிக்க, சந்தி நீக்கி கோபம் கொண்டனர்' கோபம் அடைந்தான்' என்றும் 'மரம் தான்', 'பல்பொடி' என்றும் எழுதும் வழக்கம் மிகுதியாகி வருகிறது. இவற்றில் பல்பொடி போன்ற எடுத்துக்காட்டுக்கள் பேச்சு மொழியின் உச்சரிப்போடு ஒத்துப் போனாலும் 'மரம்தான்' போன்ற எடுத்துக்காட்டுகள் உச்சரிப்பிலிருந்து வேறுபடுகின்றன. இதனால்தான் இடைவெளியைக் குறைப்பதையும் சொல்சிதைவைக் குறைப்பதையும் வேறுவேறு போக்குகளாகக் கொள்ளவேண்டும். நிறுத்தக் குறிகளைப் பயன் படுத்துவதும் மொழியைப் புரிந்துகொ ள்வதை அதிகப்படுத்துகிறது: எனவே அதுவும் எளிமையாக்கத்தின் ஒரு அம்சமே.

இரண்டாவது, தமிழ்ப் புலவர்களால் கொண்டுவரப்பட்ட தூய்மையாக்கம். இது மொழியை இனத்தின் அடையாளமாகத் தனிமைப்படுத்தும் நோக்கத்தில் பிறந்தது. இது பிறமொழிச் சொற்களையும், கொச்சைச் சொற்களையும் எழுத்துமொழியிலிருந்து விலக்குகிறது. மேலே உள்ள எடுத்துக் காட்டுத் தொடர்களில் 'கோபம்' என்பதற்குப் பதில் 'சினம்' என்ற சொல் ஏற்றதாகக் கொள்ளப்படும். இது சொல்லை மட்டும் மாற்றுவதல்ல. சொல்மாற்றத்தால் சில தொடர்களைப் பயன்படுத்த முடியாமல் போகலாம்.'அவன் 'சினப்பட்டான்"அவனுக்குச் சினம் வந்தது" என்பன வழக்கற்றவை : அல்லது வழக்குக் குறைவானவை . பழைய இலக்கியச் சொற்களை அல்லது புதிதாக உருவாக்கிய நீண்ட சொற்களை வழக்கில் உள்ள சொற்களுக்குப் பதிலாகத் தூய்மை கருதிப் பயன்படுத்தும் போது மொழியைப் புரிந்து கொள்ளுதல் குறையலாம். அப்போது எளிமையாக்கத்துக்கும் தூய்மையாக்கத்துக்கும் முரண் ஏற்படுகிறது. மொழியின் பரப்பு விரிவதன் விளைவாக புதிய தமிழுக்கு வரும் வட்டாரச் சொற்களையும் வழக்குகளையும் அயல்மொழிச் சொற்களையும் தொடர்களையும் தூய்மையாக்கம் மறுக்கவோ மறிக்கவோ முனையும்போது மொழியியல் முரண் ஏற்படுகிறது.. இப்படிப்பட்ட முரண்களின் ஊடாட்டத்தின் விளைவுதான் புதிய தமிழை இறுதியில் நிர்ணயிக்கிறது.

எந்த மொழியிலும் புதுமையாக்கத்தை மூன்று கூறுகளின் அடிப்படையில் விளக்கலாம். எந்தச் சமூகத்துக்கும் எந்த மொழிக்கும் பொருந்தும் இந்தப் பொதுக் கூறுகளின் அடிப்படையில் புதுமையாக்கத்தை விளக்கும்போது புதுமையாக்கத்துக்கும் மேனாட்டாக்கத்துக்கும் உள்ள வேறுபாடு விளங்கும். தமிழ் புதுமையடைய வேண்டும் என்று சொல்லும்போது ஆங்கிலம் போல் ஆகவேண்டும் என்று பொருளல்ல" அதாவது ஆங்கிலத்தை மாதிரியாகக் கொண்டு அதில் உள்ள கூறுகளையெல்லாம் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பொருள்அல்ல.

எந்த மொழியிலும் புதுமையாக்கத்தை மூன்று கூறுகளின் அடிப்படையில் விளக்கலாம். எந்தச் சமூகத்துக்கும் எந்த மொழிக்கும் பொருந்தும் இந்தப் பொதுக் கூறுகளின் அடிப்படையில் புதுமையாக்கத்தை விளக்கும்போது புதுமையாக்கத்துக்கும் (**Mopdernisation**) மேனாட்டாக்கத்துக்கும் (**Westernisation**) உள்ள வேறுபாடு விளங்கும். தமிழ் புதுமையடைய வேண்டும் என்று சொல்லும்போது ஆங்கிலம் போல் ஆகவேண்டும் என்று பொருளல்ல: அதாவது ஆங்கிலத்தை மாதிரியாகக் கொண்டு அதில் உள்ள கூறுகளை யெல்லாம் தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பொருள்அல்ல. புதுமையாக்கத்தின் விளைவாக, சில மொழிக்கூறுகளில் ஆங்கிலமும் புதிய காலத்தின் மொழி என்பதால், தமிழ் ஆங்கிலத்தின் அருகில் வரலாம். இதனால் ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் இடையே மொழி பெயர்ப்புத் தன்மை அதிகமாகலாம். இது இரண்டு மொழிகளும் மேற்கொண்ட புதுமையாக்கத்தின் பொதுக் கூறுகளின் விளைவேயன்றித் தமிழ் ஆங்கிலத்தின் கூறுகளை ஏற்றுக்கொண்டதன் விளைவு அல்ல. அதாவது, புதிய தமிழ் ஆங்கிலத்தின் போலி, அல்ல; புதிய காலத்தின் தேவைகளின் வெளிப்பாடு.

புதுமையாக்கத்தின் பொதுமையான மூன்று கூறுகளில் முதலாவது தொழில் நுட்பத்திறனை மொழிக்குக் கொண்டுவருவது. இடத்தையும் காலத்தையும் கடந்த மொழிப்பரிமாற்றத்துக்கும், மொழிப்பரிமாற்றத்தின் வேகத்தையும் எட்டலையும்(Reach) அதிகப்படுத்துவதற்கும், மொழியின் உள்ளடக்கத்தைப் பெருமளவில் சேமித்து வைப்பதற்கும் நொடியில் திரும்ப எடுத்து பயன்படுத்துவதற்கும் எழுத்துமுறை அச்சு /தட்டச்சு, தொலையச்சு, கணிப்பொறி முதலிய தொழில் நுட்பச் சாதனங்கள் துணைபுரிகின்றன. இந்தச் சாதனங்கள் மொழியின் வளத்தை (resource) முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கின்றன. தொழில் நுட்பம் இயற்கைவளப் பயன்பாட்டை அதிகப்படுத்துவதைப் போலவே மொழி வளப் பயன்பாட்டையும் அதிகப்படுத்துகிறது. புதியகாலத்தின் அடிப்படையான இன்றியமையாத தேவை இது.

புதுமையாக்கத்தில் இரண்டாவது கூறு மொழிவளத்தை விரிவு படுத்துவது. இது புதிய சொற்கள், புதிய நடைகள், புதிய வெளிப்பாட்டு வடிவங்கள் ஆகியவற்-

றைத் தோற்றுவிப்பதன்மூலம் செயல்படுத்தப் படுகிறது. இவை மொழிக்குப் பன்னிலையைத் தருகின்றன. தமிழில் அறிவியல் கலைச்சொற்கள், சட்டக் கலைச் சொற்கள் என்றும் இதழியல் நடை, நிர்வாக மொழி நடை என்றும் சிறுகதை வடிவம், விளம்பர வடிவம் என்றும் புதிய மொழி நிலைகள் தோன்றியிருக்கின்றன. இவற்றின் தோற்றத்தால் மொழியின் அமைப்பிலும் இலக்கணத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கலைச் சொற்களில் புதிய ஒலியன்களும் மெய்மயக்கங்களும், புதிய நடைகளில் புதிய தொடர்களும், புதிய வடிவங்களில் புதிய நடைகளில் புதிய ஒலியன்களும் மெய்மயக்கங்களில் புதிய தருக்க அமைப்புகளும் தொடர் அமைப்புகளும் (rhetorics) தோன்றியிருக்கின்றன.

புதுமையாக்கத்தின் மூன்றாவது கூறு புதிய சமூக மதிப்பீடுகளை வெளியிடும் வகையில் அமையும் மொழிப் பொருள் அமைப்பு (semantic Strucrute) மாறுதல்கள். மேலே குறிப்பாகச் சொன்னது போல, புதிய தமிழ்ச் சமூகத்தில் மதிப்பீட்டு மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதன் விளைவாக 'நாவிதன்', 'வண்ணான்', என்று பிறந்த குலத்தின் அடிப்படையில் உள்ள பெயர்கள் 'முடி திருத்துவோர்' 'சலவைத்தொழிலாளி' என்று ஏற்ற தொழிலின் அடிப்படையில் மாறிவருகின்றன. 'கணக்குப்பிள்ளை' என்ற சொல் பழைய மரபுகளின் தொடர்பாகவும் 'கணக்கர்' என்ற சொல் புதிய வணிக நிலையங்களின் தொடர்பாகவும் பயன்படுத்தப்பட்டு மரபும் புதுமையும் வேறுபடுத்தப்படுகின்றன. இதேபோல் உழவு, நெசவு, போன்ற மரபுத்தொழில்களின் கலைச்சொற்களுக்கு இணையாக இவற்றைப்பற்றிய கல்வித் துறைகளில் புதிய கலைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. 'மின்னல்' போன்ற இயற்கை ஆற்றலைக் குறிக்கும் சொற்களிலிருந்து மனிதனின் கண்டுபிடிப்புகளைக் குறிக்க 'மின்சாரம்' 'மின்னலை போன்ற சொற்கள் பிறந்திருக்கின்றன.

மொழியின் புதுமையாக்கம் சமூகப் போக்குகளால் நடைபெறுவதைப் பார்த்தோம். இந்த ஆக்கச் செயல் விரைவுபடுவதும்- சில சமயங்களில் துவங்குவதும் கூட இலக்கியவாதி, அரசியல்வாதி முதலியோரில் சிலருடைய தனிப்பட்ட செல்வாக்கினால் - அவர்களுடைய சமூக நிலைப்பாட்டால் - நடைபெறலாம். மக்கள் ஒன்று சேர்ந்து போராடும் இயக்கங்களாலும் ஏற்படலாம். இவை தவிர திட்டமிட்ட புதுமையாக்கமும் நடைபெறுகிறது. இது பெரும்பாலும் அரசாங்கத்தால் அல்லது அரசாங்கத்தின் உதவியோடு சிலர் கூடி முடிவெடுக்க நடைபெறுகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் புதுமையாக்கம் இவ்வாறு திட்டமிடப்படுகிறது. புதுமையாக்கத்தின் வேகத்தைஅதிகமாக்கவும் அது செல்லும் திசையை நிர்ணயிக்கவும் திட்டமிடுதல் உதவுகிறது.

திட்டமிடுதல் அதிகாரத்தில் உள்ளவர்களால் செய்யப்படுவதால் அவர்கள் செய்யும் புதுமையாக்கம் அவர்களுடைய சமூக மதிப்பீடுகளையே பிரதிபலிக்கும் மேலும் புதுமையாக்கம் மேலிருந்து வருவதால் மொழியோடு ஒட்டாமல் தனித்து நிற்கும் நிலையும் ஏற்படலாம். இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான அறிவியல், தொழில்நுட்ப, சட்டக் கலைச் சொற்கள் அந்தத் துறைகளைச் சார்ந்தவர்களால் பயன்படுத்தப்படாமல் அகராதிகளிலேயே முடங்கியிருக்கின்றன. அல்லது பாடப்புத்தகங்களோடு நின்று விடுகின்றன.

திட்டமிடுதல் அதிகாரத்தில் உள்ளவர்களால் செய்யப்படுவதால் அவர்கள் செய்யும் புதுமையாக்கம் அவர்களுடைய சமூக மதிப்பீடுகளையே பிரதிபலிக்கும் மேலும் புதுமையாக்கம் மேலிருந்து வருவதால் மொழியோடு ஒட்டாமல் தனித்து நிற்கும் நிலையும் ஏற்படலாம். இந்திய மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான அறிவியல், தொழில்நுட்ப, சட்டக் கலைச் சொற்கள் அந்தத் துறைகளைச் சார்ந்தவர்களால் பயன்படுத்தப்படாமல் அகராதிகளிலேயே முடங்கியிருக்கின்றன. அல்லது பாடப்புத்தகங்களோடு நின்றுவிடுகின்றன.

ஒரு மொழி பேசுவோரின் சமூக, பண்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் புதுமையாக்கம் நடைமுறைக்கு வந்தால் அது மொழியில் ஆழ்ந்த மாறுதல்களை ஏற்படுத்தும் இல்லையென்றால், மேல் பூச்சான ஒப்பனை வேலையாகவே இருக்கும். ஒரு நாட்டில் சமூகத்தின் உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சி இல்லாமல் புதுமைக் கூறுகள் அயல் நாடுகளின் உதவியால் வந்திறங்கலாம் என்று பொருளியலாளர்கள் கூறுகிறார்கள் . இத்தகைய புதுமையாக்கம் வேரற்ற மரம் போன்றது: சமூகத்தோடு ஒட்டாதது. திட்டமிட்ட புதுமையாக்கத்தில் மொழியில் இது நடக்க வாய்ப்பு இருக்கிறது. மேலே சொன்ன குழுக்கள் உருவாக்கும் கலைச்சொற்கள் இந்த வகையைச் சார்ந்தவை இப்படி மொழிக்கு வரும் கூறுகள் வளப்பமாகலாம். ஆனால் மொழி வளர்ச்சியாகாது.

மேலே புதிய தமிழில் சில கூறுகளையும் அவற்றை தோற்றுவிக்கும் காரணிகளான சமூகப் போக்குகளையும் பார்த்தோம். இந்தச் சமூகப் போக்குகள் மொழிமாற்றத்தைப் பற்றிய மற்றொரு முக்கியமான தன்மையைக் காட்டுகின்றன. எழுத்துத் தமிழைக் கையாளுவோர் தமிழறிஞர்கள் மட்டுமல்ல: தமிழ்ப் படைப்பாளிகள் மக்கள் தொடர்புச் சாதனர்கள், அறிவியலாளர்கள் என்று விரிந்திருக்கின்றர். இவர்களும் தமிழின் தன்மையை வரையறுக்கிறார்கள். எனவே புதிய தமிழின் இயல்பு பல்வேறு வாழ்க்கைப் பின்னணியும் நோக்கங்களும் கல்வித்தகுதியும் பயிற்சியும் கொண்டவர்களால் வரையறுக்கப்படுகிறது.

புதிய தமிழை உருவாக்குவதில் இவ்வாறு புதிய சமூகப்போக்கு களம் காரணர்களும் ஊடாடும்போது, அதனுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் (norms) என்ன என்ற கேள்வி எழுகிறது. பழைய இலக்கண நூல்கள் புதிய விதிமுறைகளுக்குப் பொருந்தி வரவில்லை. புதிய இலக்கண நூல்களும் தோன்றவில்லை. பழைய விதிகள் புறக்கணிக்கப்படாமலும் புதிய விதிகள் நிலைபெறாமலும் இருக்கின்ற நிலை உள்ளது. பழைய விதிகள் நிலைபெறாமலும் இருக்கின்ற நிலை உள்ளது. பழைய விதிகள் முற்றிலும் தள்ளப்படாமலும் புதிய விதிகள் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படாமலும் ஒரு சமூகம் இயங்குகின்ற நிலையைச் சமூகவியலாளர்கள் மயக்க நிலை என்பார்கள். புதிய தமிழைப் பொறுத்தவரை இத்தகைய மயக்கநிலை இருக்கிறது எனலாம்.

ஒரு நாட்டில் சமூகத்தின் உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சி இல்லாமல் புதுமைக் கூறுகள் அயல் நாடுகளின் உதவியால் வந்திறங்கலாம் என்று பொருளியலாளர்கள் கூறுகிறார்கள் . இத்தகைய புதுமையாக்கம் வேரற்ற மரம் போன்றது" சமூகத்தோடு ஒட்டாதது. திட்டமிட்ட புதுமையாக்கத்தில் மொழியில் இது நடக்க வாய்ப்பு இருக்கிறது. மேலே சொன்ன குழுக்கள் உருவாக்கும் கலைச்சொற்கள் இந்த வகையைச் சார்ந்தவை இப்படி மொழிக்கு வரும் கூறுகள் வளப்பமாகலாம். ஆனால் மொழி வளர்ச்சியாகாது.

புதிய விதிமுறைகள் பற்றிப் பேசும்போது தமிழைப் பொறுத்த வரை இந்தியத் தமிழுக்கும் இலங்கைத் தமிழுக்கும் ஒரே விதிமுறைகள் உள்ளனவா என்ற கேள்வி பிறக்கிறது. பேச்சுத் தமிழில் இரண்டுக்கும்விதிமுறைகள் வேறு என்பது தெரிந்த ஒன்று. எழுத்துத் தமிழில் இரண்டுக்கும் விதி முறைகள் ஒன்றே என்பது பரவலான நம்பிக்கை. திட்டமிட்ட மொழிமாற்றத்தில் குறிப்பாகச் கலைச் சொல்லாக்கத்தில் இரண்டு நாடுகளிலும் வெவ்வேறு போக்குகள் தெரிகின்றன. இரண்டு நாட்டுத் தமிழ் மக்களுடைய சமூக மதிப்பீடுகளும் சமூகப் போக்குகளும் ஒன்றாக இருந்தால் விதிமுறைகள் ஒன்றாக இருக்கும். இதை முடிவு செய்ய ஆய்வு தேவை ஆய்வுதான் புதிய தமிழ் இரண்டாக அல்லது இரண்டு வகைகள் கொண்ட ஒரு புதிய தமிழா என்று முடிவு செய்ய வேண்டும். இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை வளர்ப்பதிலும் குறைப்பதிலும் அகராதி பெரும்பங்கு வகிக்கும்.

புதிய தமிழின் கூறுகளை நிலைப்படுத்த, புதிய விதிமுறைகளை வகுக்கச் சில சாதனங்கள் தேவை.சில சமூகங்களில் மொழியாசிரியர்கள் இந்தச் சாதனங்களாக விளங்குகின்றார்கள். சில சமூகங்களில் மொழிக் கடிதங்கள் இந்தப் பணியைச் செய்கின்றன. சில சமூகங்களில் மேற்கோள் நூல்கள் (**reference books**) அந்தப் பணியைச் செய்கின்றன. தமிழைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களும் கழகங்களும் பழமையின் மாறாத்தன்மையிலும் அதிகார வழியிலும் நம்பிக்கை வைத்திருப்பதால், புதிய விதிமுறைகளைக் கொண்டுவர, மயக்க நிலையைக் குறைக்க மேற்கோள் நூல்கள் தேவைப்படுகின்றன. மேற்கோள் நூல்களில் புதிய இலக்கண நூல் தேவைப்படுகின்றன. மேற்கோள் நூல்களில் புதிய இலக்கண நூல்கள், அகராதிகள், மொழிப் பயன்பாட்டுக் கையேடுகள் முதலியன முக்கியமானவை. புதிய தமிழுக்கு இவை தேவை. இவை இக்காலத் தமிழின் தரவுத் தொகுப்பின் அடிப்படையில் அமைய வேண்டும்.

புதிய மேற்கோள் நூல்கள் புதிய தமிழை வரையறுப்பதற்கும் விதிப்படுத்துவதற்கும் வருவதில் நன்மைகள் இருக்கின்றன. நூல்கள் எல்லோருக்கும் பொதுவானவை: அவற்றில் உள்ள செய்திகளை விரும்பிய நேரத்தில் தெரிந்து கொள்வதற்கு எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. ஆசிரியர்களோ, தங்களிடம் வருபவர்களையோ தாங்கள் தரும் செய்திகளையோ, தங்கள் விருப்பப்படி கட்டுப்படுத்த முடியும். விதிமுறைகளைப் பற்றிய கருத்துகளில் அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் செல்வாக்கு இருக்கலாம். அகராதி முதலான மேற்கோள் நூல்கள், இன்று எழுதப்படும் தமிழ் நூல்களை வகைப்படுத்தித் தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும்போது அவற்றுக்குச் சமூகப் பிரதிநிதித்துவமும் அதன்மூலம் சமூக ஏற்பும் கிடைக்கிறது. இம்முறையில் அகராதி தரும் செய்திகள் அதைத் தொகுத்தவரின் அல்லது அதை வெளியிட்டவரின் கருத்தாக அல்லாமல் சமூக மதிப்பீடுகளைப் பிரதி பலிக்கும் கருத்தாக அமைகிறது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இந்த முறையில் தற்காலத் தமிழின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தற்கால எழுத்துக்களிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பொருளைத் தற்காலப் பயன்பாட்டின் அடிப்படையில் வரையறுத்திருப்பதன் மூலம் இது தற்காலத் தமிழை வரையறுக்கிறது.

பழஞ் சொற்களையும் கொச்சைச் சொற்களையும் நீக்கிச் செய்த சொல் தெரிவு இந்த வரையறுப்பை உறுதி செய்கிறது. அருகிவரும் சொல், பெருகிவரும் சொல், உயர்சொல், இலங்கைச்சொல் என்று சொற்களுக்கு வழக்குக் குறிப்புத் தந்திருப்பது புதியது தமிழின் இயங்கு சக்தியைக் காட்டுகிறது. ஒவ்வொரு சொல்லுக்கும் தந்துள்ள பொருள் பகுப்பும் பொருள் வரையறையும் தற்காலத் தமிழின் பொருள் விரிவையும் பொருள் மாற்றத்தையும் காட்டுகின்றன. இவை தமிழின் புதுமையாக்கக் கூறுகளை வெளிப்படுத்துகின்றனவா


என்று ஆராய்வது இக்காலத் தமிழ். மேலே சொன்ன பொருளில் புதிய தமிழா என்று காட்ட உதவும்.

இந்த அகராதி புதிய தமிழின் விதிமுறைகளை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறது. சொற்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் இருக்கும்போது ஒன்றின் கீழ் மட்டுமே பொருள் வரையறை தந்து புதிய தமிழில் அதன் சமூக ஏற்பைச் சுட்டி விதிமுறை செய்கிறது. இதேபோல் சில சொற்கள் இந்தத் துறைகளில், இந்த இலக்கண அமைப்புகளில் மட்டும் வழங்கும் என்று துறை இலக்கண வழக்குக் குறிப்புகள் தந்து மொழிப் பயன்பாட்டின் விதிமுறைக்கு வழி வகுக்கிறது.

இருத்தலியல், பெண்ணுரிமை போன்ற புதிய காலக் கருத்துச் சொற்களுக்கு விரிந்த துல்லியமான பொருள் தந்து அவற்றின் பொருளை நிலைப்படுத்துகிறது.

இவ்வாறு தமிழில் புதுமையாக்கம் நடந்திருக்கிறதா என்று பார்க்கவும், வந்திருக்கிற புதுமைக் கூறுகளை நிலைப்படுத்தவும் இந்த அகராதி உதவுகிறது. புதிய தமிழின் விதிமுறைச் சாதனமாக விளங்கவும் தகுதி பெற்றிருக்கிறது.

விதிமுறைப் பணியை அகராதி சரிவரச் செய்ய வேண்டுமானால் அகராதியைப் பயன்படுத்தும் பழக்கம் தமிழர்களிடையே வர வேண்டும் சொல்லின் வடிவத்தைப் பற்றியோ, பொருளைப் பற்றியோ சந்தேகம் வரும்போது பெற்றோர்களும் ஆசிரியர்களும் தாங்களே விடையைத் தராமல் பிள்ளைகளை அகராதியைப் பார்க்கத் தூண்ட வேண்டும். வீட்டுக்கு ஒரு பஞ்சாங்கம் இருப்பது போல் வீட்டுக்கு ஒரு அகராதி இருக்க வேண்டும். நாள் பார்ப்பது போல் சொல் பார்ப்பதும் பண்பாட்டுப் பழக்கமாக வேண்டும். இந்தப் பழக்கம் புதிய காலத்தின் பழக்கம். புதிய சமூக மதிப்பீட்டின் நடைமுறை வெளிப்பாடு. ஆகவே, அது தமிழர் சமூகம் புதிய சமூகம் ஆவதன் அடையாளம். புதியமொழி மட்டுமல்லாமல் புதிய மொழிப் பழக்கங்களும் புதிய சமூகத்தின் தேவைகள் புதிய தமிழ்ச் சமூகத்தின் இந்தத் தேவைகளைத் தமிழ் எந்த அளவு நிறைவு செய்கிறது என்பது அதன் எதிர்காலத்தை முடிவு செய்யும்.



# அஞ்சலி

சிலரது தகுதியால் அவர்கள் மேற்கொள்ளும் தொழில் தகுதி பெறும் அத்தொழில் சிறப்பால் அவர் மேலும் தகுதி பெறுவார். இவ்வாறான பண்பு மாற்றத்துக்கு வித்திட்டவர் தான் யாழ் இந்துக்கல்லூரி மரபு வழிவந்த ஆசிரியர் க. சிவராமலிங்கப்பிள்ளை. இவர் கடந்த மாதம் காலமாகிவிட்டார். இவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது அகவிழியில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தவர்.

அகவிழி 2005 ஏப்ரல், மே இதழில் அவரது நீண்ட செவ்வி இடம் பெற்றிருந்தது. அதைவிட 2005 யூலை 21,22,23ந் திகதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் அகவிழியும் இணைந்து நடத்திய கல்வி மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தவர். இதுவே அவர் கடைசியாகக் கலந்து கொண்ட நிகழ்ச்சி. அந்த மாநாட்டில் மூத்த ஆசிரியப் பெருந்தகைகளுள் ஒருவராக கௌரவிக்கப்பட்டார்.

மாநாட்டின் முதல் அமர்வான " தமிழர் கல்வி ஊற்றுகளும் ஓட்டங்களும்" எனும் பொதுத் தலைப்பில் இந்துக் கல்லூரிச்சபை, ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் தொடர்பாக கருத்துரை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டையும் பற்றியும் பேசுவதற்கு அடிப்படைத் தகவல்களை தேடமுற்பட்ட பொழுது ஏற்பட்ட துன்பங்களை அப்பொழுது அவர் பகிர்ந்து கொண்டார். ஆய்வு நிலைநின்று விடயங்களைப் பார்ப்பதற்கு எம்மிடையே அடிப்படைத் தரவுகள் ஆவணங்கள் இல்லாத குறையை சுட்டிக்காட்டினார்.

சிவராமலிங்கம் சேர் இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவரிடம் கல்வி கற்ற மாணவர் குழாம் நீண்டது. அந்தத் தொடர்ச்சியாக புலமை மரபில் சிவராமலிங்கம் சேரின் ஆளுமை தூக்கலாகவே இருக்கும். ஆசிரியராகவே இருந்துவிட காலம் கனிய. தன்னை ஆசிரியராக்கிக் கொண்டார். தொடர்ந்தும் ஆசிரியராகவே வாழ்ந்தார். ஆசிரியராக இருந்து எத்தனையோ மாணவ மணிகளை சந்தித்து விட்டேன் என்று சந்தோஷம் அவரை ஆட்கொண்டிருந்தது. "இது வாழ்வின் பெரும் பயன் என்றே" கருதிச் செயற்பட்டார். வாழ்ந்தார்.

எமக்கு வழங்கிய செவ்வியில் கடைசியாக அவர் குறிப்பிட்டது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. என்று நான் "ஆசிரியன் தான்" என்று முடிவு செய்து கொண்டேனோ அன்றிலிருந்தே ஆசிரியர் தொழிலைத் தெய்வத்தொண்டு என்ற நினைந்து தொழிற்பட்டேன். இது வெறும் கூற்றல்ல அவரது வாழ்வின் ஆளுமையின் உயிர்ப்பான இது இன்றைய ஆசிரியர் சமூகத்துக்கு அவர் வழங்கிச் சென்ற தேவவாக்கு.

— மது —

# ஆசிரியர் பிள்ளைகளின் கல்வி - புதிய கவனம்

ஆசிரியர்கள் தம் தொழிலில் உண்மையான ஈடுபாடு காட்டி வருகின்றனரா என அவர்களது தொழில்சார் பெறுபேறுகளைக் கொண்டு அளவிடுவதில் பிரச்சினைகள் உள்ளன. ஏனெனில் ஆசிரியர் பங்களிப்பை தொகை ரீதியில் கண்ணுக்குப் புலனாகக் கூடிய வெளியீட்டினால் அளவிடமுடியாது. ஒரு ஆடை தைக்கும் தொழிலாளியின் வேலைத் திறனை அளவிடுவதற்கு நாளொன்றில் அவர் தைத்த ஆடைகளின் எண்ணிக்கை பயன்படுகின்றது. அவ்வாறான தொகை மாதிரி வெளியீடுகளை ஆசிரியர்கள் உருவாக்குவது இல்லை.


மா. சின்னத்தம்பி
*M. A. (Econ.), M.Phil*
தலைவர் — கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## அறிமுகம்

ஆசிரியர்களின் வாண்மையியலைப் பலவீனப்படுத்திவரும் பிரச்சினைகளுள் முதன்மையானது. ஆசிரியர்கள் தமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு தரமான கல்வி வழங்கும் பாடசாலைகளின் அனுமதி பெற முடியாதிருப்பதாகும். தாம் ஈடுபடும் தொழிலின் உத்தம பயன்பாடுகளைத் தமது பிள்ளைகள் பெற முடியாதிருப்பது பற்றி ஆசிரியர் ஒவ்வொருவரும் தனித்தனியாக வருத்தம் கொண்டுள்ளனர். தமது தொழிலாற்றும் ஊக்கத்தைப் பெரிதும் பாதித்து வருவதாக அடிக்கடி கருத்துத் தெரிவிக்கின்றனர். இதற்கு தீர்வு ஏதுமில்லையா? இத்தீர்வுகளைத் தேடி நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு இல்லையா? இவை தொடர்பான விடயங்கள். இங்கு பரிசீலிக்கப்படுகின்றன.

## ஆசிரியர் தொழில் ஊக்கம்.

ஆசிரியர்கள் தம் தொழிலில் உண்மையான ஈடுபாடு காட்டி வருகின்றனரா என அவர்களது தொழில்சார் பெறுபேறுகளைக் கொண்டு அளவிடுவதில் பிரச்சினைகள் உள்ளன. ஏனெனில் ஆசிரியர் பங்களிப்பை தொகை ரீதியில் கண்ணுக்குப் புலனாகக் கூடிய வெளியீட்டினால் அளவிடமுடியாது. ஒரு ஆடை தைக்கும் தொழிலாளியின் வேலைத் திறனை அளவிடுவதற்கு நாளொன்றில் அவர் தைத்த ஆடைகளின் எண்ணிக்கை பயன்படுகின்றது. அவ்வாறான தொகை மாதிரி வெளியீடுகளை ஆசிரியர்கள் உருவாக்குவதில்லை. இதனால் ஆசிரியர்களின் நாளாந்த வேலைத்திறனை மதிப்பிடுவது கடினமானதாயுள்ளது. நீண்டகாலத்தில் பிள்ளைகளின் பரீட்சை அடைவுகள், பிற ஆற்றுகைகள் என்பவற்றின் அடிப்படையில் அளவிடமுடியுமாயினும் அதிலும் பின்வரும் தெளிவின்மைகள் உள்ளன.

- ✳ ஒரு மாணவனின் பெறுபேறு, ஆற்றுகை என்பவற்றில் குறித்த ஆசிரியரின் பங்களிப்பை பிரித்தொதுக்க முடியாமை. இதில் பல ஆசிரியர்களின் கூட்டுப் பாதிப்பு உள்ளது. பாடசாலையின் பிற ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களினதும் பங்களிப்பும் சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பாடசாலை ஆசிரியர் ஒருவரின் தனியான பங்களிப்பை பிரித்தறிய முடியாது.
- ✳ ஒரு மாணவனின் பெறுபேறுகளிலும் ஆற்றுகைகளிலும் பிள்ளையின் தனிப்பட்ட மதிநுட்பம், பெற்றோரின் உதவி மற்றும் ஊக்கம் என்பவற்றின் செல்வாக்கும் குறிப்பிடத்தக்கதாக காணப்படுகின்றது. பாடசாலை பொதுவாக பிள்ளைகளுக்கு வழங்கும் வசதிகளும் வாய்ப்புக்களும் இதில் குறிப்பிட த்தக்களவு பங்கு வகிக்கின்றன.

இத்தகைய பெறுபேற்றை அளவிடும் சிக்கல் காரணமாக ஆசிரியர்களின் ஊக்கம் குறைந்து செல்வதை மதிப்பிடும் முறைகள் எதுவும் பாடசாலைகளில் திருப்திகரமாக இல்லை .

பல ஆசிரியர்கள் தமது பிள்ளைகள் தரமான கல்வி வழங்கப்படுகின்ற மற்றும் சிறந்த உட்கட்டமைப்புள்ள வசதி மிக்க பாடசாலைகளில் கற்பிக்க முடிவதில்லை என்ற மனக்குறையினால் கற்பிக்கும் ஊக்கத்தை இழந்து விடுகின்றனர். தமது தொழில், வாழ்நாளில் ஒருபோதும் தம்மை மிகப் பெரும் செல்வந்தனாக மாற்றிவிடாது என்பது பற்றிய தெளிவினால் ஏற்கனவே அவர்களது அடிமனதில் ஆற்றாமையுள்ளது. ஆகக் குறைந்தது தமது பிள்ளைகளுக்கு சீரான கல்வியைப் பெற்றுக் கொடுப்பது

தமது கடமை; அதுவே செய்யக் கூடியது என்று பெரும்பாலான ஆசிரியர்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் பெரிய பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதிக பாடசாலைகள் தமது பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்க முடியாதுள்ளனர். ஏனெனில் நாற்பது ஆசிரியர்களிருப்பின் ஆசிரியர்களின் பிள்ளைகள் நாற்பது பேருக்கு அனுமதி வழங்குவதில் சிக்கல்கள் உள்ளன.

தற்போது பாடசாலை அனுமதி தொடர்பாக மிகவும் கடுமையான அணுகுமுறைகளும், சட்டங்களும் கொண்டு வரப்படுகின்றன. இந்தநிலையில் ஆசிரியர் தம் பிள்ளைகளுக்கு வசதிமிக்க சூழலில் தரமான கல்வியை வழங்குவதற்கு ஆவலாக உள்ளனர். இது முன்னனிப் பிரச்சினையாகிவிட்டது. இதற்கான மாற்றுத் தீர்வு பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது.

## ஆசிரியர் பிள்ளைகளுக்கான தனியான பாடசாலைகள்

ஆசிரியர்கள் ஏறக்குறைய இரண்டுலட்சம் பேர் உள்ளனர். இவர்களில் பாடசாலை ஆசிரியர்களும் அதிபர்களும் உள்ளனர். பாடசாலை முறைபற்றிய போதிய அறிவும் இவர்களிடமுண்டு. இவர்கள் தமது பிள்ளைகளுக்கு என தனியான பாடசாலைகள் தொகுதியை உருவாக்குவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தற்போது தனியார் பாடசாலைகளைத் தொடங்குவது தொடர்பாக தடையேதுமில்லை. தாராள அனுமதியுள்ளது. இதனால் ஆசிரியர் பிள்ளைகளுக்கான பாடசாலைகள் (Schools for Teachers Children) (STC) என்ற பெயரில் கல்வி மாவட்டங்கள் தோறும் தரமான பாடசாலைகளை உருவாக்க முடியும். ஆசிரியர் பிள்ளைகள் பற்றிய விபரங்களை மாவட்டம் தோறும் திரட்டி எத்தனை பாடசாலைகள், எத்தகைய தர நிலையில் எங்குநிறுவப்பட வேண்டும், என்பது பற்றிய செயற்திட்டம் ஒன்றைத் தெளிவாக தயாரிக்க வேண்டும்.

> பல ஆசிரியர்கள் தமது பிள்ளைகள் தரமான கல்வி வழங்கப்படுகின்ற மற்றும் சிறந்த உட்கட்டமைப்புள்ள வசதி மிக்க பாடசாலைகளில் கற்பிக்க முடிவதில்லை என்ற மனக்குறையினால் கற்பிக்கும் ஊக்கத்தை இழந்து விடுகின்றனர். தமது தொழில், வாழ்நாளில் ஒருபோதும் தம்மை மிகப் பெரும் செல்வந்தனாக மாற்றிவிடாது என்பது பற்றிய தெளிவினால் ஏற்கனவே அவர்களது அடிமனதில் ஆற்றாமையுள்ளது.

* தகுதிமிக்க ஆசிரியர்களை இளம்பட்டதாரிகளிலிருந்து தெரிவு செய்து முன்னாரம்பப் பயிற்சி வழங்கி கற்பிக்கும் ஆளணியாக மாற்றிவிடலாம்.
* பாடசாலை முகாமைத்துவத்தை திறமையான முகாமைத்துவ நிறுவன உதவியுடன் புதிய மாதிரியில் உருவாக்கிவிடலாம்.
* இத்தகைய பாடசாலைகளை அரச பாடசாலைகளுக்கு சமாந்தரமாக நிர்மாணிக்க வேண்டும். இதற்குத் தேவையான நிதியை ஆசிரிய தொழிற் சங்கங்கள், ஆசிரிய சிக்கனச் சங்கங்கள், கல்வியமைச்சு ஆகியவற்றிடமிருந்து பெறலாம்.
* அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியையும் பெறலாம். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் பங்குகள் (Shares) மூலம் நிதியிடலாம். தேவையெனில் வர்த்தக வங்கிகளிடம் கடன் பெறலாம். முழுமையான சுயநிதிப்பாடசாலைகளாக இவற்றை உருவாக்கிக் கொள்ளலாம்.
* படிக்கும் பிள்ளைகளிடம் கட்டணம் அறவிட வேண்டும். இதனால் தரமான கல்வியை வழங்க முடிவதோடு பிள்ளைகள் பொறுப்புணர்வுடனும் கற்குமாறு செய்யலாம்.
* முன்பள்ளியும்,ஆரம்பப் பாடசாலையும் கொண்ட பாடசலைகளைத் தனியாக உருவாக்கிக் கொள்ள முடியும். உட்கட்டமைப்பு கற்றல் - கற்பித்தல் சாதன வசதி என்பவற்றை இதற்கேற்றதாக உருவாக்கிக் கொள்ளலாம் மேலதிக எண்ணிக்கையான மாணவர்களைச் சேர்ப்பதாயின் மாலை நேர வகுப்புக்கள் கொண்ட இரண்டாவது பாடசாலையையும் அதே வேதனங்களைக் கொண்டு உருவாக்குவது நன்று தரமான கல்வி வழங்கப்பட்டால் பெற்றோரான ஆசிரியர் இதனை ஏற்றுக்கொள்வர்.

இடைநிலைக்கல்விக்கென தனியான பாடசாலை ஒழுங்குமுறையைக் கையாள முடியும். ஆறாம் தரத்திலிருந்து பதினோராம் தரம் வரை தனியான பாடசாலை முறையில் எல்லா கட்டமைப்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும். புறக்கலைத்திட்ட ஏற்பாடுகளையும் பதில் தேவைகளுடன் ஏற்படுத்தலாம். ஆற்றல் மிக்கவர்களுக்கு தனியான வகுப்பறை மற்றும் கற்பித்தல் ஏற்பாட்டைச் செய்யலாம். மெல்லக் கற்போருக்கு தனியான கற்பித்தல் முறைகள் தேவை. மேலதிக ஆசிரியர் உதவி, தூண்டல் தேவை. இத்தகைய இரட்டை வகுப்பறை ஏற்பாடு விரும்பத்தக்கது. அதீத மதிநுட்பமுடைய மாணவரை இனங் கண்டு மேலதிக பாடங்கள், மேலதிக புறக் கலைத்திட்ட வாய்ப்புக்கள் என்பவற்றை வழங்கி வரவேண்டும். இதனால் காலவிரையம் தவிர்க்கப்பட்டு 'மதிநுட்ப மாணவர் அணி' ஒன்றை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இலங்கையில் எல்லா மாணவரும் சராசரியான தகைமையுடைய-

வர்கள் என்றும் சராசரியான மதிநுட்ப வளர்ச்சி போதுமானதென்றும் எடுகோள் கொண்டு அதன்படியே பாடசாலை முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவறு.

தேசத்திற்கான விஞ்ஞானிகளையும், ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்குவதற்கு மதிநுட்பமாணவர் அணி அவசியமாகின்றனர். இதற்குரிய முன்மாதிரிப் பாடசாலைகளை தொடங்கவேண்டியவர்கள் ஆசிரியர்களே தமது பிள்ளைகளுக்கு இவற்றை அறிமுப்படுத்தி வெற்றியை உருவாக்கினால் ஏனையவர்களும் இத்தகைய பாடசாலை முறையைப் பின்பற்றுவர். விரைவாக கற்கவும், நீண்டநேரம் பணியாற்றவும், நுட்பத்திறன்களை விருத்தி செய்யவும், ஆராய்வூக்கத்தை வளர்க்கவும் கூடியதாக இவர்களுக்குரிய கலைத்திட்டமும் மறைக்கலைத்திட்டமும் உருவாக்கப்படல் வேண்டும்.

மெல்லக் கற்கும் மாணவர், மீத்திறன் மிக்க மாணவர் ஆகிய இரண்டு பிரிவினரையும் இதனால் முன்னேற்ற முடியும்.

> க.பொ.த.உயர்தர வகுப்புக்கான பாடசாலையைத் தனியாக உருவாக்க வேண்டும். அல்லது இடைநிலைப் பாடசாலைகளிலேயே தனியான பிரிவாக நிர்வகிக்கவேண்டும். மாணவர்களினதும் பெற்றோர்களினதும் இயல்பும் எதிர்பார்க்கையும் மாறிவிட்டது. தனியார் கல்வி நிலைய செல்வாக்கு வளர்ந்து சமூக அங்கீகாரம் பெற்று விட்டது. தொழில்சார் வாய்ப்புக்களையும் பாடசாலை முறைமையுடன் இணைக்க வேண்டும்

* க.பொ.த.உயர்தர வகுப்புக்கான பாடசாலையைத் தனியாக உருவாக்க வேண்டும்.அல்லது இடைநிலைப்பாடசாலைகளிலேயே தனியான பிரிவாக நிர்வகிக்கவேண்டும். மாணவர்களினதும் பெற்றோர்களினதும் இயல்பும் எதிர்பார்க்கையும் மாறிவிட்டது. தனியார் கல்வி நிலைய செல்வாக்கு வளர்ந்து சமூக அங்கீகாரம் பெற்று விட்டது. தொழில்சார் வாய்ப்புக்களையும் பாடசாலை முறைமையுடன் இணைக்க வேண்டும் இத்தகைய பல புதிய தேவைகள் உருவாகிவிட்டன. இத்தகைய பாடசாலை மாதிரியை உருவாக்குவதற்கு பின்வருவனவற்றைக் கவனத்தில் வேண்டும்.

### 1. புதிய நேர அட்டவணையும், பாடசாலை நாட்களும்.

1.1 திங்கள் , செவ்வாய், வியாழன்,வெள்ளி, கிழமைகளில்

| | |
|---|---|
| 9.00-10.00 | 1ம் பாடம் |
| 10.00-11.00 | 2ம் பாடம் |
| 11.00-11.30 | இடைவேளை |
| 11-30 -12.30 | 3ம் பாடம் |
| 12.30 -1.30 | கல்வி மற்றும் தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும். |

1.2 புதன்கிழமைகளில் தனியே வினா விடை கலந்துரையாடல், கட்டுரை வகுப்பு, முன்மாதிரிப் பரீட்சைகள் என்பவற்றை சுழல் முறையில் திட்டமிட்டபடி நடாத்துதல்.

| | |
|---|---|
| 9.00 - 10.00 | 1ஆம் பாடம் |
| 10.00 - 11.00 | 2ஆம் பாடம் |
| 11.00 - 11.30 | இடைவேளை |
| 11.30 - 12.30 | 3ஆம் பாடம் |
| 12.30 - 1.30 | 4. ஆம் பாடம் |

1.3 புதன் கிழமைகளில் 3.00 மணியிலிருந்து 5.00 மணிவரை பாடசாலை அதிபர், உபஅதிபர் ஆசிரியர்கள், மாணவர்களின் பிரதிநிதிகள் (ஒருவகுப்பிலிருந்து குறைந்தது இருவர்) ஆகியோர் கொண்ட மதிப்பீட்டுச் சபைக் கூட்டம் நடைபெறல் வேண்டும். மாணவர் தேவைகள், பிரச்சினைகள், ஆசிரியர் தேவைகள் பிரச்சினைகள் என்பன பற்றியும் பெற்றோரின் அபிப்பிராயம் பற்றியும் கலந்துரையாடல் வேண்டும் முன்மாதிரிப் பரீட்சைகளின் விடைத்தாள்களை மாணவர்களுக்குக் கொடுத்து அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்தும் முறை புற்றியும் விளக்கமளிக்க வேண்டும்.

பாடசாலைக்கான செயற்திட்டங்கள் பற்றியும் இதில் கலந்துரையாடி சிறந்த வகையில் அவற்றைத் தயாரிக்க வேண்டும். பாடசாலைத் திட்டங்களையும் இதே வகையில் தயாரிக்க முடியும்.

1.4 மாதத்தின் இறுதியில் வரும் புதனன்று கிழமைகளில் காலை 9.00 -1.00 மணிவரை தொழில் உலகு பற்றிய விழிப்புணர்வுக்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப் படுத்த வேண்டும். வங்கி முகாமையாளர், காப்புறுதி நிறுவனப் பணிப்பாளர், அரச சார்பற்ற நிறுவன செயற்திட்ட அதிகாரிகள், பிரதேச செயலாளர்களின் திட்டமிடல் பணிப்பாளர்கள். ஊடகத்துறை நிபுணர்கள் போன்றவர்கள் கருத்தரங்குகளையும், செயலமர்வுகளையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்

இதில் பின்வரும் பயனாளிகள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

(1) க.பொ.த சாதாரண வகுப்பு (11ம் தர) மாணவர்கள்

(2) க.பொ.த உயர்தர வகுப்பு (12ஆம் 13ஆம் தர ) மாணவர்கள்

(3) பாடசாலையில் அதே வகுப்புக்களில் கற்பிப்போர்

(4) மாணவர்களின் பெற்றோர் (முன் அனுமதி பெற்றவர்கள்) இவர்கள் ஒரு ஒழுங்குமுறையில் அழைக்கப்படுவது விரும்பத்தக்கது.

1.5 திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் 3.00 மணியிலிருந்து 6.00 மணிவரை கணினிக்கல்வி, ஆங்கிலக்கல்வி என்பவற்றை நடைமுறையில் பிரயோகிக்கும் மாதிரியில் கற்பித்தல் வேண்டும்.

ஜேர்மனி, ஜப்பான், பிரெஞ்சு, ஹிந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெறுவதற்கான வசதிகளையும் உருவாக்க வேண்டும். மாணவர் விருப்பத்திற்கும் , கற்கும் விரைவுக்கும் ஏற்ப இவற்றில் யாதேனும் இரண்டு மொழிகளைக் கற்பது மிகவும் பயனுடையது.

1.6 இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வார இறுதியில் இரண்டு நாட்கள் (வெள்ளி, சனி) தொழிலிடங்களைப் பார்வையிடவும்.தமக்குரிய வாழ்க்கைத் தொழில் பற்றிய புலக் காட்சியை ஏற்படுத்தவும் முடியும். ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், விமானப்பயண முகவர்கள், சர்வதேச வங்கிகள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் உயர் அலுவலர்க்கான பயிற்சி நிறுவனங்கள், ஒலி, ஒளிபரப்பு நிலையங்கள், மிகப் பெரிய தாழிற்சாலைகள் பெரிய வியாபார நிலையங்கள், செயற்திட்ட வேலைப் பகுதிகள் போன்ற பலவற்றையும் மாணவர் அணி திட்டமிட்டு முன் அனுமதி பெற்று பார்த்து கலந்துரையாடி வரவேண்டும். பெரிய நிதி நிறுவனங்களின் நிதி அனுசரணையை இவற்றுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனால் பாடசாலை தொழில் உலகுடன் இணைவதற்கான உளவியல் அடித்தளத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். பாடசாலைகளைப் பாடதிட்டங்களைக் கற்பதற்காக மாத்திரம் நிர்வகிக்கக் கூடாது. இவ்வாறு நிர்வகித்து வந்தமைதான் இலங்கைப் பாடசாலை முறைமை தனது வினைத் திறனையும், விளைத்திறனையும் பேண முடியாமற் போனமைக்குக் காரணமாகும். இதனால் புதிய மாதிரியில் சிந்திப்பதும், செயற்படுத்துவதும் மிகவும் அவசியம். மாணவர்களைப் பரீட்சைகளை நோக்கி மாத்திரம் நகர்த்திவந்த பாடசாலை முறை திருப்தி தரவில்லை, இதனால் கல்வியை தொழில்நாட்டத்தையும் தொழில் நிறுவனங்களையும் நோக்கி நகர்த்தக்கூடிய ஒன்றிணைந்த அணுகுமுறை தேவை. அனைத்தையும் உள்ளடக்கக் கூடிய செயற்பாடுகள் தேவை. இத்தகைய மாதிரியில் சிந்தித்து புதிய பாடசாலை செயலமைப்பை அறிமுகப்படுத்தக் கூடிய எல்லா தகைமையும் இலங்கை ஆசிரியர்களுக்கு உண்டு என்பதை நாம் எல்லோரும் நம்புதல் வேண்டும்.

பாடசாலைகளைப் பாடதிட்டங்களைக் கற்பதற்காக மாத்திரம் நிர்வகிக்கக் கூடாது. இவ்வாறு நிர்வகித்து வந்தமைதான் இலங்கைப் பாடசாலை முறைமை தனது வினைத்திறனையும். விளைத்திறனையும் பேண முடியாமற் போனமைக்குக் காரணமாகும். இதனால் புதிய மாதிரியில் சிந்திப்பதும். செயற்படுத்துவதும் மிகவும் அவசியம். மாணவர்களைப் பரீட்சைகளை நோக்கி மாத்திரம் நகர்த்திவந்த பாடசாலை முறை திருப்தி தரவில்லை. இதனால் கல்வியை தொழில் நாட்டத்தையும் தொழில் நிறுவனங்களையும் நோக்கி நகர்த்தக்கூடிய ஒன்றிணைந்த அணுகுமுறை தேவை.

* திறந்த பாடசாலை முறையையும் (Open School System) ஆசிரியர்கள் தொடங்குதல்வேண்டும் சார்க் (SAARC) அமைப்பினால் ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த பாடசாலை முறையைத் தற்போது துரிதமாக செயல்படுத்துவதற்கு கல்வியமைச்சராகிய சனாதிபதி முனைப்புப் பெற்றுள்ளார். ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலையுடன் இத்திறந்த பாடசாலையையும் இணைத்துக் கொள்ளமுடியும். எல்லாப் பாடசாலைகளிலும் இதனை மேற்கொள்ள வேண்டியதில்லை தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளிலேனும் இதனை நடைமுறைப்படுத்தலாம்.

தமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள காரணிகளினால் தமது பாடசாலை வயதிலேயே கற்கும் வசதிளை இழந்த பிள்ளைகளுக்கு மீண்டும் கற்பதற்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் அக்கல்வி வழங்கும் மிகச் சில வருடங்களில் இழந்த கல்வியைக்கற்று உயர்கல்வி பெறும் வாய்ப்பில் பங்கேற்பதற்கு இப் பாடசாலைகள் உதவும்.

* ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புக்களையும் புதிய கண்ணோட்டத்துடன் இப்பாடசாலைகள் வழங்க வேண்டும். இப்பாடசாலை வரவு செலவுத் திட்டத்தில் 10% தை ஆசிரியரை ஊக்குவிக்கும் செயற் திட்டங்களுக்குச் செலவிட வேண்டும். உயர்கல்வி கற்க உதவியும் ஊக்கமும் வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட கணினி அறை ஆங்கில செயற்பாட்டு அறை என்பவற்றையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.சுழல் முறையில் பாடசாலை செலவில் ஒரு மத வெளிநாட்டவர் பயண வசதிகளை வழங்க வேண்டும். பாடசாலை மட்டத்தில் செயல்நிலை ஆய்வுகளை (Action Research) மேற்கொள்வதற்கான கட்டமைப்பையும் ஏற்படுத்தி, வசதிகளையும் வழங்கு-

தல் வேண்டும். தொலைவிலிருந்து வரும் ஆசிரியர்க்கு போக்குவரத்துக்கான வசதிகளை வழங்குவதும் வதிவிட வசதிகளை வழங்குவதும் அவசியம்.

ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்கான பாட-சாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்க்கு வழங்கு வசதிகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவது மிகவும் அவசியம் .

## முடிவுரை

இலங்கையில் ஆசிரியர்களை ஊக்க முடையவர்க-ளாக்குதற்கு தடையாக உள்ளவற்றை அகற்றுவது அவசியம். இதனால் பாடசாலைகளையும் வினைத்-திறனும், விளைத்திறனும்உடையதாக மாற்றிவிடலாம் இவ்வாறு ஆசிரியரை பலவீனப்படுத்தும் அம்சங்களில் முதன்மையான தாக முனைப்படைந்திருப்பது தமது பிள்ளைகளைத் தரமான பாடசாலையில் கற்பிக்க முடிவதில்லையே என்ற ஏக்கம் கலந்த மனமுறிவு ஆகும். இதனை அகற்றுவதற்கான நடைமுறை சாத்தியமான முன்மொழிவு பாடசாலைகளை தாமே தமது பிள்ளை-களுக்கு தொடக்கிப்பராமரிப்பதுதான் ,கல்வியமைச்சு, ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றின் அனு-சரணையுடன் இவற்றை தொடக்கி நிர்வகித்து ஒரு முன்மாதிரியை ஆசிரிய உலகம் நிலை நிறுத்த வேண்டும்.

இதன் அனுபவமும் வெற்றியும் ஆசிரியர் பிள்ளை-களுக்குரிய தனியான பல்கலைக்கழகம் ஒன்றை எதிர்-காலத்தில் நிறுவிட உதவ வேண்டும். இது சரியானதும் நியாய மான தேவையுமாகும்.

## மனம் திறந்து...

நான் யாழ்ப்பாணம், நுவரெலியா, மட்டகளப்பு, புத்தளம், மீண்டும் யாழ்ப்பாணம் என ஆசிரியர் சேவையில் நீடித்து ஓய்வு பெற்று பத்து வருடங்கள் கடந்து விட்டன. சுமார் 38 வருடங்கள் பணியில் இருந்துள்ளேன். உப அதிபராகவும், அதிபராகவும் கூட கடமை ஆற்றியுள்ளேன்.

நான் படிக்கும் காலத்திலும் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலும் இடதுசாரி முற்போக்குச் சிந்தனைகளின் தாக்கத்துக்கு உட்பட்டவன். கார்த்திகேசு மாஸ்ரர் போன்றோருடன் தொடர்பு கொண்டிருந்தவன். இடதுசாரி இயக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டவன். இதனால் நாம் கற்பிக்கும் பாடசாலைக்கு வெளியிலும் சமூகத்துடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தோம். இதுவே எம்மைப் பண்படுத்தியது. எமது கற்றல் அறிவை விரிவாக்கியது. பாடத்திட்டத்தை ஒப்புவிக்கும் ஆசிரியராக மட்டுமே வாழ முடியவில்லை. இளந் தலைமுறை மாணவர்களிடையே வாசிப்பு ஆர்வத்தை, சமூகச்சிந்தனையை வளர்க்க வேண்டிய பொறுப்பு இருந்தது. இதனால் நாமும் புதியதைத் தேடிக் கற்றோம். கற்பித்தோம். இதனால் நாம் படிப்பிக்கும் வாசிப்பில் ஆர்வம் உள்ள படைப்பாற்றல் திறன் பெற்ற மாணவர்களை உருவாக்க முடிந்தது. எமக்கு இது சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட ஆசிரியர்கள் உருவாவதற்கான சமூகத்தேவை, சமூக நிர்ப்பந்தம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் ஆசிரியர்களுக்கான தேவை முன்எப்போதையும் விட அதிகரித்துத்தான் உள்ளது. இருப்பினும் இன்று "ஆசிரியர் யார்?" அவர்களுக்கான பொறுப்பு? ஆகியவற்றுக்கான அர்த்தம், பாத்திரம் மாறியுள்ளது. என்னுடைய மருமகன் ஒரு ஆசிரியர். அவரது பண்புகளை வைத்துக் கொண்டே புரிந்து கொள்ள முடிகிறது.

மொத்தத்தில் ஆசிரியர் பொறுப்பு அவர்களது பாத்திரம் என்ன என்பது குறித்தெல்லாம் கட்டுரை. எழுத வேண்டிய தேவை எமக்கு அப்போது இருந்ததில்லை. ஆனால் இப்போ "வாண்மை விருத்தி" என்றெல்லாம் புட்டு புட்டு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அகவிழி இதழ்களை பார்த்த பொழுது ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தது. அகவிழியில் இடம்பெறும் கருத்துகள் அறிவுத் தேடல் இன்றைய ஆசிரியர்களை சென்றடையுமா? அதற்குரிய சமூகமனப்பான்மை சமூகத் தேவை சாதகமாக உள்ளதா? என்று நான் எனக்குள் கேட்டுப் பார்த்தேன். முற்போக்கு இடதுசாரிச் சிந்தனையின் தாக்கத்துக்கு உட்பட்டமையால் இன்று உலகமயமாக்கல் சூழலில் "கல்வியின் எதிர்காலம்"? குறித்த ஆழமாக சிந்திக்க வேண்டுமென்று தான் கருதுகிறேன். நாம் பணியில் இருந்த பொழுது இப்படியொரு இதழ் தோன்றவில்லை. ஆனால் இன்று இப்படியொரு பத்திரிகை வேண்டியுள்ளது. இது இக்காலமாற்றத்தின் அறிகுறி போலும்.

சமீபத்தில் எங்கள் ஆசிரியர் க.சிவராமலிங்கம் இறந்துவிட்டார் இது போன்ற மூத்த ஆசிரியர் அனுபவங்களை அகவிழியில் தரிசிக்க கிடைத்தமைக்காக மகிழ்வுறுகின்றேன்.

கதிர். நடேசன். கொழும்பு .

11வது இதழின் தொடர்ச்சி...

# இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை

## நோர்வே, எத்தியோப்பியா, இலங்கை - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

*வழிகாட்டல் ஆலோசனை வழங்கற் சேவையானது நோர்வே பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் புதிய ஒரு விடயமாக உள்ளது. புதிய கல்வி ஒழுங்கு முறையின் அறிமுகப்படுத்தல் காரணமாக இது கிட்டத்தட்ட 1960ல் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கிடையே சரியான கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கான நடத்தைவாதத்தையும் விடயம் சார்ந்த சோதனையில் நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்ட அந்த நாட்களின் சித்தாந்தத்தை இச் சித்தாந்தம் பிரதிபலிப்பதாக உள்ளது.*

கலாநிதி தி. கமலநாதன்
பீடாதிபதி
பா.தனபாலன்
உப பீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கின்ற மூன்று அடிப்படைக் கற்கை நெறிகளில் ஒன்றினைக் கற்பதற்கு உரித்துடையவர்களாவர். தொழிற் கல்விக்கு விண்ணப்பித்தோர் உயர் கல்வியைப் பெறுவதற்குத் தேவையான மேலதிக தகைமைகளைப் பெற்றுக் கொள்வது சுலபமாக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டது போன்று, இளைஞர்கள் பாடசாலை செல்லாது அல்லது வேலை வாய்ப்பற்று இருக்காது பார்த்துக் கொள்வது மாவட்ட அதிகாரிகளின் சட்டரீதியான கடமையாகும். விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்கள் 3 வருடங்களுக்கும் கூடுதலான இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

மேல் இடைநிலைக் கல்வி நாடு முழுவதிலும் வழங்கப்படுவதுடன், யாவருக்கும் சமமான கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கென வடிவமைக்கப்பட்டதாகும். முன்பு பல்வேறு வகையான இடைநிலைப் பாடசாலைகள் இருந்த போதும், 1976 ஆம் ஆண்டிலிருந்து பொதுக் கோட்பாடு மற்றும் தொழிற் பயிற்சியை இணைத்த ஒரே சீரான மேல் இடைநிலை உயர் பாடசாலைகள் நோர்வேயில் இருப்பதுடன், செயன்முறை மற்றும் கோட்பாட்டு ரீதியான கல்விக்கு கொள்கை ரீதியிலாவது சம அந்தஸ்து வழங்கப்படுகின்றது. இக்கல்வி அருகருகே - ஒரே கட்டிடத்தில் வழங்கப்படுகின்றது. முதலாவது வருடத்தின் போது அடிப்படையான 15 கற்கைநெறிகளில் ஒன்று வழங்கப்படுகின்றது. அடுத்த இரு வருடங்களில் விசேட கற்கைநெறிகளும், பயிலுனர் பயிற்சியும் வழங்கப்படுகின்றது. முதலாவது இரு வருடங்களிலும் பாடசாலையில் பயிற்சி வழங்கப்படுகின்றது. கடைசி வருடத்தில் ஒரு வேலைத்தளத்தில் வேலையுடன் சேர்ந்த பயிற்சி வழங்கப்படுகின்றது.

போதியளவு வேலைத்தளம் கிடைக்காத போது முழுப்பயிற்சியும் பாடசாலையிலேயே வழங்கப்படுகின்றது. எனினும் ஒரே சான்றிதழே மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### நோர்வேயில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

வழிகாட்டல் ஆலோசனை வழங்கற் சேவையானது நோர்வே பாடசாலைகளில் ஒப்பீட்டளவில் புதிய ஒரு விடயமாக உள்ளது. புதிய கல்வி ஒழுங்கு முறையின் அறிமுகப்படுத்தல் காரணமாக இது கிட்டத்தட்ட 1960 இல் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு சிரமங்களுக்கிடையே சரியான கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கான நடத்தைவாதத்தையும் **(Behaviourism)**, விடயம் சார்ந்த சோதனையில் நம்பிக்கையையும் **(Objective Testing)** அடிப்படையாகக் கொண்ட அந்த நாட்களின் சித்தாந்தத்தை இச் சித்தாந்தம் பிரதிபலிப்பதாக உள்ளது.

1970 இல், பல்வேறு சமூக, உணர்ச்சி அல்லது நடத்தைப் பிரச்சினைகளைக் கொண்ட மாணவர்கள் மீது கவனம் செலுத்துவதான சமூக, கல்விப் பணிகளுக்கு இந்த நோக்கு மாற்றப்பட்டது. அதாவது ஒருவகையில் பாடசாலையின் சமூகப் பணிகளுக்கு 1970 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை தேவையான தமைமைகள் குறித்து அதிக விவாதம் இடம் பெற்றது. அதாவது இப்பணிக்கு ஒரு சாதாரண ஆசிரியரா அல்லது நிபுணத்துவம் வாய்ந்த ஒருவரா (உதாரணமாக ஓர் உளவியலாளரா) தேவையென விவாதிக்கப்பட்டது. முதலாவது நிலைப்பாடு வெல்லப்பட்டது. 1990 வரை விசேடத்துவமான தகைமைகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

இப்பொழுது இது மாற்றமடைந்து வருகின்றது. மாவட்டங்கள், மாநகர சபைகள் போன்ற அதிகளவான பாடசாலை அதிகார அமைப்புகள் இவ் வகையான பணிக்கு ஆகக் குறைந்தது விசேடத்துவமான கல்வி தேவை எனக் கோருகின்றன. சமூகத்தில் பாடசாலையின் பாதுகாவலர் பாகம் (Caretaker Role) 1980 மற்றும் 90 களில் நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஓர் ஒழுங்கமைப்பு என்ற வகையில் தனிப்பட்ட முறையிலன்றி பாடசாலை தொடர்பாக அதிக ஒழுங்கு முறையாக ஆலோசனை வழங்குபவர் பணியாற்றலாம் என்ற போக்கு இப்பொழுது உள்ளது. அத்துடன் சமீப காலங்களில் இச்சேவையை இரு பிரிவுகளாகப் பிரிப்பதிலுள்ள அனுகூலம் தொடர்பாக சில ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது ஒரு பணியின் ஒரு பகுதியாக ஒரு சமூகப் பணியாளர் மற்றும் இரு தொழிற்கல்வி வழிகாட்டல் வழங்குவோர் ஆகியோர் இவ் ஒழுங்கு முறையின் நன்மைகள் குறித்து வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவோரிடையே அதிக விவாதம் நடைபெறுகின்றது.

ஓர் ஒழுங்கமைப்பு என்ற வகையில் தனிப்பட்ட முறையிலன்றி பாடசாலை தொடர்பாக அதிக ஒழுங்கு முறையாக ஆலோசனை வழங்குபவர் பணியாற்றலாம் என்ற போக்கு இப்பொழுது உள்ளது. அத்துடன் சமீப காலங்களில் இச்சேவையை இரு பிரிவுகளாகப் பிரிப்பதிலுள்ள அனுகூலம் தொடர்பாக சில ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது ஒரு பணியின் ஒரு பகுதியாக ஒரு சமூகப் பணியாளர் மற்றும் இரு தொழிற்கல்வி வழிகாட்டல் வழங்குவோர் ஆகியோர் இவ் ஒழுங்கு முறையின் நன்மைகள் குறித்து வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குவோரிடையே அதிக விவாதம் நடைபெறுகின்றது.

நோர்வேயில் கலாசாரம் மற்றும் கற்றல் பற்றிய நாடாளுமன்ற வெள்ளை அறிக்கையானது (White Paper) தொழிற் கல்வி, வழிகாட்டல் குறித்து கவனம் செலுத்துவதுடன் கல்வி தொழிற்கல்விப் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்த வழிகாட்டல்களைப் பெறுவதற்கு மாணவர்களுக்குச் சட்டரீதியான உரிமை இருப்பதாகக் கூறுவதுடன் ஆலோசனை வழங்கலானது மேலோட்டமானதாகவும், வழிகாட்டல் ஆலோசகரின் தகைமை குறைவாக இருப்பதைப் பல மாணவர்கள் உணர்வதாகவும் தெரிவிக்கின்றது. அதாவது இந்த வழிகாட்டல் ஆலோசகர்கள் ஒப்பீட்டளவில் வழிகாட்டுவதில் குறைவான தகைமையைக் கொண்டிருக்கின்றனர் என்பது பல மாணவர்களின் அனுபவமாகும். தொழில் மற்றும் நிர்வாகத் திணைக்களத்தின் அறிக்கையிலும் இதே விடயத்தைக் காணக்கூடியதாக உள்ளது. வழிகாட்டல் ஆலோசகர்களின் திறைமையை விசேடமாகத் தொழிற் கல்வி ஆலோசனை வழங்குதலைப் பலப்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு இவ்விரு அதிகார அமைப்புகளும் ஆதரவு வழங்குகின்றன. கல்வித் திணைக்களம் எமது விடயத்தை பொறுத்தவரையில் "பாடசாலை நிர்வாகத்திடம்" அதனைக் கையளித்த போதும், ஆலோசனை வழங்குவதில் பயன்படுத்தப்படும் ஆளணியினர் மற்றும் ஏனைய மூலவளங்கள் குறித்துத் தீர்மானிப்பது மாவட்ட மட்டத்திலாகும். இந்த வகையில் இன்று நோர்வேயின் அதிகாரிகளின் நிகழ்ச்சி நிரலில் ஆலோசனை வழங்கல் இடம் பெற்றுள்ளதென்பதைக் கூறக் கூடியதாக உள்ளது.

## எத்தியோப்பியா

### அமைவிடம்

எத்தியோப்பியா கிட்டத்தட்ட 1.4 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. 65% சதவீதத்திற்கு விவசாயம் செய்யக் கூடிய காணிகளை எத்தியோப்பியா கொண்டிருந்த போதும் 15% சதவீதம் மட்டுமே தற்பொழுது விவசாயத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது ஆபிரிக்காவின் மேற்பகுதியில் அமைந்துள்ளது. இந்நாடு தரையால் சூழப்பட்டிருந்தாலும் டிஜிபொற்றி (Djibouti) மற்றும் கென்யா (Kenya) ஆகிய நாடுகளின் துறைமுகங்களைப் பயன்படுத்தி வருகின்றது. இந்நாட்டின் எல்லைகளாக எறிற்றீரியா, சோமாலியா மற்றும் சூடான் ஆகிய நாடுகள் உள்ளன.

இந்நாட்டின் பூகோள ரீதியான அம்சங்களாக 4500 மீற்றர் வரை உயர்ந்த மலைகள், பீடபூமிகள், பாலைவனங்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் உள்ளன. இங்கு பரந்தளவிலான சுவாத்திய மாற்றங்கள் உள்ளன. எத்தியோப்பியாவுக்கு பருவ காலங்கள் மூன்று உண்டு. பெப்ரவரியிலிருந்து மே மாதம் வரையான சிறிதளவு மழைவீழ்ச்சிக்காலம், யூனிலிருந்து செப்ரெம்பர் வரையான அதிக மழைவீழ்ச்சிக்காலம், ஒக்ரோபரிலிருந்து ஜனவரி வரையான வரண்ட காலப்பகுதி சில வருடங்களில் வெள்ளப்பெருக்குகள் மற்றும் வரட்சியும் ஏற்படுவதுண்டு. ஆனால் சாதாரணமாக ஒரு வருடத்தில் இந்நாட்டின் பல பகுதிகளில் இரு அறுவடைகளைப் பெறக்கூடியதாக உள்ளது. இதனது தலைநகரான - அடிஸ் அபாபா - (Addis Ababa) மத்திய மலைப்பகுதியில் 2400 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது.

### கலாசாரம்

இங்கு 65 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். இதன் கலாசாரத்தின் மிகக் குறிப்பிடத்தக்க அம்சம் இலக்கியத் துறையில் உள்ளது. இக் கலாசாரம் பெரும்பாலும் கிரேக்க, அராபிய மற்றும் ஏனைய மொழிகளிலிருந்து புராதன ஜீஸ் (Geez) மற்றும் நவீன அம்காரிக

மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டவையாகும். அநேகமான படைப்புக்கள் சமய ஆராய்ச்சி அல்லது புராணக்கதைகள் போன்ற தன்மையுடையவையாக உள்ளன. உலக விவகாரங்கள் குறித்த இலக்கியங்கள் பெரும்பாலும் வரலாற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன.

இந்நாட்டில் கிறிஸ்தவ மதம் ஆரம்ப காலந்தொட்டு இந்நாட்டில் பரவியதன் காரணமாக சமயத்துடன் தொடர்புடைய கட்டடக்கலை இங்கு ஒப்பீட்டளவில் சிறப்பானதாக உள்ளது. இவ்வாறான கட்டமைப்புகளும் அவற்றின் சுவர் ஓவியங்களும் பிசான்ரீன் (Byzantine) மற்றும் கொப்ரிக் (Coptic) செல்வாக்குக் கொண்டவையாக உள்ளன. எத்தியோப்பியாவின் தேர்ச்சியும் கற்பனை வளமும் கொண்ட வெள்ளி ஆபரண வேலைப்பாடு குறிப்பிடத்தக்கதாகும்.

## எத்தியோப்பியாவின் கல்வி முறை

எத்தியோப்பியாவில் மக்களின் கல்வியின் நிலை மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. உதாணமாக, 1994 இன் குடிசன மதிப்பீட்டின்படி 5 வயதும் அதற்கும் கூடுதலான வயதுடையவர்களின் மொத்த சனத்தொகையில் **11%** சதவீதத்தினர் ஆண்களாகவும், **8%** சதவீதத்தினர் பெண்களாகவும் இருந்ததுடன் இவ்விருபாலாரில் **10%** சதவீதத்தினர் பல்வேறு மட்டங்களில் பாடசாலைக்குச் சமூகமளித்தனர். நகர்ப்புறங்களில் கல்வி கற்போர் 34% சதவீதமாகவும் கிராமப்புறங்களில் கற்போரின் வீதம் 6% சதவீதமாக மட்டுமிருந்தது. எத்தியோப்பியாவின் மொத்த சனத்தொகையில் 10 வயதும் அதற்குக் கூடுதலான வயதுடையோரில் 30% சதவீதத்தினர் ஆண்களாகவும், பெண்கள் 17% சதவீதத்தினராகவும் இவ்விரு பாலரில் 23% சதவீதத்தினர் கல்வியறிவு உடையவர்களாகவும் இருந்தனர். நகர மற்றும் கிராமியப் பகுதிகளில் கல்வியறிவு வீதம் முறையே 69% சதவீதமாகவும் 15% சதவீதமாகவும் காணப்பட்டது. (CSA 1998)

எத்தியோப்பியாவின் புதிய கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கையானது கல்விக் கட்டமைப்பை மாற்றிவிட்டது இதன் பிரகாரம் 6-2-4 என்ற கட்டமைப்பு (ஆரம்பக் கல்வியில் 6 வருடங்கள், கனிஷ்ட இடைநிலையில் 2 வருடங்கள், சிரேஷ்ட இடைநிலையில் 4 வருடங்கள்) 8-2-2 என மாற்றமடைந்தது. (ஆரம்பக் கல்வி 8 வருடங்கள், கீழ் இடைநிலை 2 வருடங்கள், மேல் இடைநிலை 2 வருடங்கள்.)

கல்வித்துறையின் தந்திரோபாயமானது (TGE, 1994 B Habtamu வில் மேற்கோளாகக் காட்டப்பட்டது) அடிப்படைப் பொது, உயர் மற்றும் விசேடத்துவக் கல்வியின் கட்டமைப்பைப் பின்வருமாறு விபரிக்கின்றது.

* 4-6 வயது வரையான சிறார்களுக்கான பாலர் பாடசாலை முறை
* 1 ஆம் தரத்திலிருந்து 8 ஆம் தரம் வரையான ஆரம்ப கல்வி இரு உப பிரிவுகளாக அடிப்படை (1-4 ஆம் தரம் வரை) மற்றும் பொதுக் கல்வி (5-8 ஆம் வரை) எனப் பிரிக்கப்பட்டுள்ளது.
* பொதுவானதொரு இடைநிலைக்கல்வி, 9-10 ஆம் தரம் வரை
* இரு வருட சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்குத் தயார்படுத்தலும் இதற்கு சமாந்தரமாகத் தொழிற் கல்வி மற்றும் தொழினுட்பக் கல்வியும்
* டிப்ளோமாவுக்கான 1-2 வருடங்கள் வரையான உயர்கல்வியும், பட்டதாரிப் பட்டத்துக்கான 3-5 வருடங்கள் வரையான பட்டப்படிப்பும், பட்டப்பின் படிப்புக்கான மேலும் 1-3 வருடங்கள் வரையான கல்வியும்
* பாடசாலைக் கல்வியுடன் சமாந்தரமாக தொழில் சார் / தொழினுட்பப் பயிற்சி முறையும் ஒன்றிணைக்கப்படுதல்
* விசேட கல்விமுறையும், கல்விமுறையின் ஏனைய பகுதியுடன் தொலைக்கற்றலை ஒன்றிணைத்து அனுசரணை வழங்குவது

தமது சொந்த மொழியைச் சிறார்கள் கற்றுக் கொள்வதற்கு இப் புதிய கொள்கை அனுமதிப்பதாக உள்ளது. சகல மட்டங்களுக்காகத் தொழிற் கல்வியை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவத்தையும் இக் கொள்கை வழங்குகின்றது. பாட விதானத்தில் இவ்வாறான மாற்றங்களும் செய்முறை ஆற்றல்களுக்கு முக்கியத்துவமும் கற்பித்தலுக்கான மொழி மூலமும் ஊனமுற்ற பிள்ளைகளுக்குப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் ஒவ்வொரு பிள்ளையும் அதனது சமூகத்தில் வசித்து வேலை செய்யக்கூடியவாறு தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதனாலாகும். (Tibebu 1995)

கல்வி பற்றிய புள்ளி விபரங்களைக் கொண்ட வருடாந்த அறிக்கையின்படி 2000/2001 கல்வியாண்-

*எத்தியோப்பியாவின் புதிய கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கையானது கல்விக் கட்டமைப்பை மாற்றி விட்டது. இதன் பிரகாரம் 6—2—4 என்ற கட்டமைப்பு (ஆரம்பக் கல்வியில் 6 வருடங்கள், கனிஷ்ட இடைநிலையில் 2 வருடங்கள், சிரேஷ்ட இடைநிலையில் 4 வருடங்கள்) 8—2—2 என மாற்றமடைந்தது. (ஆரம்பக்கல்வி 8 வருடங்கள், கீழ் இடைநிலை 2 வருடங்கள், மேல் இடைநிலை 2 வருடங்கள்.)*

டில் எத்தியோப்பியாவில் கல்வி ரீதி-யில் பங்களிப்பு வீதம்:-

ஆரம்பக்கல்வி 75%

இடை நிலைக்கல்வி 12%

### எத்தியோப்பியாவில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

எத்தியோப்பியாவில் பாரம்பரியமாக இளைஞர்கள் தமது கல்வி அல்லது சமூகப் பிரச்சினைகள் பற்றிய வழிகாட்டலையும் ஏனைய ஆலோசனைகளையும் மூத்தோரிடமிருந்து பெறுகின்றனர். சம்பிரதாயமற்றதாக இருந்தபோது ஒரு நபரின் பிரச்சினையைப் பொறுத்து ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதில் நண்பர்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றும் ஒரு குடும்பத்தின் ஏனைய மூத்த அங்கத்தவர்கள் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றனர். பிரச்சினையானது அதிகளவு தனிப்பட்டதாக இருக்குமாயின் குடும்ப அங்கத்தவர்களை விட நண்பர்களிடம் தமது பிரச்சினையை அநேகமானோர் கொண்டு செல்வது வழக்கமாகும்.

எத்தியோப்பியாவில் பாரம்பரியமாக இளைஞர்கள் தமது கல்வி அல்லது சமூகப் பிரச்சினைகள் பற்றிய வழி காட்டலையும் ஏனைய ஆலோசனைகளையும் மூத்தோரிடமிருந்து பெறுகின்றனர். சம்பிரதாயமற்றதாக இருந்தபோது ஒரு நபரின் பிரச்சினையைப் பொறுத்து ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்குவதில் நண்பர்கள், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றும் ஒரு குடும்பத்தின் ஏனைய மூத்த அங்கத்தவர்கள் ஒரு முக்கியமான பங்கினை வகிக்கின்றனர். பிரச்சினையானது அதிகளவு தனிப்பட்டதாக இருக்குமாயின் குடும்ப அங்கத்தவர்களை விட நண்பர்களிடம் தமது பிரச்சினையை அநேகமானோர் கொண்டு செல்வது வழக்கமாகும்.

தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்ற சமய நிறுவனங்களிலுள்ள செல்வாக்குள்ள மனிதர்களும் தமது மதத்தினைப் பின்பற்றுவோருக்கான வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்குப் பொறுப்பானவர்களாக உள்ளனர்.

எத்தியோப்பியாவின் கல்வியின் நீண்டகால வரலாற்றுடன் ஒப்பிடுகையில் எத்தியோப்பியப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் சேவையானது அதனது ஆரம்ப கட்டத்தில் இருந்தது போன்று உள்ளது. இச்சேவை பிரதானமாக இடைநிலைக் கல்விப் பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன. பாடசாலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் வழிகாட்டல் ஆலோசனை வழங்குவோர் பலர் உளவியலில் ஆகக் குறைந்தது ஒரு முதலாவது வகுப்புப் பட்டத்தைக் கொண்டுள்ளவர்களாக இருக்கின்றனர்.

## இலங்கை

### அமைவிடம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள அழகான இயற்கை வயம் கொண்ட நாடாக இலங்கை உள்ளது. நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவு தென்னாசியாவில் இந்தியாவுக்கு அண்மையில் உள்ளது. இது 65610 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. இலங்கையின் பழைய பெயர்கள் தம்பபன்னி, தப்ரோபேன், செரண்டிப், சிலதுவீபம், சிலோன், இலங்காபுரம், ஈழம் என்பவையாகும். இந்து சமுத்திரத்தின் முத்து, இராஜகுமாரி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கையின் மத்திய பகுதி அழகான மலைப்பிரதேசங்களைக் கொண்டது. உலகளாவிய இயற்கையான சர்வதேசத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகமும் இலங்கையிலேயே உள்ளது.

### கலாசாரம்

பாரம்பரிய கலாசாரங்களைத் தன்னகத்தேயுடைய இலங்கை சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர்களைக் கொண்ட நாடாகும். பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றும் மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். எனவே இங்கு பன்மைக் கலாசார அம்சங்கள் பிரதிபலிக்கின்றன. இக்கலாசார அம்சங்களைப் பின்பற்றும் விழாக்களும் சடங்குகளும் பண்டைய நாள் தொடக்கம் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன.

சராசரி எழுத்தறிவு வீதம் 92 சதவீதமாகும். பாரம்பரியமான கலாசாரத்தைக் கொண்ட இலங்கை, சமூக அபிவிருத்தியில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையிலும் இலங்கை வறுமையான உலகின் கடைசி 40 நாடுகளில் ஒன்றாகவுள்ளது. வறுமை மற்றும் தொழிலின்மை ஆகிய பிரச்சினைகளைச் சமாளிக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய இரண்டையும் இணைத்து அதனூடாக வறுமை ஒழிப்பைத் தீவிரமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருந்தொகையான அரச சார்பற்ற அமைப்புகளும் பலவித இயல்பான மற்றும் அளவிலான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் பிரச்சினையின் அளவை ஒப்பிடும் போது தாக்கம் விரிவானதாகவே உள்ளது. இதனோடு வர்த்தக நியதிகளும் திருப்தியாக இல்லை. தொடர்ச்சியான நாணய மதிப்புக் குறைவு மற்றும் உயர் பணவீக்கம் வறுமையின் விரிவை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் 1970 ஆம் ஆண்டுகளில் இருந்து இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்-

கின்றது. அதன் காரணமாகப் பல ஆயிரக்கணக்கானோர் இறந்துள்ளதுடன் பொருள் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இது நாட்டின் அபிவிருத்தியையே சிதைத்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் கிட்டத்திட்ட 10 சதவீத தொடர்ச்சியான பாதீட்டுப் பற்றாக்குறை உள்ளதாக இருக்கிறது. மொத்த வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 20 சதவீதமாக உள்ளதுடன், மொத்த செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சவீதமாக உள்ளது. நாட்டின் அரசியல் இனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை இந்நிலையை அபிவிருத்தி செய்ய முடியாதுள்ளது.

## இலங்கையில் கல்வி முறை

பாரம்பரிய, கலாசாரச் செழுமையைக் கொண்ட இலங்கை 16 ஆம் நூற்றாண்டில் அந்நியரின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டு 1948 இல் சுதந்திரமடைந்தது. அதிலிருந்து பல கல்விச்சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் 1972, 1981, 1997 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

1992 ஆம் ஆண்டு இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழு பொதுக்கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஆலோசனைகளை முன்வைத்தது. இதன் நோக்கங்களாக,

1. கல்வி வாய்ப்புக்களில் சர்வசன மற்றும் சமத்துவ அடைதற் தன்மையை உறுதிப்படுத்தக் கல்வியை சனநாயகத் தன்மையானதாக்கல்
2. தேசிய நோக்கங்களையும், கல்வி நோக்கங்களையும், குறிக் கோள் களை யும் ஒழுங்கமைத்தல்
3. ஒவ்வொரு தனியாளுக்கும் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்தலும், அவரின் முழுமையான சமநிலை ஆளுமையை அபிவிருத்தி செய்தலும்
4. சமூக, பொருளாதார, கலாசார, சமய மற்றும் அரசியல் குறிக்கோள்களைப் பூரணப்படுத்தக் கூடிய கல்வியை வழங்கல்
5. இயற்கைச் சூழலுடன் இணைந்த குடிமக்கள் வாழ்வுக்கு வழியமைத்தல்

என்ற வகையில் இச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

> பாரம்பரியமான கலாசாரத்தைக் கொண்ட இலங்கை. சமூக அபிவிருத்தியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முன்னிலையில் உள்ளது. இந்நிலையிலும் இலங்கை வறுமையான உலகின் கடைசி 40 நாடுகளில் ஒன்றாகவுள்ளது. வறுமை மற்றும் தொழிலின்மை ஆகிய பிரச்சினைகளைச் சமாளிக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை குறைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகிய இரண்டையும் இணைத்து அதனூடாக வறுமை ஒழிப்பைத் தீவிரமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருந்தொகையான அரச சார்பற்ற அமைப்புகளும் பல வித இயல்பான மற்றும் அளவிலான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

## இலங்கையின் இன்றைய கல்வியமைப்பு

| சேரும் வயது | |
|---|---|
| 19 + | பல்கலைக்கழகங்கள் |
| | தொழில் சார் கல்லூரிகள் |
| | திறந்த பல்கலைக்கழகம் |
| | தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதேபோன்ற நிறுவனங்கள் |
| 17 + | கல்லூரி (தரங்கள் 12-13) |
| 15 + | சிரேஷ்ட இடைநிலை (தரங்கள் 10 - 11) |
| 10 + | கனிஷ்ட இடைநிலை (தரங்கள் 6-9) |
| 5 + | ஆரம்ப நிலை (தரங்கள் 1-5) |

## இலங்கையில் வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்

இலங்கையில் 1950 ஆம் ஆண்டு ஒவ்வொரு மாணவர்களதும் விபரங்கள் அடங்கிய திரள் பதிவுகள் பேணப்பட்டன. இதற்கென வடிவமைக்கப்பட்ட படிவங்களை ஆசிரியர்கள் பூரணப்படுத்தினர். மேலதிகமாக இது தொடர்பான ஏனைய விடயங்கள் எதுவும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. தொடர்ந்து 1960 தொழிலுக்கு வழிகாட்டல் சேவை ஆரம்பமானது. பின் 1981 கல்வி வெள்ளையறிக்கையில் 34 தொடக்கம் 50 வரையான பகுதியில் வழிகாட்டலின் முக்கியத்துவம் எடுத்தியம்பப்பட்டது. 1981 இல் இளைஞர் சேவை மன்றமும் கல்வியமைச்சும் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் வழிகாட்டல் சேவையை இனங்கண்டு கொள்ளலும் அதற்கான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுதலும் பற்றிய செயலமர்வு நடாத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1982 இல் யொவுன் மித்துரோ ஆலோசனைச் சேவை அமைப்பு கொழும்பில் தொடக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு இந்நிலையம் 30 இற்கு மேற்பட்ட நாடாளவிய ஆலோசனைச் சேவை நிலையங்களைக் கொண்டு இயங்கியது.

மேலும் களனிப் பல்கலைக்கழகம், தெரிவு செய்யப்பட்ட இளைஞர் சேவை மன்றங்கள், ஜனரத்தின தொழில்நுட்பக் கல்லூரி, தெரிவு செய்யப்பட்ட மாவட்ட வைத்திய-

சாலைகள், சுயாதீனமாக இயங்கும் தனியார் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களும் தற்போது இயங்கி வருகின்றன.

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விச் சீர்த்திருத்ததினூடாக எல்லாம் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், அதற்கான தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் ஆசிரியப் பயில்வில் ஈடுபடும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப்பட்டப் பாடநெறிகளில் ஆலோசனை வழிகாட்டல் பாடநெறி இணைக்கப்பட்டுள்ளது. இத்துறை சார்ந்த பயில்வை எல்லா ஆசிரியர்களும் பின்பற்றுதல் மிகப் பொருத்தமானது என்ற வகையில் இன்று இலங்கையில் இத்துறை சார்ந்த அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் மாணவர்கள் எதிர்நோக்கும் தனிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணவும் தொழில் வழிகாட்டல்களுக்கு உதவுவதும் இத்துறை அபிவிருத்தி நோக்கி இன்று நகர்த்தப்படுகின்றது.

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற கல்விச் சீர்த்திருத்ததினூடாக எல்லாம் பாடசாலைகளிலும் வழிகாட்டல் ஆலோசனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், அதற்கான தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மேலும் ஆசிரியப் பயில்வில் ஈடுபடும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப் பட்டப் பாடநெறிகளில் ஆலோசனை வழிகாட்டல் பாடநெறி இணைக்கப்பட்டுள்ளது. இத்துறை சார்ந்த பயில்வை எல்லா ஆசிரியர்களும் பின்பற்றுதல் மிகப் பொருத்தமானது என்ற வகையில் இன்று இலங்கையில் இத்துறை சார்ந்த அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கமும் பிரயோகமும்

நோர்வே, எத்தியோப்பியா, இலங்கை ஆகிய நாடுகளில் இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் நிலைமைகளைக் கண்டறிதலுடன், இந்நாடுகளின் பன்மைத்துவக் கலாசார அம்சங்கள், ஒற்றுமைகள், வேற்றுமைகள், சமூக - பொருளாதார நிலமைகளினூடாக ஆலோசனை வழங்குவோர் எதிர்நோக்கும் சவால்களைக் கண்டறிதல் மற்றும் ஆலோசனை பெற விளையும் இடைநிலை வகுப்பு மாணவர்களின் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் தீர்வுகளுக்கான வாய்ப்புக்களைத் தீர்மானிக்கும் காரணிகள் பற்றிய விளக்கங்களைப் பெறுதல் என்பவை ஆய்வின் முக்கிய நோக்கங்களாகின்றன.

இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இம் மூன்று நாடுகளிலும் இடைநிலைப் பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்த போது பாடசாலைப் பாடங்கள் அல்லது பாடசாலை வெறுப்புக்குரியதாகக் காணப்படுதல், கருத்துக்களை முன்வைக்கும் போது சிரமப்படல், முதியோருக்கும் இவர்களுக்குமான இடைவெளிகள், சமூக நடவடிக்கைகளின் போது ஏற்படும் குழப்பம், மனதை ஒரு நிலையில் வைத்திருக்க முடியாதிருத்தல், பாடவேளையில் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அதிகமாகப் பீதியடைதல், ஏகாந்த நிலையிலிருத்தல், அதிக துக்கம், ஆர்வம் குறைதல், தம் விருப்பங்களுக்குப் பெற்றோர்களின் அனுமதியைப் பெற முடியாமை, குடும்பத்தில் தாய் - தந்தை பிரச்சினைகள் மாணவர்களைப் பாதித்தல், காதல் மற்றும் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகள் முதலானவை இடைநிலை வகுப்பு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக உள்ளன.

இப் பிரச்சினைகளால் கல்வி மற்றும் பாடசாலைச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கான மனோநிலையை மாணவர்கள் இழக்கின்றனர். இச் சந்தர்ப்பங்களில் அவர்களுக்குத் தேவைப்படும் ஆலோசனை கூறுதல் ஒழுங்கான முறையில் வழங்கப்படுமானால் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும். தம்மைக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்ளவும் வசதி உண்டாகும். இந்த வகையில் இவ் ஆய்வின் குறிக்கோள்களாக இம் மூன்று நாடுகளின் இடைநிலைப் பாடசாலைகளின் வழிகாட்டல் ஏற்பாடுகளின் நிலைமைகளைக் கண்டறிவது, இம் மூன்று நாடுகளிலுமுள்ள மாணவர்களின் பிரதான பிரச்சினைகளை இனங்காணல், அதனோடு இந்நாடுகளில் ஆலோசனை வழிகாட்டல் வழங்குவோரின் அனுபவங்கள், சவால்கள் ஆகியவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு ஆலோசனை வழங்குவோர் மாணவர்களுடன் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்துகின்றனர், பெற்றோர் மற்றும் ஆலோசனை வழங்குவோருக்கிடையே நிலவுகின்ற உறவுகள், ஏனையோருடன் ஆலோசனை வழங்குவோரின் தொடர்புகள் என்ற வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆலோசனை பெறுவதற்குச் சமூகமளித்த மாணவர்களின் பிரச்சினைகள்

### எத்தியோப்பியா

1. வறுமை பொருளாதாரப் பிரச்சினைகள் - பெரும்பாலான மாணவர்களின் கல்வி - உளவியல் பிரச்சினைகளுக்கான அடிப்படை மூலாதாரங்கள் பொருளாதார வறுமை நிலையே காணப்படுகின்றது.

2. ஆட்கடத்தல் கட்டாயத் திருமணங்கள் மிக அதிக-

மாக நடைபெறுதல், பாடசாலைக்கு வரும் வழிகளில் பெண்கள் கடத்தப்படல்.

3. பாலியல் பிரச்சினைகள் - இளம் மாணவிகள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுதலுடன் கருவுற்றிருக்கின்றமை

4. குடும்பச் சீர்குலைவுகள் பிரச்சினைகள் சமூகப் பிரச்சினைகள்

5. நடத்தை ரீதியான பிரச்சினைகள் - பாடசாலைகளுக்கு வராது மறைந்திருத்தல், இடைவிலகல், ஒழுக்காற்றுப் பிரச்சினைகள்

6. தம் எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்ற தன்மைகள்

இலங்கையிலும் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றுடன் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பாடசாலைகளில் மாணவர் விருப்பங்களுக்கு ஏற்ப பாடத்திட்டம் அமையாமை, கற்பித்தல் முறைக் குறைபாடுகள், மாணவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கல், வகுப்பறைச் செயற்பாட்டுக்கு மாணவர்களுக்குத் தகுந்த உற்சாகப்படுத்தல் வரவேற்புக் கிடைக்காமை, நாளாந்தம் பாடசாலைகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்ற ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்படாமை என்பவையாகவுள்ளன.

நோர்வே

1. சமூகப் பிரச்சினைகள் ஓய்வு நேரத்துடன் தொடர்பான பிரச்சினைகள் பொலிசாருடனான பிரச்சினைகள், ஏனையோரைத் துன்புறுத்தல், வகுப்பைக் குழப்புதல்

2. பாலியல் பிரச்சினைகள் - தம் வயது மாணவியரைப் பாலியல் இம்சைக்கு மாணவர்கள் உள்ளாக்குதல்

3. போதைப் பொருட் பாவனை தொடர்பான பிரச்சினைகள்

4. பாடசாலை ஆசிரியர் - மாணவர் முரண்பாடுகள், பிரச்சினைகள்

5. பாடங்களைத் தெரிவதில் ஏற்படும் சிக்கல்கள்

6. குடும்ப உறவு முரண்பாடுகள்

இலங்கை

1. வறுமை, பொருளாதாரப் பிரச்சினைகள், கலாசார மாற்றங்கள்

2. பிள்ளை பெற்றோர் உறவு சிதைவு, பிளவுபட்ட குடும்பங்கள்

3. யுத்த சூழ்நிலைத் தாக்கங்கள், வன்முறைக் கலாசாரம்

4. பாடசாலைக்குச் செல்லாமை, இடைவிலகல்

5. கட்டிளமைப் பருவப் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை, இயற்கை அனர்த்தங்கள்

இவ்வகையிலே ஒப்பீட்டு ரீதியாக உலகின் மிகச் சிறந்த செல்வந்த நாடுகளுள் ஒன்றான நோர்வேயில் பொருத்தமான வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் நிலைமைகள் காணப்பட்டும் இடைநிலை மாணவர்கள் சார்பாகப் பல சிக்கல்கள் நிலவுகின்றன. ஆனாலும் எத்தியோப்பியா, இலங்கையுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்கின்ற போது நோர்வேயில் இணையத்தளத்துடன் இணைக்கப்பட்ட கணனிகள், பெருந்தொகையான வளங்கள், பாடநூல்கள், வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் அறை, மாணவர்களுடன் உரையாடுவதற்கும் உரையாடல்களைப் பதிவு செய்து இரகசியம் பேணி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு ஒழுங்கமைப்புத் திட்டம் பாடசாலைக் கல்வியினூடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆனால் எத்தியோப்பியாவில் மாணவர்களுடன் அந்தரங்கமாகக் கதைப்பதற்கு ஒரு தனியான இடமோ அறையோ இல்லாத நிலையில் மர நிழலே தஞ்சமாக உள்ளதைப் பெரும்பாலான ஆலோசகர்கள் எடுத்தியம்புவதுடன் அரசாங்கம் இத்துறையில் எதுவித அக்கறையையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையில் தற்போது அரசாங்கம் இது தொடர்பாகத் தீவிர கவனம் செலுத்தி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடசாலைகளிலும் இதற்காக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் எத்தியோப்பியாவின் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் அபிவிருத்திக்கான தடைகளாகப் பின்வருவன எடுத்தியம்பப்பட்டன.

1. இச்சேவைக்குக் கல்வியமைச்சு எதுவித கவனமும் செலுத்தாமை

2. வழிகாட்டல் ஆலோசனை வழங்குவோருக்கு எதுவித பயிற்சியும் வழங்கப்படாமை

3. இவர்களுக்கான எவ்வித ஊக்குவிப்புக்களோ, போதுமான ஊதியமோ வழங்கப்படுவதில்லை

4. போதுமான வளங்கள் வசதிகள் இன்மை

*மூன்று நாடுகளிலும் இடைநிலைப் பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளைப் பகுத்தாராய்ந்த போது பாடசாலைப் பாடங்கள் அல்லது பாடசாலை வெறுப்புக்குரியதாகக் காணப்படுதல், கருத்துக்களை முன்வைக்கும் போது சிரமப்படல், முதியோருக்கும் இவர்களுக்குமான இடைவெளிகள், சமூக நடவடிக்கைகளின் போது ஏற்படும் குழப்பம், மனதை ஒரு நிலையில் வைத்திருக்க முடியாதிருத்தல், பாட வேளையில் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அதிகமாகப் பீதியடைதல், ஏகாந்த நிலையிலிருத்தல், அதிக துக்கம், ஆர்வம் குறைதல், தம் விருப்பங்களுக்குப் பெற்றோர்களின் அனுமதியைப் பெற முடியாமை, குடும்பத்தில் தாய் — தந்தை பிரச்சினைகள் மாணவர்களைப் பாதித்தல், காதல் மற்றும் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகள் முதலானவை இடைநிலை வகுப்பு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக உள்ளன.*

எனினும் எத்தியோப்பியாவை விட இலங்கையில் ஓரளவு வளங்கள் இருப்பதுடன் அரசாங்க உதவிகளும் கிடைக்கின்றன.

மேலும் இம் மூன்று நாடுகளிலும் வழிகாட்டல் ஆலோசகராக இருப்பதற்கான அளவுகோல்களில் வேறுபாடுகள் இருப்பினும் எத்தியோப்பியாவில் முழுநேரமாக இப்பணியில் ஈடுபடுவோர் அதிகமாகவுள்ளனர். ஆனால் நோர்வேயிலும் இலங்கையிலும் பெரும்பாலனோர் பகுதி நேர அடிப்படையிலேயே இச்சேவையை ஆற்றுகின்றனர். பொதுவாக இச் சேவையை ஆற்றுவோர் தமக்குப் பொருத்தமான ஊதியம் தேவை என்பதை எடுத்துரைக்கின்றனர். மற்றும் நோர்வே நாட்டு ஆலோசனை வழிகாட்டல் சேவை வழங்குவோர் அனைவரும் முறையான பயிற்சியைப் பெற்றுள்ளனர். ஆனால் எத்தியோப்பியாவிலும் இலங்கையிலும் இந்நிலை காணப்படவில்லை.

இம் மூன்று நாடுகளிலும் வழி—காட்டல் ஆலோசகராக இருப்பதற்கான அளவுகோல்களில் வேறுபாடுகள் இருப்பினும் எத்தியோப்பியாவில் முழுநேரமாக இப்பணியில் ஈடுபடுவோர் அதிகமாகவுள்ளனர். ஆனால் நோர்வேயிலும் இலங்கையிலும் பெரும்பாலனோர் பகுதி நேர அடிப்படையிலேயே இச்சேவையை ஆற்றுகின்றனர். பொதுவாக இச் சேவையை ஆற்றுவோர் தமக்குப் பொருத்தமான ஊதியம் தேவை என்பதை எடுத்துரைக்கின்றனர். மற்றும் நோர்வே நாட்டு ஆலோசனை வழிகாட்டல் சேவை வழங்குவோர் அனைவரும் முறையான பயிற்சியைப் பெற்றுள்ளனர். ஆனால் எத்தியோப்பியாவிலும் இலங்கையிலும் இந்நிலை காணப்படவில்லை.

## நோர்வே — எத்தியோப்பியா — இலங்கை வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் ஒத்த தன்மைகளும் — தீர்வுகளும்

நோர்வே, எத்தியோப்பியா, இலங்கை ஆகிய நாடுகளில் இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தொடர்பான ஒப்பீட்டாய்வை மேற்கொண்ட போது மிக முக்கியமான விடயங்களில் ஒத்த தன்மைகள் (**Similarities**) காணப்பட்டன. அதாவது மாணவர்கள் எதிர்நேக்கும் பல பிரச்சினைகள் ஒரே மாதிரியானவையாகக் காணப்பட்டன. இப்பிரச்சினைகள் பெரும்பாலும் பாடசாலையுடனும், குடும்பத்துடனும் தொடர்புடையவையாக இருந்தன. அவற்றுள் கற்றலில் கவனம் செலுத்தாமை, ஞாபக மறதி, பாடசாலை ஒழுங்கு முறை, முரண்பாடுகள், ஆசிரியர் - மாணவர் உறவில் பொருத்தப்பாடின்மை, வன்முறைகள் அதிகரிப்பு, பாடசாலைக் கலைத்திட்ட விடயங்கள், குடும்பத்தில் தாய் - தந்தை முரண்பாடுகள் பிரச்சினைகள், பிளவுபட்ட குடும்பத்தாக்கங்கள் என்பவை இம் மூன்று நாட்டு இடைநிலை வகுப்பு மாணவர்களையும் பெருமளவு தாக்கத்துள்ளாக்குகின்றன. எனவே இவற்றிலிருந்து விடுதலை பெற மாணவர்களுக்கு உதவுதல் மிக அவசியம் என்பதே இவ் ஒப்பீட்டு ஆய்வின் முக்கிய அபிவிருத்தி நோக்கிய தீர்வாக முன் வைக்கப்படுகின்றது.

இவ்வகையில் கல்வி வழிகாட்டல் தொடர்பான மேலதிக செயற்றிட்டங்கள் தேவையாகவுள்ளன.

### கல்வி வழிகாட்டலிலும் தகவல் திரட்டலிலும் ஆசிரியரின் பங்கு

பாடசாலை மாணவர்கள் திறமையாகக் கற்கவும், கற்கை நெறிகளை, பாடங்களைத் தேர்ந்தெடுக்கவும், மேம்பட்ட கல்வி அடைவுகளை எட்டுவதில் எதிர்ப்படும் இடர்களை அகற்றவும் உதவுதல் கல்வி வழிகாட்டலாகப் பரிணமிக்கின்றது. மேலும் மாணவர்கள் தங்களுக்குக் கல்வியில் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறவும் கல்வி வழிகாட்டல் துணைபுரிகின்றது. புதிய பாடங்கள், கற்கைநெறிகள், அவற்றைப் பின்பற்றத் தேவையான தகுதிகள் என்பவற்றை முன்கூட்டியே அறிந்து கொள்ளச் செய்து மாணவர்களை அதற்குத் தகுந்தவாறு திட்டமிடச் செய்தலும் கல்வி வழிகாட்டலின் பயன்பாடாகவுள்ளது. இது தொடர்பாகக் கல்வி வழிகாட்டாளர் (Education Counsellor) மாணவர்களின் அனைத்து விபரங்களையும் சேகரித்து ஒவ்வொரு மாணவரும் எதிர்நோக்கும் இடர்களை அறிந்து அவர்களுடன் சுமுகமாக உறவாடி நல்வாழ்வுக்கு வழிகாட்டுதலே இன்றைய தேவையாகவுள்ளது. இவ் வழிகாட்டலை ஆசிரியர்களே செய்தல் மிகப் பொருத்தமானது என்பதையும் இவ் ஒப்பீட்டாய்வு புலப்படுத்துகின்றது.

வழிகாட்டும் திட்டத்தில் ஆசிரியரின் பங்கு (**Role of teacher in guidance programmes**) இன்று மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது. அதுவும் இடைநிலைக் கல்வி மாணவர்கள் பல பிரச்சினைகளுடனே தமது கருமங்களை ஆற்றுகின்றனர். யாராவது தமக்கு வழிகாட்டுவார்களா எனவும் பெரும்பாலானவர்கள் தவிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் வழிகாட்டுதல் சிறந்த நல்லாசிரியர்கள் மூலமே நடைபெறுகின்றது. ஏனையோரை விடக் குறித்த மாணவர்களின் வகுப்பாசிரியர்களுடன் மாணவர் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால் மாணவர்களின் கஷ்டங்கள், குடும்பச் சூழல், பணப்பிரச்சினைகள், அவர்களைத் தொந்தரவு செய்யும் இதர பிரச்சினைகள் என்பவற்றை நன்கு அறிந்து மாணவருடன் பரிவுடன் நடந்து கொள்வதன் மூலமும், அவர்களிடம் அக்கறையை வெளிப்படுத்துவதன் மூலமும் மாணவர்களுக்கு ஆசிரியர்

நல் வழிகாட்டலாம். இந்நிலை நோர்வே, இலங்கை, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் ஓரளவு சிறப்பாகவுள்ளது.

ஆனாலும் இவ் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் செயலாற்றுகையில் முக்கியமாக நோக்க வேண்டிய அம்சமாக மாணவர்களின் தனியாள் வேறுபாடு உள்ளது. தனியாளுக்குரிய தனித்துவங்கள் நிராகரிக்கப்படும் போது உள முரண்பாடுகளும், நெருக்குவாரங்களும் ஏற்படத் தொடங்குகின்றன. சீராக்கப் பிரச்சினைகள் எழுகின்றன. நடத்தைகளிலே பிறழ்வுகள் ஏற்படத் தொடங்குகின்றன. இந் நிலையில் பெற்றோர், ஆசிரியர்கள் அவர்களைக் கண்டிக்கும் பொழுது சிக்கல் நிலை முறுகலடைகின்றது.

தனியாள் வேறுபாடுகள் நிராகரிக்கப்படும் பொழுது நிறைவு பெறாத ஆளுமை உருவாக்கம் நிகழ்கின்றது. ஒவ்வொரு மாணவரிடமும் மலர வேண்டிய புத்தாக்கங்களும், புதிய கண்டுபிடிப்புக்களும் ஏற்படாமல் போய்விடுகின்றன. தனித்துவமிக்க கலைஞர்களையோ, விஞ்ஞானிகளையோ, சிந்தனையாளர்களையோ, ஆற்றுகைத் திறனுள்ளவர்களையோ உருவாக்க முடியாமல் போய்விடுகின்றது. அச்சில் வார்த்து எடுத்தல் போன்ற அபத்தமான செயல்முறையைக் கல்வி முறைமை உருவாக்கிக் கொண்டிருத்தலை மாற்றியமைக்கும் முயற்சிகளை விசைப்படுத்த வழிகாட்டல் ஆலோசனைச் சேவை பெரிதும் உதவுகின்றது. இதன் உயிர்ப்பான செயற்பாடுகள் மாணவர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கே வழிகாட்டுகின்றன.

REFERENCES

1. Shertger and Shelley - Fundamentals of Guidance (1976), Houghton Mifflin Co. USA, 1976
2. Osipow, Walsh - A survey of Counselling Methods (1980), The Dorsey Press, USA
3. Salvatove and R. Maddi - Personality Theories - A Comparative Analysis (1976), The Dorsey Press, USA
4. S.P. Chaube and A. Chaube - Comparative Education (2000), Vikas Publishing, New Delhi
5. Robert and D. Byne - Social Psychology (2004), Prentice Hall of India, New Delhi
6. Tara Chand - Educational Psychology (1993), Anmot Publications, New Delhi.
7. www.unicef.orgwebsite

'ஒருவனுடைய தனிமை,குடும்பம், வீடு கடிதத் தொடர்பு ஆகியவற்றில் ஏதேச்சையதிகாரத் தலையீட்டுக்கு எவரும் உள்ளாக்கப்படுதலாகாது. சிந்தனையே தலையீட்டுக்கு அல்லது தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு' இது உலக மனித உரிமை அறிக்கையில் உள்ள வாசகம் இது நன்கறியப்படாமல் உள்ள பின்புலம் இருக்கலாம். ஆனால் தற்போது இலக்கமுறைத் தொழில் நுட்பமும் இணையமும் (இன்டர்நெட்) தனிமையின் மீது நடத்தும் படையெடுப்பு அதிகரித்து வருவதால் இந்த வாசகம் இப்போது முன்னிலைப் பெற்றுள்ளது.

உயர்கல்வியை அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு சுமையாகக் கருதாமல் பொருளாதாரப் போட்டித் திறனுக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும், சமூக ஒருங்கிணைவுக்கும் உதவக் கூடிய ஒரு நீண்டகால முதலீடாக உயர்கல்வியை நாடுகள் கருதும்படி செய்வதும், தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிப்பதில் முக்கிய பங்கு, பணியேற்கும்படி செய்வதை நோக்கமாகக் கொண்டும் யுனெஸ்கோ சார்பில் 1998 இல் ' உஆம் நூற்றாண்டில் உயர்கல்வி' பற்றிய உலகமகாநாடு நடைபெற்றது.

'கலாசாரம் என்பது இலக்கியம்,வரலாறு, கலை ஆகியவற்றோடு முடிந்து விடுவதாக எந்நாட்டிலும் மற்ற மேற்கத்திய நாடுகளிலும் கருதுகிறார்கள். அறிவியல் அறிவைச் சேர்த்துப் பார்ப்பதில்லை. கலீலியோ டெஸ்கார்டிஸ் மற்றும் பின்வந்த விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகள் பற்றி ஏதும் தெரியாத ஓர் ஆளைக் கல்வியறிவு அற்றவர் என்று சொல்லமாட்டார்கள். மேல்நிலைக் கல்வி அளிக்கும் போது 17ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றைய காலம் வரையிலான அறிவியல் வரலாறு போதிக்கப்பட வேண்டும் என்பது தீர்மானமான கருத்து. தற்கால அறிவியல் பற்றிய கல்வியும் பொதுப்பாட அளவில் அளிக்க வேண்டும். துறை போகியவர்களிடம் மட்டுமே அறிவியல் அறிவு இருந்து வருமாயின் நாடுகள் இந்நாளில் விவேகத்தடன் ஆட்சி புரிய இயலாது.

**சிந்தனைலாளர் பெட்ராண்ட் ரசல்**

*(1985 ஜனவரி 28 அன்று கலிங்கா பரிசைப் பெற்றுக் கொண்டு ஆற்றிய உரையின் பொழுது)*

# எரிக் ஃப்ராமின் மானுட ஆளுமை மாதிரிகள்

எரிக் ஃப்ராம்

ஜெர்மனியில் பிறந்தவர் சமூக உளவியலாளராகவும், உளப்பகுப்பிய லாளராகவும் பயிற்சி பெற்றவர். ஃப்ராங்க் ஃபர்ட் சிந்தனையாளர்களுடன் தொடர்பு கொண்டவர். ஃப்ராய்டு, மார்க்ஸ் ஆகிய இருவர் கருத்துக்களாலும் ஒருங்கே கவரப்பட்டவர். இரண்டாம் உலகப் போர் சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்தார். கேரன், ஹாரனி, சலிவன் போன்ற உளவியல் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டவர். மார்க்ஸ், ஃப்ராய்டு ஆகிய இருவர் கொள்கைகளையும் இணைத்து நோக்கிய, புதிய ஃப்ராய்டியர்களுள் ஒருவர்.

முனைவர்
க. பூரணச்சந்திரன்
தமிழ்ப் பேராசிரியர்,
தமிழ்நாடு

'சுதந்திரத்தின் பயம்' , 'அழித்தலின் உள்ளமைப்பு', 'அன்பு செலுத்தல் கலை' என்னும் நூல்களில் எரிக் ஃப்ராம் மனிதனின் ஆளுமை பற்றிய தமது கொள்கைகளை முன் வைக்கிறார். ∴ப்ராய்டினை அடியொற்றியே மனித ஆளுமையை அவர் சித்தரித்தாலும், சில முக்கிய விஷயங்களில் மாறுபடவும் செய்கிறார்.

## ∴ப்ராய்டின் தப்பெண்ணங்கள்

∴பராய்டு, இருவித மரபான தப்பெண்ணங்களின் அடிப்படை மீதும் தம் கொள்கைகளை வகுத்தார் என்று குறை கூறுகிறார், ப்ராம். அவையாவன:

1. தனிமனிதனும் சமூகமும் ஒன்றுபட முடியாதவர்கள்; இருவர்க்கு-மிடையே நிரப்ப முடியாத பிளவு உள்ளது.
2. மனித இயற்கை அடிப்படையிலேயே தீயது.

தனிமனிதன் சமூகத்திற்கு எதிரானவன். அவனை அடக்கி நல்வழிப்-படுத்துவது, சமூகத்தின் கடமை, சில அடிப்படையான உயிரியல் உந்து-தல்கள் மனிதனிடம் வெளிப்பட அனுமதிக்கலாம். ஆனால், பொதுவாக அவை நெறிப்படுத்தப்பட வேண்டியவை. எனவே, மடைமாற்றம் (சப்ளி-மேஷன்) ஓர் அடிப்படைத் தேவை .

தனிமனித உந்தல்களின் திருப்தியும், சமூகமேம்பாடும் எதிர்வீதத்-தில் எப்போதும் அமைபவை. எங்கே கலாசாரச் சாதனைகள் மிகுதி என்கின்றோமோ, அங்கே தனிதமனித நிறைவுகள் ஒதுக்கப்பட்டு, நரம்பியற் சிக்கல்கள் நிறைந்திருப்பது இயற்கை. ஒரு நாகரிக சமூகத்தை நாடிச் செல்லும் பாதையில் ஒத்து நடக்க முடியாமல் வீழ்ந்து விடுபவர்கள்-தான் நரம்பியல் நோயாளிகள் என்பது ∴ப்ராய்டின் கொள்கை.

ஃப்ராய்டின் கொள்கை, ஒரு மாற்றமற்ற நிலைச் சமூகம் என்னும் நோக்கின் அடிப்படையில் எழுந்தது. இது தவறானது என்கிறார். ∴ப்ராம். "மனிதன் அடிப்படையில் தனிமையானவன் அவன் பொருளாதாரப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதற்காகவே சகமனிதர்களுடன் உறவில் ஈடுபட நேர்கிறது" என்றார் மார்க்ஸ். இதுபோலவே தான் ஃப்ராய்டும் சொல்கிறார். "மனிதன் தன்னளவில் நிறைவுறக் கூடியவன். அவன், மற்ற பொருள்களுடன் உறவு வைத்துக் கொள்வது, தனது உந்துதல்களை நிறைவு செய்து கொள்வதற்காகவே".

## உளவியல் அடிப்படைப் பிரச்சினை

ஃப்ராய்டின் மேற்குறித்த உட்கிடைகளை ஒப்புக்கொள்ள மறுக்கிறார் எர்க் ப்ராம் , உளவியலின் அடிப்படைப் பிரச்சினை எந்தவொரு தனிமனித உந்துதலின் திருப்திப்பாடோ அல்லது முறிவோ அல்ல. மாறாக, தனிமனிதன், உலகத்தோடு கொள்ளும் உறவின் தன்மை - அவ்வுறவு எப்படிப்பட்டது என்பது தான் உளவியலின் கேள்வி.

தனிமனிதனுக்கும், உலகிற்குமான உறவு மாறாததல்ல. ஃப்ராய்டு சொன்னதுபோல, அது தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. தனிமனிதன், பூர்த்திக்காக ஏங்கும் சில உந்துதல்களுடன் மனிதன் பிறந்திருப்பதாகவும், அவற்றைப் பூர்த்தி செய்யும் சக்தி அல்லது முறிக்கும் திறன் சமூகத்திடம் இருப்பதாகவும் ஃப்ராய்டு எண்ணினார். இது சரியன்று, மாறாக, எல்லா மனிதர்களுக்கும் பொதுவான, உடலோடு பிறந்த சில உந்துதல்கள் உள்ளன - பசி,தாகம், பாலுணர்வு .... மனிதனின் சில பண்புக்

கூறுகள். அன்பு, வெறுப்பு, ஆதிக்கத் தன்மை. சமூகச் செயல் முறைகளினால் உருவாகுபவை. இவை மனிதனுக்கு மனிதன் வேறுபடுபவை. சமூகம் ஒடுக்குமுறை அமைப்பு மட்டுமல்ல - அது ஆக்கவும் செய்கிறது. மானிட இயற்கை என்பது கலாசார உருவாக்கமே. எனினும், மனிதனின் உயிரியல் சார்பு இதனை ஒரு சில விதங்களில் கட்டுப்படுத்த இயலுகிறது என்பதே உண்மை.

## வரலாறும் மனிதனும்

மனித இயற்கை என்பது கலாசார ஆக்கமே என்றால், இது எப்படி உருவாயிற்று என்பதை நாம் வரலாற்றின் வாயிலாகத் தான் புரிந்து கொள்ள முடியும். சில குறித்த வரலாற்றுக் காலங்களில் மட்டும், மனித இயற்கையில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. சான்றாக, மத்தியகால மனிதனின் உலகப்பார்வையிலிருந்து மறுமலர்ச்சிக்கால மனிதனின் உலகப் பார்வை முற்றிலும் மாறுபட்டு விட்டது- இது எப்படி நிகழ்ந்தது? ஃப்ராய்டு மெலானிக்ளைன் போன்ற உளவியலாளர்கள், இதனை வெறும் தனிமனித நிகழ்வுகளாகச் சுருக்கிப் பார்க்கிறார்கள். மார்க்ஸ்,எமில் டாக்றைம் போன்றோர், இவை முற்றிலும் சமூக நிகழ்வுகளே என்றனர். இரண்டுமே ஒருதலைப்பார்வைகள் என்கிறார். எரிக்ஃப்ராம்.

மனித இயற்கை என்பது கலாசார ஆக்கமே என்றால், இது எப்படி உருவாயிற்று என்பதை நாம் வரலாற்றின் வாயிலாகத் தான் புரிந்து கொள்ள முடியும். சில குறித்த வரலாற்றுக் காலங்களில் மட்டும், மனித இயற்கையில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. சான்றாக, மத்தியகால மனிதனின் உலகப்பார்வையிலிருந்து மறுமலர்ச்சிக்கால மனிதனின் உலகப் பார்வை முற்றிலும் மாறுபட்டு விட்டது— இது எப்படி நிகழ்ந்தது? ஃப்ராய்டு மெலானிக்ளைன் போன்ற உளவியலாளர்கள், இதனை வெறும் தனிமனித நிகழ்வுகளாகச் சுருக்கிப் பார்க்கிறார்கள். மார்க்ஸ், எமில் டாக்றைம் போன்றோர், இவை முற்றிலும் சமூக நிகழ்வுகளே என்றனர். இரண்டுமே ஒருதலைப் பார்வைகள் என்கிறார். எரிக்ஷ்ப்ராம்.

ஃப்ராம்மின் கருத்து, வரலாறு மனிதனை உருவாக்குவது மட்டுமல்ல மனிதனால் உருவாகுவதும்தான். தனி மனித ஆசைகள், உந்துதல்கள், முறிவுகள் போன்றவை சமூகச் செயல்முறைகளினால் எவ்வித மாற்றங்களை அடைகின்றன என்று காண்பதும், குறித்த வடிவங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட மனிதசக்தி எப்படிச் செயல்முறைகளை வடிவமைக்கும் ஆக்கசக்திகளாக மாறுகின்றன என்று காண்பதும் - இரண்டுமே தமது நோக்கங்கள் என்றார் ஃப்ராம்.

## ஃப்ராய்டின் உந்துதல் கொள்கை

ஃப்ராய்டின் உந்துதல் கொள்கை, இருவித மயக்கப் பொருண்மைகளைக் கொண்டுள்ளது. உந்துதல் என்பது, (1) ஓர் உடலின் நரம்பு மண்டலம் உருவாக்கும் குறித்த செயற்பாணிகளைக் குறிக்கக்கூடும் அல்லது (2) உயிரியல் தேவைகள் இயல்பூக்கங்களையும் குறிக்கக்கூடும். எனவே இச்சொல்லை முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். எறும்புகளின் சமூக நடத்தை, குளவிகள், தேனீக்கள் முதலியன கூடுகட்டுவது, தேன்சேகரிப்பது, பறவைகள் இயல்பாகக் கூடுகட்டுவது, சால்மன் மீன்கள் இடம் பெயர்வது போன்றவையெல்லாம் உந்துதலின் முதல் அர்த்தம் சார்ந்தவை. மனிதனின் சில அனிச்சைச் செயல்களை மட்டும் இவ்வித நடத்தை முறைகளில் அடக்க முடியும். அவைகளும் மறைந்து கொண்டே வருகின்றன என்பது உயிரியலார் கருத்து. மனிதன் தன் இளமையில் கற்கும் நெகிழ்ச்சியுள்ள நடத்தை முறைகள், அவனது நெகிழ்ச்சியற்ற - 'இயல்பான' அனிச்சையான நடத்தைகளை அழிக்கின்றன என்பது அவர்கள் கருத்து.

இரண்டாம் அர்தத்தத்தில், பாலுணர்வு, பசி, தாகம் போன்றவை உயிர்களின் அடிப்படை உந்துசக்திகளாகின்றன. ஃப்ராய்டு இவற்றையே 'உந்துதல்' என்னும் சொல்லினால் குறித்தார் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் எப்போது, எப்படி உயிர்கள் இவற்றின் நிறைவுச் செயல்களில் ஈடுபடுகின்றன - அவை ஈடுபடுகின்றனவா இல்லையா - என்பன போன்ற அடிப்படை வினாக்களுக்கு அவர் பதில் கூறவில்லை.

## சமூகமும் உந்துதல்களும்

மனிதனுக்கும் பிற விலங்குகளுக்கும் இந்த உந்துதல்கள் பொதுவானவை, ஆனால் மனிதனுக்கோ இவற்றின் திருப்தி சமூகம் சார்ந்துள்ளது. கலாசாரம்தான் தனிமனித நிறைவை நிர்ணயிக்கின்றது.

மேலும், மனித இயற்கையை, வெறும் உயிரியல் உந்தல்களை அவன் நிறைவு செய்வதைக் கொண்டு மட்டுமே உணர்ந்து கொள்ள முடியாது. மனிதனோடு பிறந்த ஆதி உந்துதல்களுக்கு இணையான, அல்லது அவற்றை விடச் சக்திமிக்க வேறு பல புதிய தேவைகளைச் சமூகச் செயல்முறை உருவாக்கிவிடுகிறது. தாம் பசியால் துடித்துக் கொண்டிருக்கும் போது ஒரு மனிதன், தன் கையிலுள்ள ஒரே கவளம் உணவை இன்னொருவனுக்கு அளித்து விடுவதையும், நாட்டுக்காகப் போரில் ஈடுபட்டு உயிரையும் தருவதையும் - இவை போன்ற நடைமுறைகளை வெறும் உயிரியல் நோக்கிலிருந்து விளக்கிவிட முடியாது. இவை சமூக, கலாசார நோக்கினால் மட்டுமே விளக்கப்படக் கூடியவை.

## மனிதனும் விலங்குகளும்

மனிதன் பரிணாமத்தில் உருவானவன். பரிணாமம் என்பது ஏற்கனவே உள்ள பண்புகள் மாறியமைந்து

முன்னேறுதல் என்பது மட்டுமல்ல - முற்றிலும் புதிய பண்புகள் உருவாதலும்தான். எனவே, மனிதனுக்கும் பிற உயிரிகளுக்குமான பிளவு மிக அதிகரித்துவிட்டது. மனிதன், தான் ஒரு தனித்த உயிரி என்பதை உணர்கிறான் கடந்த காலத்தின் அறிவைக் குறியீட்டு வடிவில் சேமித்து வைக்கிறான். அவனால் எதிர்காலத்தின் சாத்தியப்பாடுகளைக் கற்பனையில் காண முடிகிறது. தன் கற்பனையினால், வெறும் புலன்களால் உணரக்கூடிய எல்லையைத் தாண்டியும் செல்ல முடிகிறது. இவையெல்லாம் மனிதனுக்கும் விலங்குகளுக்குமான அடிப்படை வேறுபாடுகள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, ஒரு விலங்கு தனது சூழலைக் குறிக்கும் சில நடத்தைப் பணிகள் மூலமாகவே எதிர்கொள்கிறது. ஆனால் மனிதனுக்கே, எதற்கும் ரெடிமே"டு தீர்வுகள் இல்லை. எப்பொழுதும் தொடர்ந்து தன் அறிவின் வாயிலாக, தன்னுணர்வோடு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்விதத்தில், மனிதன், இந்தப் பிரபஞ்சத்தின் அமைப்பிலிருந்து விலகிவிட்ட ஒரு சிதறல். இயற்கையின் ஒரு பகுதியாகவே இருப்பினும், இயற்கை உலகின் விதிகளுக்குக் கட்டுப்பட்டிருப்பினும், இயற்கையை மீறியும் சென்றுவிட்டான். பிரபஞ்சத்தின் பகுதியாக இருக்கும்போதே, பகுதியாக இல்லாமலும் போய்விட்டான் வீடற்றவனாகிவிட்டான் - ஆனால், இவ்வுலகோடு பிற உயிர்களோடு பிணைக்கப்பட்டும் இருக்கிறான். தனது மரணத்தைத் தானே அவன் எதிர்நோக்குகிறான். தனது இருப்பின் எல்லைகளையும் உணர்ந்திருந்தான். தனது இருப்பின் இருமையிலிருந்து அவனால் தப்பிக்க முடியவில்லை. மனத்தை விலக்க முயன்றாலும் முடியவில்லை., உடலை நிறுத்தி வைக்க விரும்பினாலும் இயலவில்லை.

## இருத்தலியல் முரண்பாடு

மனிதன் தனது சுயதேர்வின்றியே இவ்வுலகில் பிறந்திருக்கிறான் - கட்டாயம் அவன் இறக்க வேண்டியவன் - ஒரு நீண்ட வரலாற்றுச் செயல்பாட்டினுள் ஒரு சிறு கால அவகாசத்திற்கு மட்டுமே அவன் இருக்க நேர்கிறது - அவனது கலாசாரம் விதித்த எல்லைகளைத் தாண்டி அவனது திறன்கள் இயங்க முடிவதில்லை - ஆகிய பிரச்சினைகள் எல்லாம், ஃப்ராமினால் 'இருத்தலியல் முரண்கள்' எனப்படுகின்றன. இவை ' வரலாற்று முரண்' களுக்கு எதிரானவை. வரலாற்று முரண்களை, மனித விருப்பும் கால அவகாசமும் இருந்தால் தீர்த்துவிடலாம்; அல்லது கடந்து விடலாம். போர், சிலர் மட்டும் உள்ளவராகவும் பலர் இல்லாதவராகவும் இருத்தல், நோய் போன்றவை வரலாற்றுப் பிரச்சினைகள். ஆனால் இவ்வித வரலாற்றுப் பிரச்சினைகளால் பலனடையக் கூடிய வகுப்பினர் அல்லது வர்க்கத்தினர் இவற்றை வரலாற்றுப் பிரச்சினைகளாகக் காட்டாமல், இவை தீர்க்கப்பட இயலாத இருத்தலியலின் பிரச்சினைகள் என்பதாகப் பிரசாரம் செய்கின்றனர். (ஐந்து விரல்களும் ஒன்றாக இருக்கின்றனவா? அதுபோலவே மனிதனிலும் ஏற்றத்தாழ்வுகள் இயற்கை என்பது போல.)

மனிதன் பரிணாமத்தில் உருவானவன். பரிணாமம் என்பது ஏற்கனவே உள்ள பண்புகள் மாறியமைந்து முன்னேறுதல் என்பது மட்டுமல்ல — முற்றிலும் புதிய பண்புகள் உருவாதலும்தான். எனவே. மனிதனுக்கும் பிற உயிரிகளுக்குமான பிளவு மிக அதிகரித்துவிட்டது. மனிதன். தான் ஒரு தனித்த உயிரி என்பதை உணர்கிறான் கடந்த காலத்தின் அறிவைக் குறியீட்டு வடிவில் சேமித்து வைக்கிறான். அவனால் எதிர்காலத்தின் சாத்தியப்பாடுகளைக் கற்பனையில் காண முடிகிறது. தன் கற்பனையினால். வெறும் புலன்களால் உணரக்கூடிய எல்லையைத் தாண்டியும் செல்ல முடிகிறது. இவையெல்லாம் மனிதனுக்கும் விலங்குகளுக்குமான அடிப்படை வேறுபாடுகள்.

## கருத்துருவமும் அறிவுசார் விளக்கமும்

முரண்கள், புதிர்கள், இயல்புமாறல்கள் ஒத்துவராமைகள் இவற்றை மனித மனத்தினால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது ஒரு அடிப்படைப் பண்பு. ஆகவே இவற்றைத் தீர்க்க வேண்டும் என மனித மனம் விரும்புகிறது. ஆகவே, சமூகவாழ்வின் அவலங்கள் முரண்பாடுகள், கொடுமைகளைத் தவிர்க்க மனம் முரண்பட்டெழுகிறது. இவ்வாறு புரட்சியில் குதிக்காமல் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், முரண்பாடுகளே இல்லை என்று சாதிக்க வேண்டும். அல்லது முரண்பாடுகள் இயற்கை என்று போதிக்க வேண்டும் இதுதான் கருத்துருவம் அல்லது சித்தாந்தத்தின் பணி. ஆகவே, தனிமனித மனத்திற்கு 'அறிவுசார் விளக்கம்' (ரேஷனலைசேஷன்) போன்றது. சமூகத்திற்குக் கருத்துவம் (ஐடியாலஜி).

ஆகவேதான் மத்திய காலத்தில் ஒரு நிலையான படிமுறைச் சமுதாயம் ('அரசன் அவனது மாளிகையில் - ஆண்டி அவனது வாசலில்') கடவுளால் படைக்கப்பட்டது என்ற கொள்கை பரப்பப்பட்டது. ஆரம்பக் காலத்து முதலாளித்துவ சமுதாயத்தின் அறிவார்ந்த விளக்கம் (சித்தாந்தம்) என்னவென்றால், ஒரு சுதந்திரமாக சந்தைச் சமுதாயத்தில் அவனவனது திறமைக்கேற்ப அவனவனுக்கு லாபம் ' என்பது. இதன் அர்த்தம் என்னவென்றால், மிகச் சிறந்த மனிதன் - அறிவுதிறன் வாய்ந்தவன், உச்சியை எட்டிவிடுவான், திறனற்றவன் கீழேயே இருப்பான் என்பதே. (ஆகவே அடிமட்டற்களில் பணிபுரிபவர்கள், அறிவோ ஆற்றவோ அற்றவர்கள்). எனவே சித்தாந்தங்கள், அறிவியல் கருதுகோள்களோ விளக்கங்களோ அல்ல. ஆயினும் மனிதனது சமூகத்தேவையை அவை

நிறைவு செய்கின்றன. தான் வெறும் அறிவுசார் அல்லது பொருளியல் (லோகாயத) சக்திகளால் ஆதிக்கம் செலுத்தப்படவில்லை, ஒரு அறிவியல் கோட்பாட்டின் அடிப்படையில் நிர்வகிக்கப்படுகிறோம் என்னும் நிறைவை ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது சித்தாத்தம்தான் அளிக்கிறது.

## சமயமும் நரம்பியல் நோயும்

இம்மாதிரி முரண்பாடுகளின் இருப்பு, மனிதனை இந்தப் பிரபஞ்சத்தின் அர்த்தம் என்ன, ஏன் - எதற்காக இது படைக்கப்பட்டது, இது ஒழுங்கானதா அன்றிக் குழப்பமானதா, இதில் சமநிலை கொண்டுவரச் செய்ய வேண்டியது என்ன போன்றதான கேள்விகளில் ஈடுபட வைக்கிறது- அதாவது தன்னைச் சுற்றி ஒரு 'அர்த்தப்படுத்தும் வழிபடும்' சட்டகத்தை ஏற்படுத்தி கொள்ள வைக்கிறது. இச்சட்டகம், ஒரு மீயியற்கைசார்ந்த சமயத்தின் வடிவத்தையோ, அல்லது பொதுவுடைமைக் கொள்கை போன்ற எல்லாம் தழுவிய சமயம்சார் வடிவத்தையோ, அல்லது பொதுவுடைமைக் கொள்கை போன்ற எல்லாம் தழுவிய சமயம்சாரா வடிவத்தையோ எடுக்கலாம். எல்லாச் சமயங்களும், எல்லா மெய்யியல் ஒழுங்குகளும், அல்லது யாவையும் - உள்ளடக்கிய - சித்தாந்தங்களும் மனிதனின் ஒரே அடிப்படைத் தேவையைத்தான் பூர்த்தி செய்கின்றன. மனிதன் தன்னை பிரபஞ்சத்துடனும், தன்னோடும், தன் சகமனிதர்களோடும் அர்த்த பூர்வமாகத் தொடர்புபடுத்திக் கொள்ளுதல் - என்னும் தேவை.

ஆகவே ஃபராய்டு கூறியதுபோல, 'சமயம் என்பது உலகமுழுதான நரம்பியல் நோய் அல்ல, இதற்கு எதிர்மறை - '(தனிமனிதனின்) நரம்பியல்நோய் என்பது ஒரு தனிமனிதனின் சமயம் என்பதுதான் உண்மை. சமயம் என்பது பலருக்கும் பொதுவான ஓர் அர்த்தப்படுத்தும் - சட்டகம் : நரம்பியற் சிக்கலோ, ஒரு தனிமனிதன் தனக்குமட்டுமாக வகுத்துக்கொண்ட, சமூகம் சாராத, தன் வாழ்க்கைக்கு அர்த்தம் கற்பிக்க வைத்துக் கொண்ட சட்டகம். மனிதனின் அடிப்படைத் தேவை இதுதான்- "இந்தப் பிரபஞ்சத்தில் ஒரு பகுதியாக - ஓர் அங்கமாகத் தன்னை உணர்வது".

## மனிதனைச் சமூகமயமாக்கல்

மனிதன் பிறப்பதற்கு முன்பே இவ்வுலகம் இருக்கிறது. அவன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உழைத்தாக வேண்டும். உழைப்பின் நிபந்தனைகளும் நிலைமைகளும் அவன் பிறந்துள்ள சமூகத்தைப் பொறுத்திருக்கிறது. தன்னால் மாற்ற முடியாத ஒரு சமூகத்தில் அவன் பிறந்து உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த சமூகத்தின் நிலைமைகள் தான் அவன் எப்படிப்பட்ட ஆளுமையுடையவனாக மாறுவான், அவனது சமூகக் குணங்கள் என்ன என்பனவற்றையெல்லாம் நிர்ணயிக்கின்றன. இவற்றைவிட்டு மனிதன் ஒதுங்க முடியாது. ஏனெனில், அவனது சுயக்காப்புத் தேவைகள் தான்வாழ வேண்டி நிர்ப்பந்திக்கப்படும் நிலைமைகள் அவன் ஏற்குமாறு செய்து விடுகின்றன.

> மனிதன் பிறப்பதற்கு முன்பே இவ்வுலகம் இருக்கிறது. அவன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உழைத்தாக வேண்டும். உழைப்பின் நிபந்தனைகளும் நிலைமைகளும் அவன் பிறந்துள்ள சமூகத்தைப் பொறுத்திருக்கிறது. தன்னால் மாற்ற முடியாத ஒரு சமூகத்தில் அவன் பிறந்து உழைக்க வேண்டியிருக்கிறது. இந்த சமூகத்தின் நிலைமைகள் தான் அவன் எப்படிப்பட்ட ஆளுமையுடையவனாக மாறுவான். அவனது சமூகக் குணங்கள் என்ன என்பனவற்றையெல்லாம் நிர்ணயிக்கின்றன. இவற்றைவிட்டு மனிதன் ஒதுங்க முடியாது.

மனிதனது ஆளுமை, அவன் எவ்வித வாழ்க்கை முறைக்கு ஆளாக்கப்பட்டானோ அதைப் பொறுத்துள்ளது. அவனது வாழ்க்கைமுறை, அவனது குடும்பம் என்னும் ஊடகத்தினால் நிர்ணயிக்கப்படுகிறது. குடும்பம், அது அமைந்துள்ள குறிப்பிட்ட சமூகத்தின் எல்லா முதன்மையான - தனித்த கூறுகளையும் உள்ளடக்கியிருக்கிறது. இவ்வாறு குழந்தைமை முதலாகவே மனிதன் குடும்பம் வாயிலாகச் 'சமூகமயமாக்கப்படுகிறான்'.

## மனிதனின் தனித்தன்மையின் வளர்ச்சி

சில குறித்த கால கட்டங்களில், மனித ஆளுமையில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளமை பற்றி எரிக்ஃப்ராம், 'சுதந்திரத்தின் பயம்' நூலில் விவரிக்கிறார். தன்னைச் சுற்றியுள்ள இயற்கையுடன் ஒன்றான நிலைமையிலிருந்து விலகி எழுதுவதில்தான் மனிதனின் வரலாறு தொடங்குகிறது. (சில மானிடவியலாளர்கள் கூறும் ஆதி - இயற்கை ஆன்மவாதம் என்ற நிலை, மனிதன் பிரபஞ்ச ஒருமை பெற்றிருந்த நிலை இதிலிருந்து விடுபட்டு எழுந்ததுதான் மனித வரலாறு). பிரபஞ்ச ஒருமை நிலையில், மனிதன் தன்னைச் சுற்றியிருக்கின்ற பௌதீக இயற்கையோடு ஒன்றி- தனிமை உணர்வின்றி, , அந்நியமாதலின்றி - இருக்க முடிந்தது. ஆனால், அது அவனை தன்னை நிர்ணயித்துக் கொள்கின்ற சுதந்திரமான, ஆக்கபூர்வமான நிலையை எய்தவிடாமல் தடுத்தது. இம்மாதிரி நிலைமையில் மனிதன், பல இயற்கைச் சங்கடங்களால் அவஸ்தைப்பட்டாலும், 'முழுத் தன்னந் தனிமை', 'அவநம்பிக்கை' போன்ற மிகக்கொடிய துன்பங்கள் அவனைப் பாதித்ததில்லை. ஒருவேளை சமூக வளர்ச்சி என்பது ஒரு சீரானதானதாக அமைந்திருந்தால், மனிதன் முற்றிலும் அந்நியமாயிருக்க மாட்டான். ஆனால்,

தனித்தன்மையைக் காட்டிய ஒவ்வொரு சாதனையும் மேலும் மேலும் புதுப்புது முரண்களுக்கும் பாதுகாப்பின்மைக்குமே இட்டுச் சென்றன.

மத்தியகாலங்களில், மனிதன் இயற்கையோடு கொண்டிருந்த ஒருமையைக் கிட்டதட்ட முற்றிலும் இழந்துவிட்டான். ஆனால் சமூகத்துடனான ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை இழக்கவில்லை. அப்போதைய நிலப்பிரபுத்துவ சமூகம் மாற்றமற்றதாக இருந்தது. ஒவ்வொரு மனிதனும் அவன் பிறந்த நிலைமைக்கேற்ற அந்தஸ்து, தொழில் இவற்றுடன் பிணைக்கப்பட்டிருந்தான். ஒரு புதிய வணிக சமூகத்தின் பிறப்புவரை, சமூகத்தின் ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்துக்கு மாறுவது என்பது இயலாமலிருந்தது. ஓரிடத்தைவிட்டு இன்னொரு இடத்துக்கு நகர்வது, முன்பிருந்த போக்குவரத்து நிலைமைகளில் அதிகமாகச் சாத்தியமில்லை. சமூக அந்தஸ்து, தொழில் போன்றவற்றால் உடை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மதம், தனிமனித, பொருளாதார சமூக வாழ்க்கை முறைகளைக் கட்டுப்படுத்தியது. உதாரணமாக பொருளாதாரத் துறையில்,'நியாயமான விலை என்பது' பொதுவாக அப்போதிருந்த சமய அமைப்புகளும் மனிதர்களும் உணர்ந்த ஒன்றே தவிர, சுதந்திரமான ஒரு சந்தையின் ஏற்ற இறக்கங்களால் உருவானதன்று.

பெரும்பாலான மக்கள் அமுக்கு, வறுமை, நோய்களுக்கிடையே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாலும் சமயத்தினால் (மனிதர்களதுஅர்த்தச்சட்டகம்) வாழ்க்கை சகித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. உதாரணமாக, கத்தோலிக்க திருச்சபை, ஒருவிதக் குற்ற உணர்வை மனிதர்களுக்கு அளித்தாலும், தனது மக்கள் யாவருக்கும் நிபந்தனையற்ற அன்பையும், கடவுளின் மீட்சியையும் உறுதி செய்தது. பிரபஞ்சமும் மனிதனின் அறிவுக் கட்டுக்கு உட்பட்டதாக - புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மனிதனும் பூமியும் அதன் மையத்தில் இருந்தார்கள்: சுவர்க்கமும் நரகமும் இவற்றுக்கப்பால் இருந்தன; பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாக் காரியங்களும் ஒரு விதிப்படி நடந்தேறின.

பெரும்பாலான மக்கள் அமுக்கு, வறுமை, நோய்களுக்கிடையே வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாலும் சமயத்தினால் (மனிதர்களது அர்த்தச் சட்டகம்) வாழ்க்கை சகித்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. உதாரணமாக,கத்தோலிக்க திருச்சபை, ஒருவிதக் குற்ற உணர்வை மனிதர்களுக்கு அளித்தாலும், தனது மக்கள் யாவருக்கும் நிபந்தனையற்ற அன்பையும், கடவுளின் மீட்சியையும் உறுதி செய்தது. பிரபஞ்சமும் மனிதனின் அறிவுக் கட்டுக்கு உட்பட்டதாக — புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மனிதனும் பூமியும் அதன் மையத்தில் இருந்தார்கள். சுவர்க்கமும் நரகமும் இவற்றுக்கப்பால் இருந்தன் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாக் காரியங்களும் ஒரு விதிப்படி நடந்தேறின.

மத்தியகாலச் சமூகத்தில் தனி மனிதன் தனது சுதந்திரத்தை இழக்கவில்லை என்று ஃப்ராம் சொல்கிறார். ஏனெனில், 'தனிமனிதன்' என்ற கருத்தாக்கமே அப்போது எழவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக, ஒரு புதிய வணிக வகுப்பு தோன்றியது. தனி முதலீடு, போட்டி, தனிமனித முயற்சி ஆகியவற்றை வலியுறுத்தியது. இதனால் நிலப்பிரபுத்துவத்தின் மாற்றமற்ற ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகியது; தனிமனிதத்துவம் வளர்ந்தது; மறுமலர்ச்சிக் காலத்தில் இம்மாற்றம் முழுமையடைந்தது. ஆதிக்கட்டிடங்களை எழுப்பிய சிற்பிகள் தங்கள் பெயரை அறிவித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை - மலர்ச்சிக் காலச்சிற்பிகள் மக்களுக்குத் தங்களை அறிவித்துக் கொள்ள விரும்பினார்கள். உடை, அந்தந்த மனிதர்களின் ரசனைக்கேற்றவாறு மாறலாயிற்று: கலை,தத்துவம், இறையியல் எல்லாவற்றிலும் தனிமனிதப் போக்கு பிறந்தது,. கிரேக்க ரோமனிய தத்துவாதிகளுக்குப் புதுவாழ்வு கிடைத்தது. முன்பு மாதிரி மாறாத சமூகத் தளங்கள் இப்போது இல்லை: பணவசதிக்கேற்றாற்போல் ஒருவன் சமூகத்தில் உயரவோ தாழவோ முடிந்தது. மனிதன் தன்னை ஒரு ஆன்மீகத் தனிமனிதனாக உணர்ந்தான்: திருச்சபை கூடத்தேவையில்லாது போயிற்று.

இந்தப் புதிய தனிமனிதத்துவம், அரசியல் வட்டத்தில் புதிய தனியாதிக்கத்தை ஏற்றுக் கொண்டது. சுதந்திரம், தன்னுணர்வு ஆகியவற்றை அடைவதில், உணர்ச்சிபூர்வமான சுயபாதுகாப்பு என்பது இல்லாமற் போயிற்று. திருச்சபையினின்றும் விடுபட்ட பொருளாதார வாழ்க்கை ஒழுக்க வரையறைகளினால் கட்டுப்படுத்தப்பட இயலாமல், வெறும் சட்டங்களை மதிப்பதாக ஆகியது. மனிதன் தனது மரபுசார்ந்த அந்தஸ்தினால் பாதுகாப்பு உணர்வைப் பெற முடியவில்லை.

## புரோடஸ்டாண்டியமும் புதிய முதலாளித்துவமும்

பொருளாதாரத் துறையில் முதலாளித்துவம் தோன்றியது. வாணிகத்தில் தனிமனித முயற்சி போலவே சமயத்திலும் திருச்சபையின் குறுக்கீடின்றி, தனிமனிதத்துவம் தோன்றியது. மனிதன் இப்போது கடவுளின் முன் தன்னந்தனியனாய், நிர்வாணமாய் நின்றான். மீட்பு என்பது கடவுளின் தனிவிருப்புச் சார்ந்ததாகிவிட்டது. மத்தியகாலத்தில், ஏழைகள் கடவுளின் அன்புக்குச் சிறப்பான பாத்திரங்களாகக் கருதப்பட்டனர்: இப்போதோ, ஏழ்மை என்பது அவமானமாகவும், செல்வம், கடவுளின் அங்கீகாரத்தின் ஒரு வாயிலாகவும் உணரப்பட்டது.

இந்த நிலை இன்னும் தீவிரமாகி, இன்றைய சர்வாதிகாரி - முழு

முதலாளித்துவ சமூகத்தில், தனது குடும்பம், முழு, சமயம் எல்லாவற்றையும் இழந்துவிட்ட மனிதனின் ஒரே மாற்றாகச் சர்வாதிபத்தியம் உணரப்படுகிறது. ஒரு சர்வாதிகார அமைப்பில், மனிதன் தனது முதல்நிலை பந்தங்களிலிருந்து (குடும்பம் போன்றவை) விடுபட்டுவிட்டதால், தன்னந்தனிமை அவனைப் பயமுறுத்துகிறது- இதனை ஈடுசெய்ய இரண்டாம் நிலை பந்தங்கள் (தொழிற்சங்க உறவு போன்றவை) செய்ற்கையாக அளிக்கப்படுகின்றன. நவீன தொழில்மயச் சமூகத்தில் எல்லா தனிமனிதனால் பிரபஞ்சத்தின் மீது அறிவார்ந்த ஒழுங்கினையும் சுமத்திப் பார்க்க முடியவில்லை. எனவே சகிக்க முடியாத தன்னந் தனிமை, செயற்ற நிலை இவற்றிலிருந்து தப்பிக்க நினைக்கிறான் மனிதன் (சுதந்திரத்தின் பயம்)

> பொருளாதாரத் துறையில் முதலாளித்துவம் தோன்றியது. வாணிகத்தில் தனிமனித முயற்சி போலவே சமயத்திலும் திருச்சபையின் குறுக்கீடின்றி. தனிமனிதத்துவம் தோன்றியது. மனிதன் இப்போது கடவுளின் முன் தன்னந்தனியனாய். நிர்வாணமாய் நின்றான். மீட்பு என்பது கடவுளின் தனிவிருப்புச் சார்ந்ததாகிவிட்டது. மத்தியகாலத்தில், ஏழைகள் கடவுளின் அன்புக்குச் சிறப்பான பாத்திரங்களாகக் கருதப்பட்டனர். இப்போதோ, ஏழ்மை என்பது அவமானமாகவும், செல்வம், கடவுளின் அங்கீகாரத்தின் ஒரு வாயிலாகவும் உணரப்பட்டது.

## உளவியல் ஒழுங்கமைவுகள்

மனிதன் தன்னைச் சமூகத்துடன் இணைத்துப் பொருத்திப் பார்க்கும் முயற்சியில் சில உளவியல் அமைவுகள் எழுகின்றன. இவற்றை அறிவியல் மாசோக்கிஸம், சேடிஸம், அழிப்பு எந்திரகதியான ஒத்துப்போதல் எனப் பிரிக்கிறார் ஃப்ராம்.

1. அறிவியல் மாசோக்கிஸம் - அன்புக்கு அதிகமாக ஏங்கும் நரம்பியல் நோயைக் காட்டுகிறது. இவர்கள் தங்கள் போதாமை தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றையே எப்போதும் உணர்பவர்கள்- மற்றவர்கள் மீது செயலற்று அதிகமாகச் சார்ந்திருக்க நினைப்பவர்கள். இதை இவர்கள் வழிபாடு, தாழ்ச்சி, விசுவாசம் போன்ற குணங்களாக வெளிப்படுத்துவார்கள்.
2. சேடிஸம், முன் குணத்திற்கு எதிர் நிலையானது. எனினும் இரண்டும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல சேர்ந்தே இருப்பவை. மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் மனப்பாங்கு, தன்னை அளவுக்கு மீறி மற்றவர்கள் மீது சுமத்தல், துன்புறுத்தல் போன்ற குணங்கள் உடைய ஆளுமை.
3. சேடோ- மாசோக்கிஸத்திலிருந்த முற்றிலும் வேறுபட்டதல்ல அழிப்புத்தன்மை. தனது சக்தியின்மையிலிருந்தும், தனிமையிலிருந்தும் விடுபட முடியாத மனிதன், தனக்கு பயமுறுத்தலாக நினைப்பனவற்றை அழிக்க நினைக்கிறான், முரண்படுகிறான். (சுதந்திரத்தின் பயம்)
4. எந்திரகதி ஒத்துழைப்பு - தனக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான வேற்றுமைகளைத் துடைத்து, ஒற்றுமைகளை மட்டுமே வலியுறுத்தி, அவர்களோடு ஒன்றுபடுத்திக் கொள்ள தன் மூலமாகத் தனது கையற்ற நிலைமையிலிருந்து தப்பிக்க நினைத்தல்.

## மனிதனின் தன்னந்தனிமை — அதற்கான தீர்வு

ஆக, இவ்வாற மனிதன், பிரபஞ்ச ஒருமைப்பாட்டோடு இருந்த நிலையினின்றும் மாறி, இடையில், இயற்கையிலிருந்து பிரிந்தாலும் சமூகத்துடன் ஒற்றுமையோடிருந்து, இன்று இரண்டினின்றுமே அந்நியப்பட்ட நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறான். இதிலிருந்து தப்பிக்க மூன்று வழிகள் இருக்கின்றன: (1) பேசாமல் சமூகநியதிகளோடு ஒத்துப் போய் விடுதலை - மனத்தாலும் செயலாலும். (வழக்கமான தீர்வு). (2) வெளியில் ஒத்துப் போவது போல் நடித்தாலும், உள்ளுக்குள் எதிர்த்தல் (நரம்பியல் தீர்வு). (3) தன்னைத் தனிமனிதனாக - படைப்பாற்றல் உள்ளவனாக உணர்தல் (படைப்பாற்றல் தீர்வ). சமூகத்தோடு ஒன்றியிருந்த மனிதன் அதனை இழந்தது, பெரமளவு பொருளாதாரக் காரணங்களால்தான். குறிப்பாக, முதலாளித்துவம் ஒரு மனிதனை மற்றவனுக்கு எதிரியாக்கி இவ்வாறாக்கிவிட்டது. மத்தியகாலப் பாதுகாப்புப் போனபின், மனிதன் அந்தஸ்துக்காகவும் அடையாளத்திற்காகவும் போராட ஆரம்பித்து விட்டான். வருவதற்காகவும் போவதற்காகவும், உயர்வதற்கும் தாழ்வதற்கும் ஆன இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்கு மனிதன் பயங்கர விலை கொடுக்க வேண்டிவந்துவிட்டது. கடைசியில், மிகுந்த மன அழுத்தத்தின் போது மனிதன் ஆதிக்க நடத்தைக்கு இடந்தந்தே' சுதந்திரத்தினின்றும் தப்ப முடிகிறது'.

## உலகத்தோடு தொடர்புபடுத்திக் கொள்ளுதல்

மனிதன் உலகத்தோடு தன்னை இருவழிகளில் தொடர்புறுத்திக் கொள்கிறான் : (1) பொருள்களை மேலும் மேலும் சம்பாதித்தலும் சேமித்தலும். ( 2) மற்வர்களோடும் தன்னோடும் தொடர்புபடுத்திப் பார்த்தல். பொருள்களைச் சம்பாதித்தல், சேர்த்து வைத்தல் மட்டும் போதாது - அவற்றைத் தனது தேவைகளோடும் தொடர்புபடுத்தியாக வேண்டும். மனிதன் தன்னை மற்றவர்களோடும் தன்னோடும் தொடர்புபடுத்திப் பார்க்கும் வழிகளாக ஐந்து உள்ளன. - முன்பே குறிப்பிட்ட சேடிஸம், மசோக்கிஸம், அழிப்பு, எந்திரகதி, ஒத்தழைப்பு,

இவற்றோடு இயல்பான - நார்மலான அன்பு - என்னும் ஐந்தாவது முறை. இந்த சமூகமயமாதல் முறைகளுக்கேற்ப ஐந்துவித குணச்சித்திரமாதிரிகள் மனிதர்களிடையே காணப்படுகின்றன. (1) ஏற்கும் மனிதன் (2) சுரண்டும் மனிதன் (3) பதுங்கும் மனிதன் (4) விற்கும் மனிதன் (5) படைக்கும் மனிதன். இவை தூய தனித்த வடிவங்களில் மனிதர்களிடையில் காணமுடியாது. பல வீதங்களில் ஒன்றோடொன்று கலந்துதான் இருக்கும். ஆனால் ஏதேனும் ஒரு பண்பு ஆட்சி செலுத்துவதாக இருக்கும்.

## குணச்சித்திர மாதிரிகள்

"சமூகத்தோடு ஒன்றிணையும்"- சமூகமயமாகும் செயல்முறையில் மனிதசக்தி வழிச் செலுத்தப்படும் ஏறக்குறைய நிலையான வடிவம் தான் ஒரு மனிதனின் பண்பமைதி என்று எரிக்∴ப்ராம் வரையறுக்கிறார். சமூகத்தின் உளவியல் கர்த்தாவாக இயங்கும் குடும்பம்தான் பண்பை உருவமைக்கிறது. இதனால் புறத்திலிருந்து செலுத்த வேண்டிய அழுத்தவிசை தவிர்க்கப்பட்டு, உள்ளிருந்து ஒரு கட்டாயம் திணிக்கப்படுகிறது. ஒவ்வொரு சமூகமும், தனது ஆதிக்க சமூக - கலாச்சார வடிவங்களுக்கேற்ப, ஒரு பொதுவான 'சமூகப்பண்பை' தனது உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. இதன் மீதுதான், தனிமனித வேற்றுமைகள் பதிவது அல்லது சுமத்தப்படுதல் நிகழ்கிறது.

**1) ஏற்பு ஆளுமை** : இம்மாதிரிப் பண்புநலன் உடைய மனிதன், தனக்கு வேண்டிய யாவுமே வெளியிலிருந்து வரவேண்டியவை. அவற்றைத்தான் ஏற்கவேண்டும் என்று நினைக்கிறான். யாராவது அவன்மீது அன்பு செலுத்த வேண்டும், கவனித்துக் கொள்ள வேண்டும் என எண்ணுகிறான். ∴ப்ராய்டு கூறிய வாய்வழி - ஏற்புப் பண்பு (ஓரல் - ரிசெப்டிவ்) எனக் குறிப்பிடப்படும் ஆளுமை இது.

**2) சுரண்டும் ஆளுமை** : தானே உண்டாக்கக் கூடிய பொருள்களையும் உண்டாக்காமல் பிறரிடமிருந்து எடுத்துக் கொள்ள நினைக்கும் மனிதன் இவன். வன்முறை மூலமாக இதனைச் சாதிக்கிறான். ∴ப்ராய்டு கூறிய வாய்வழி - வன்முறைப் பண்பு (ஓரல் - அக்ரெசிவ்) ஆளுமை இது.

**3) பதுக்கும் ஆளுமை** : பதுக்குதலே இவ்வகை ஆளுமையுடையவனுக்கு பாதுகாப்புத் தரும் அம்சம்.

"சமூகத்தோடு ஒன்றிணையும்" — சமூகமயமாகும் செயல்முறையில் மனிதசக்தி வழிச் செலுத்தப்படும் ஏறக்குறைய நிலையான வடிவம் தான் ஒரு மனிதனின் பண்பமைதி என்று எரிக்ப்ராம் வரையறுக் கிறார். சமூகத்தின் உளவியல் கர்த்தாவாக இயங்கும் குடும்பம்தான் பண்பை உருவமைக்கிறது. இதனால் புறத்திலிருந்து செலுத்த வேண்டிய அழுத்தவிசை தவிர்க்கப்பட்டு, உள்ளிருந்து ஒரு கட்டாயம் திணிக்கப்படுகிறது. ஒவ்வொரு சமூகமும், தனது ஆதிக்க சமூக — கலாச்சார வடிவங்களுக்கேற்ப, ஒரு பொதுவான 'சமூகப்பண்பை' தனது உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. இதன் மீதுதான், தனிமனித வேற்றுமைகள் பதிவது அல்லது சுமத்தப்படுதல் நிகழ்கிறது.

சேமித்தல் பண்பு இது. ஒழுங்குமுறை, ஒழுக்கம், காலத்தைக் கடைப்பிடித்தல், போதித்தல் பண்புகள் கொண்ட ஆளுமை ∴ப்ராய்டு கூறிய 'ஆசனவாய்ப் பண்பு ஆளுமை இது.

**4) விற்கும் ஆளுமை** : சமூகமயமாதலுக்கு எந்திரகதி ஒத்துழைப்பு சார்ந்த ஆளுமை இது 'தன்னை விற்பதன் மூலமாகக்' காரியம் சாதிக்கும் ஆளுமை. ∴ப்ராய்டு கூறிய ஆண் ஆளுமை.

**5) படைக்கும் ஆளுமை** : மனிதர்களிடம் மெய்யான அன்பு செலுத்தக் கூடிய இயல்பான வளர்ச்சி பெற்ற ஆளுமை. ' தனக்குள் மறையும் உள்ளாற்றங்களை உணர்ந்து' தன் சக்தியை ஆக்கவழியில் செலுத்தும் மனித ஆளுமை ∴ப்ராய்டு குறிப்பிடும் 'இரு பாலுறவு சார்ந்த' (ஜெனிடல்) ஆளுமை.

## சுய அன்பும், பிறர் மேல் அன்பும்

∴ப்ராய்டு,சுய அன்பு குறையக்குறையத்தான் பிறர் நலத்தின் மீது நாட்டம் உண்டாகும், சுய அன்பும், பிறர் மேலன்பும் எதிர்நிலையில் நிற்பவை என்றார். ∴ப்ராம், இவை இரண்டும் முரண்பட்டவை அல்ல என்கிறார், 'அன்பு என்பது பிளவுபடாதது, முரண்பாடற்றது". மெய்யான அன்பு படைப்பாற்றல் உள்ளது. ஆதரவு, பொறுப்பு, கௌரவம் அறிவு சார்ந்தது. செலுத்தப்படும் மனிதனின் மகிழ்ச்சி, வளர்ச்சியை குறிக்கோளாகக் கொண்டது அது.

நவீன கலாசாரத்திலிருக்கும் மனிதனின் இரங்கத்தக்கநிலை என்னவென்றால், அவன் தன் மீது மட்டுமே அன்பு செலுத்துகிறான் என்பதல்ல; அவன் தன் மீது போதிய அன்பு செலுத்திக் கொள்ளவில்லை - தனது 'உண்மையான சுயத்தின்' மீத அவன் ஆர்வமே காட்டவில்லை என்பதுதான். இதேபோல ஈடிபஸ் சிக்கல் பற்றிய கருத்திலும் ∴ப்ராய்டுடன் முரண்படுகிறார் ∴ப்ராம். ஈடிபஸ் சிக்கல் என்பது, ஒரு மகன் தாயுடன் கொள்ளும் தகாத உறவல்ல-அது. தந்தைவழிச் சமூகத்தில் தந்தையின் ஆதிக்கத்தை எதிர்க்கும் மகனின் புரட்சி. ஈடிபஸ், ஜொகஸ்தாவை மணப்பதாக வரும் இரண்டாவது பகுதி, மகன், தந்தையின் ஸ்தானத்தையும் உரிமைகளையும் பெறுகிறான் என்பதைக் குறிக்கும் குறியீடே ஆகும்.

தந்தைவழி ஆதிக்கம் அற்ற சமூகங்களில், மகனுக்கும் தந்தைக்-

குமான முரண்பாடும் இல்லை. ஈடிபஸ் சிக்கலும் இல்லை. தாய்வழிச் சமூகங்களில், குழந்தைமைப் பாலுணர்வு தாயின் மீது செலுத்தப்படுவதில்லை - மாறாக, சுயத்தின் மீதோ பிறரின் மீதோ பதிவாகிறது. ஃப்ராய்டு கூறியதுபோல, ஈடிபஸ் சிக்கலும் நரம்பியல் நோயும் தொடர்புடையன அல்ல. மாறாக, மனிதன், தந்தைவழி (அல்லது ஆதிக்க) சமூக ஏற்பாடுகளிலிருந்து தப்பித்துச் தந்திரமடைய விரும்புவதைத்தான் இவையிரண்டுமே காட்டுகின்றன.

## இன்றைய சமூக ஆதிக்கமும் விடுதலையும்

இன்றைய சமூக ஆதிக்கம், மனிதனிடம் மனமுறிவுகளை ஏற்படுத்துகிறது; இவை அவனிடமுள்ள அழிவு உந்தலைத் தூண்டுகின்றன. இவற்றை ஒடுக்க இன்னும் அதிக சக்தி தேவைப்படுகிறது. எனவே இன்னும் அதிக முறிவு, வன்முறையுணர்வுகள் தோன்றுகின்றன; இப்படியே இது தொர்கிறது. இதற்காகக் கண்டு பிடிக்கப்படும் தீர்வுகளும் எல்லையற்ற புதிய புதிய முரண்பாடுகளை உண்டாக்குகின்றன.

ஆனால், இந்த நிலைமை எரிக்ஃப்ராம்மிடம் அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கவில்லை. "மனிதன் தன்னந்தனியனாதலும், அந்நியனாதலும் எவ்விதத்திலும் தவிர்க்கப்பட முடியாதவை. ஆனால், படைப்பாற்றல் திறன், மெய்யான அன்பு செலுத்தும் உறவுகள் இரண்டும் மட்டுமேதான் மனிதனை எதிர்காலத்தில் காப்பாற்ற முடியும் என்கிறார். வெறும் நரம்பியல் தடுப்பு வழிமுறையாக அமையாத, மெய்யான, நோமையான சுய அன்பிற்கும், பிறர் மீதான அன்பிற்கும் வேற்றுமையோ முரண்பாடோ இல்லை. நிச்சயமின்மையும் அவநம்பிக்கையுமே மனிதனை முன்னேற்றத்தில் ஈடுபடுத்தியுள்ளன. மனிதன் பீதியின்றி உண்மையை நோக்க முடியும் என்றால், தன் ஆற்றல்களை வெளிப்படுத்துவதனால் தன் வாழ்க்கைக்கு அளிக்கக்கூடிய அர்த்தத்தினைத் தவிர வேறெவ்வித அர்த்தமும் வாழ்க்கைக்கு இல்லை என்பதை உணரமுடியும்" ('மனிதன் - தனக்காக' நூலில் எரிக்ஃப்ராம்.)

நன்றி : நிகழ் 22,ஜூன்1992)

## கடிதம்

நான் தொடர்ந்து அகவிழி இதழ்களை வாசித்து வருகிறேன். தொடர்ச்சி பேணப்படுவது மகிழ்ச்சிக்குரியது. தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

கடந்த இதழில் மா.கருணாநிதி எழுதிய கட்டுரை குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்கள் - கல்வி மீதான கவனயீர்ப்பு கவலையளிக்கிறது. ஆரம்பக்கல்வியைப் பூர்த்தி செய்யும் 4ஆம் வகுப்பு மாணவரின் மொழி, ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களின் அடைவு மட்டம் தாழ்ந்து செல்வதற்கு சரியான காரணங்களைத் தெளிவாக கண்டறிய வேண்டும்.

போர்க்கால நெருக்கடி மட்டுமே வடகிழக்குப் பிரதேசத்துக் கல்விச் சூழல் பாதிக்கப்பட்டிருப்பதற்கு காரணம் என்று கூறமுடியாது. இதற்கப்பால் கல்வி அதிகாரிகள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் போன்றோர் முதன்மையான காரணம் என்று கூறவேண்டும். தங்கள் பொறுப்பை தட்டிக்கழித்த விட்டு, யார்மீதோ பழி போட்டு தப்பித்து ஓடும் மனோபாவம் தான் அடிப்படை

இப்ப கூட யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தன்மையை விளங்கியிருக்கிறதா? அவற்றை நிவர்த்திக்கும் வகையில் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்கள், பரிகாரக் கற்பித்தல் முறைகள் குறித்தெல்லாம் சிந்திக்கிறார்கள் என்றால் இல்லவே இல்லை என்றுதான் கூறலாம். ஏன் இப்படியான நிலை?

நம் கல்வித்துறையின் எதிர்காலத்தை நினைத்தால் பயமாக இருக்கு. நம்ம சந்ததிகள் தமிழ் மொழியில் வீழ்ச்சி கண்டால் ...? தயவுசெய்து "அகவிழி" இந்தப் பிரச்சினைகளின்பால் அக்கறை செலுத்துங்கள். "வாண்மை விருத்தி:" என்று வெறுமனே புத்தகங்களிலிருந்து பொறுக்கியெடுத்துக் கூறாமல்' நமது நடைமுறை யதார்த்தத்திலிருந்து வாண்மை விருத்திக்கான கூறுகளை கண்டு சொல்லுங்கள்.

ஏனெனில் நானும் ஒரு ஆசிரியர்.

திருமதி கமலா ராஜதுரை.

# கேள்வி - பதில்

இந்த இதழில் இருந்து கேள்வி — பதில் என்ற புதிய பகுதி ஆரம்ப மாகிறது. இந்த வடிவம் பல்வேறு விடயங்களை அதன் சிக்கல் தன்மை யுடனும், அதன் தெளிவு வேண்டியும் வடிவமைக்கப்படும். ஒவ்வொரு இதழிலும் துறை சார்ந்த ஒருவர் கேள்விகளுக்கு பதில் வழங்குவார்.

இந்தப் பகுதிக்கு கேள்விகள் அனுப்பி அதனை ஆரோக்கியமான கருத்தாட லுக்கு வழியமைப்பது ஒவ்வொரு வரினதும் கடமை.


தா.சனாதனன்
விரிவுரையாளர்
நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


கேள்வி

***யாழ்ப்பாணத்தில் அல்லது இலங்கைத் தமிழரிடையில் ஓவியக் கலைஞர்கள் உருவாகாமல் போன காரணங்கள் என்ன? கல்வித்திட்டத்தில் உள்ள குறைபாடா?***

பதில்

யாழ்ப்பாணத்தில் கோயில், வியாபார, சினிமா தியேட்டர், அரசியல் கட்சிகள், போராட்டம் என்ற தேவைகளுக்காக படம் வரைபவர்கள் அவ்வப்போது இயங்கி வந்துள்ளாகள். "விளம்பரப்பலகை வரைபவர்கள்" (Sign board painters) என்று அழைக்கப்படும் அவர்களே யாழ்ப்பாணத்தில் பொதுவாக ஓவியர்கள் எனக் கொள்ளப்படுகின்றார்கள். இவர்களை விட சாதி ரீதியாக விஸ்வகர்மாக்கள் என அழைக்கப்படுபவர்கள் பரம்பரையாக இது சம்பந்தமாக தொழில் செய்து வருகின்றார்கள். இவர்கள் கோயில் சார்ந்த சடங்கு நிமித்த தேவைகளைப் பெரும்பாலும் பூர்த்தி செய்வதுடன், இவர்களுடைய பயிற்சியும், பயில்வும் மரபு என்பதற்குள் கட்டுப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. இத்துடன் ஓவிய (சித்திர) ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்தில் ஓவியர்களாக நோக்கப்படுகின்றார்கள். ஓவியக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல், ஓவியங்களை மதிப்பீடு செய்தல், பள்ளிக்கூட விழாக்களை அலங்கரித்தல் என்பன இந்த ஓவியர்கள் செய்ய வேண்டிய பிற அலுவல்களுள் அடங்குகின்றன.

எனவே நீங்கள் கேட்ட ஏன் ஓவியர்கள் இல்லை என்ற கேள்வி யாழ்ப்பாணத்தவர் பலருக்கு அபத்தமாக கூடப்படலாம். ஆனால் ஓவியத்தை நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் பழக்கப்பட்ட வடிவங்களின் ஓர் மேற்பரப்பாக கருதாமல், அதை ஓர் சமூகப்பிரக்ஞையில் , கால தரிசனத்தின் காட்சிக் கூறுகளைக் கொண்டு கையாளப்பட்ட வெளியாக கருதுபவர்கள், உங்கள் கேள்வியின் யதார்த்தங்களைப் புரிந்து கொள்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஓவியமோ அல்லது வேறு எந்த விடயமோ பழக்கத்தால்தான் தீர்மானிக்கப்படுகின்றது. பழக்கமானது "நன்மையுடனும்", உண்மையுடனும்" சம்பந்தப்பட்டதாகவே நோக்கப்படுகின்றது. எனவே விளம்பரப்படம், கலண்டர் படம், சினிமா, குமுதம், ஆனந்த விகடனில் வரும் விளக்கப்படங்கள் எல்லாம் அவற்றுடன் உள்ள பழக்கம் காரணமாக ஓவியமாகவும் , நல்ல ஓவியம் என்பதை நிர்ணயிக்கும் அளவுகோல்களாகவும் மாறியுள்ளன. இதனால் இந்த பார்த்துப் பழகியவற்றை அப்படியே நகல் எடுப்பது என்பது. ஓர் ஓவியனின் நோக்கமாகவும், அவ்வாறு செய்பவன் சிறந்த ஓவியனாக கொள்ளப்படுதலும் இருந்து வந்துள்ளது. எனவே இங்கு ஓவியத்தின் கட்சி சம்பந்தப்பட்ட அனுபவம் என்பதோ, அதனூடு முன்வைக்கப்படும் தரிசனம் என்பதோ இது கையாளப்பட்ட விதமோ அல்லது அது புதிதாக எம்மில் உண்டாகிய அனுபவம் அல்லது தாக்கம் பற்றியோ கவனம் எடுக்கப்படுவதில்லை. பழக்கம் என்பது எதையும் உருவாக்குவதற்கான அல்லது இரசித்தலுக்கான அடிப்படையாக வரும்போது புதிதாக்கமும் கற்பனையும் அங்கு தோற்றுப் போய்விடுகின்றன. இதற்குப் பல உதாரணங்களை வரலாற்றில் இருந்தும் கலை வரலாற்றில் இருந்தும் எடுத்துக்காட்ட முடியும். எனவே இற்கு பழக்கமானதை வாய்ப்பாடுகளாக்கி அதைக் கேள்விக்கிடமற்று தொடர்பவர்களே ஓவியர்களாக அல்லது கலைஞர்களாக கொள்ளப்பட்டு வந்துள்ளார்கள்.

இந்த அடிப்படைகளில் கலையை சுய மற்றும் சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடாகவும், அதற்கான ஆற்றலை மரியாதைக்குரிய ஒன்றாக

கருதும் ஓவியத்தை செய்தி சொல்வது என்பதற்கு மேலாக காட்சி அனுபவமாக, இன்னொரு யதார்த்தமாக கருதும் நவீன கலைஞனின் உருவாக்கம் என்பது இங்கு முற்றுப் பெறவில்லை என யாரும் கருதலாம். இதற்கான காரணங்கள் உண்மையில் ஏன் விஞ்ஞானிகள் தோன்றவில்லை. சமூக விஞ்ஞானிகள் உருவாகவில்லை போன்ற கேள்விகளுக்கான காரணங்களுடன் சம்பந்தப்பட்ட எனக்குப்படுகின்றது. அந்த வகையில் இது சமூகம் சம்பந்தப்பட்ட ஓர் விசாரணையாகவே அமைகின்றது.

எமது சமூகத்தில் தொழில்சார் சாதிகளால் பயிலப்பட்ட பெரும்பாலான துறைகள், காலனித்துவ கல்வியினூடு தான் சனநாயகப்படுத்தப்பட்டன. எதையும் எவரும் கற்கலாம் என்ற அடிப்படை இதனூடு உருவாக்கப்பட்டது. இது எமது சமூகத்தில் கல்வியை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரச தொழில் துறையாக மலர்வு கண்டதே ஒழிய கல்வியை அறிவுவிருத்தியாக, ஆளுமை, ஆற்றல், பகுத்தறிவு விசாலிப்பின் ஓர் துடுப்பாகக் காணுதல் என்பது நிகழவில்லை. இதனால்தான் அரச உத்தியோகத்தில் அதி உயர்வேலை வாய்ப்பிற்கான போட்டியில் மருத்துவம் முதன்மை பெற அதேவேளை மருத்துவ விஞ்ஞானி முதன்மைப்படவில்லை. இருக்கின்ற வேலைவாய்ப்பே இந்தத் தெரிவைத் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் ஓவியம் கற்றால் கிடைக்கக்கூடிய அதி உச்ச அரச ஊழியம் என்பது ஆசிரியர் தொழிலே. இதனால் ஓவியம் சம்பந்தப்பட்ட பயிற்சியும் அதற்கான நிறுவனங்களின் உருவாக்கமும், இந்த நிறுவனங்களில் கல்வித்திட்டமும் ஆசிரியர் தொழிலுக்குப் பயிற்றுவித்தல் என்பதுடன் எல்லைப்படுத்தப்பட்டுள்ளன. எம்மிடையில் ஆசிரியர் தொழில் என்பது கிளிப்பிள்ளைப் பாடமாக மாறியுள்ள இன்றைய நிலையில் ஓவிய ஆசிரியர்களை வேறுபடுத்திப் பார்ப்பது என்பது சிரமமானதொன்றே. இதனால் ஓவியம் சில வரையறுப்பான பாவனையையும் அது சம்பந்தமான நம்பிக்கைகளையும் தாண்டி மக்களிடம் பரீட்சியப்படவில்லை. அல்லது அவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை ஏற்பதற்கான மனப்பாங்கு எம்மிடம் உருவாக்கப்படவில்லை. இந்த அடிப்படைக் காரணங்களுடன் நீண்ட காலமான பொருளாதார செயற்பாடுகளின் மந்த நிலையும், தகவல் தொடர்பில் ஏற்பட்ட குழப்பங்களும், எமது விடுதலை, பண்பாடு பற்றிய முற்கற்பிதங்களும் ஓவியம் என்ற வெளிப்பாட்டுத்துறை வளர்ச்சியடையாமைக்கான காரணங்களை ஊக்குவித்துள்ளன.

> எமது சமூகத்தில் தொழில்சார் சாதிகளால் பயிலப்பட்ட பெரும் பாலான துறைகள், காலனித்துவ கல்வியினூடு தான் சனநாயகப்படுத்தப் பட்டன. எதையும் எவரும் கற்கலாம் என்ற அடிப்படை இதனூடு உரு வாக்கப்பட்டது. இது எமது சமூகத்தில் கல்வியை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரச தொழில் துறை யாக மலர்வு கண்டதே ஒழிய கல் வியை அறிவுவிருத்தியாக, ஆளுமை, ஆற்றல், பகுத்தறிவு விசாலிப்பின் ஓர் துடுப்பாகக் காணுதல் என்பது நிகழ வில்லை. இதனால்தான் அரச உத்தி யோகத்தில் அதி உயர்வேலை வாய்ப் பிற்கான போட்டியில் மருத்துவம் முதன்மை பெற அதேவேளை மருத் துவ விஞ்ஞானி முதன்மைப்பட வில்லை. இருக்கின்ற வேலை வாய்ப்பே இந்தத் தெரிவைத் தீர்மானித்துள்ளது.

இன்று மருத்துவத்திற்கும், பொறியியலுக்குமான போட்டி என்பது உள்ளதைக் கேள்விக்குள்ளாக்காமல் ஒப்புவித்தல் என்று சுருக்கப்பட்டுள்ளதுடன் குழந்தைகளின் விளையாட்டு, கதை சொல்லும், கேட்கும் நேரங்கள் இல்லாமல் போயுள்ளது. வண்ணத்திப் பூச்சியைத் துரத்தும் சிறுவர்களையோ, கிட்டிப்புள்ளு விளையாடும் சிறுவர்களையோ நாங்கள் இன்று பார்க்க முடியாது. இவற்றுடன் கீறுவதால் மகிழும் சிறுவனும், நிறங்களுடன் விளையாடும் சிறுவனும் கூட தொலைந்து போயுள்ளனர். இன்று இந்தக் கல்வித்திட்டத்தினுள் எதையும் படிக்க முடியாதவர்களின் இறுதித் தெரிவாக பெரும்பாலான சந்தர்ப்பத்தில் ஓவியம் மாறிவிட்டிருக்கின்றது.

மேற்சொன்ன நிலைமைகளுக்கான ஊக்கியாக எமது கல்வி இருந்துள்ளது என்பதும் கவனிப்பிற்குரியது.

எனது விரிவுரையாள நண்பர் ஒருவர் பல்துறை சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களிடம் கேட்ட கேள்வியும் அதற்கான பதிலையும் நான் பகிர விரும்புகின்றேன். பல்கலைகழகங்களுக்கு இலங்கைச் சமூகத்தின் "கெட்டிக்காரர்களில் முன்னிலையில் உள்ளோரே" அனுமதிக்கப்படுகின்றனர்.

**கேள்வி**

**ஏன் இலங்கையில் விஞ்ஞானிகள் உருவாகவில்லை?**

**பதில்**

1. நாங்கள் சோம்பேறிகள்

2. எமக்கு அந்தளவுக்கு புத்தியில்லை.

3. அவர்கள் கண்டுபிடிக்க நாங்கள் பயன்படுத்துவோம்.

4. ஏன் நாங்கள் கண்டுபிடிப்பான், என்பதாக இருந்தன.

இது எமது கல்வித்திட்டம். எம்மைப் பற்றிச் சிந்திக்க எமக்கு எவ்வளவு தடையாக இருக்கின்றது என்பதற்கான சான்றாகின்றது. எமது கல்வியில் வரலாறும் விஞ்ஞானிகளும். கலையும், படைப்பாளிகளும் கண்டுபிடிப்பாளர்களும், சாதனையாளர்களும் நாம் சம்பந்தப்பட்டவையாக அல்லாமல், மேற்குலகும், இந்தியாவும், தென்னிலங்கையும் சம்பந்தப்பட்டதாகவே புகட்டப்பட்டுள்ளன. அந்த வளர்த்தெடுக்கப்பட்ட மனோபாவமே எந்தத்துறையிலும் நாங்கள் புதிதை உருவாக்க தடையாக இருந்து வந்துள்ளது. ஒரு தட்சணா மூர்த்தியோ பத்மநாதனோ இங்கு உருவானது எமது கல்வித்திட்டத்தினால் அல்ல என்பதை நாங்கள்

சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உலக வரலாற்றில் சுய நம்பிக்கையும் தேடலும், இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் மனநிலையும், புதிதாக்கத்தை வரவேற்கும் பண்பும், புதிதை ஏற்றுக்கொள்ளும் இயல்பும், அதற்கான தன்மைகள் கொண்டாடப்படும் அங்கீகரிக்கப்படும் சூழலே படைப்பாளிகளையும், விஞ்ஞானிகளையும் பிரசவித்துள்ளது என்பதுடன் பேணி வளர்த்துமுள்ளது. எனவே எமக்கு இன்று தேவைப்படுவது எமது நம்பிக்கைகளையும் கற்பித்தல்களையும் குறைந்த பட்சம் கேள்விக்குள்ளாக்கும் ஓர் மனமாற்றம் அல்லது அணுகுமுறை மாற்றம்.

உலக வரலாற்றில் சுய நம்பிக்கையும் தேடலும், இருப்பைக் கேள்விக் குள்ளாக்கும் மனநிலையும், புதிதாக் கத்தை வரவேற்றுகும் பண்பும், புதிதை ஏற்றுக்கொள்ளும் இயல்பும், அதற்கான தன்மைகள் கொண்டாடப் படும் அங்கீகரிக்கப்படும் சூழலே படைப்பாளிகளையும், விஞ்ஞானி களையும் பிரசவித்துள்ளது என்ப துடன் பேணி வளர்த்துமுள்ளது. எனவே எமக்கு இன்று தேவைப் படுவது எமது நம்பிக்கைகளையும் கற்பித்தல்களையும் குறைந்த பட்சம் கேள்விக்குள்ளாக்கும் ஓர் மனமாற்றம் அல்லது அணுகுமுறை மாற்றம்.

*கேள்வி*

*(சா/த) அல்லது (உ/த) க்கு பள்ளிக் கூடங்களில் சித்திரப் பாடம் கற்பது கடினம் என்ற சூழல் காணப்படுகின்றதே? இது எதனால்? பாட விதானத்தில் உள்ள குறைபாடா?*

*பதில்*

தமிழர்களிடையில் அல்லது யாழ்ப்பாணத்தில் ஓவியர்கள் உருவாகவில்லை என்ற கேள்விக்கான எனது பதிலில் இங்கு ஓவியம் என்பது எவ்வாறு வகுப்பறைப் பாடமாகவும், ஆசிரிய தொழிலாகவும் முடக்கப்பட்டுள்ளது என்பது பற்றி குறிப்பிட்டிருந்தேன். இவ்வகையில் முதல் நவீன ஓவிய இயக்கமான 43 குழு கொழும்பில் 1943ல் ஆரம்பமானது. ஆனால் இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே வின்சற் கலைக்கழகம் என்பது யாழ்ப்பாணத்தில் தொடக்கப்பட்டிருந்தது. இதில் சுவாரசியம் என்னவென்றால் இது முன்னையதைப் போல ஓவியர்களுக்கான இயக்கமாக அல்லாமல் ஆசிரியர்களை உருவாக்குவதற்கான கழகமாகவே அமைந்தது என்பதாகும்.

இதன் பின்னர் இன்றுள்ள வட இலங்கை நுண்கலை சபை, யாழ்பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை வரை பல நிறுவனங்கள் ஆசிரியர்களை உருவாக்க வேண்டி அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிறுவனங்களின் நோக்கங்களின் சான்றாக அவற்றின் பாடத்திட்டம் அமைந்துள்ளதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். இவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர் கலாசாலையும், கல்விக்கல்லூரியும் சித்தி ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியை வழங்ககின்றன. இந்தச் சூழலில் சித்திர பாடத்தைக் கற்றல் பிரச்சனைக்குரியது என்ற அனுபவமும், அபிப்பிராயமும் நிலவுவது ஆச்சரியமான ஒன்றாகக் கூறப்படலாம். இன்று ஆங்கிலத்தைப் போல வடக்கு-கிழக்கு பள்ளிக்கூடங்களில் பின் தங்கிய பாடமாகவே சித்திரமும் நோக்கப்படுகின்றது.

பல்வேறு நாடுகளினதும் பாடத் திட்டங்களில் ஆரம்பக் கல்வியிலிருந்து மாணவர்களின் கற்பனை ஆற்றலையும், வினைதிறனையும் வளர்க்கும் ஓர் வழிமுறையாக காண்பிய ஊடகங்களின் பயிற்சி அமைந்துள்ளது. எனினும் பல்கலைக்கழக அல்லது தொழில்கல்வி மட்டத்தில் காண்பியக் கலையானது அதன் தேவைகளையும் நோக்கத்தையும், ஊடக சாத்தியப்பாட்டினையும், உளவியல் அணுகுமுறையையும் பொறுத்து பல சிறப்பு கற்கை நெறிகளாக கற்பிக்கப்படுகின்றது. அவையாவன,

1. ஓவியம் (Painting)

2 சிற்பம் (Sculpture)

3. பதிப்போவியம் (Print making)

4. வடிவமைப்பு (Design)

5.பிரயோக ஓவியம் / வர்த்தக ஓவியம் (Applied art / Commercial art)

இவற்றை விட கலை வரலாறு (Art hostory) கலை விமர்சனம் (Art criticism) என்பவற்றுடன் எதிர்கால சித்திர ஆசிரியருக்கான சித்திரக் கற்பித்தல் (Art Teaching) இவை பட்டப்படிப்பு, பட்டமேற் படிப்பு நிலை வரை பயிலப்படத்தக்கன.

இலங்கையில் பாடசாலைகளின் சித்திரப்பாட விதானமானது மேற் சொன்ன சிறப்புப் பயிற்சிகளுக்கான அடிப்படைப் பயிற்சியையும், புரிதலையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. அந்த வகையில் அதில் செய்முறையும் கோட்பாடும் (Theory) உள்ளடக்கப்பட்டுள்ளது. செய்முறையில்.

1. நிலைப் பொருட் கூட்டத்தை பார்த்து வரைதல்.

2. கற்பனைப் படவாக்கம்

3. முப்பரிமாண அல்லது இரு பரிணாம வடிவமைப்பு

என்பனவும், கோட்பாட்டில் ஓவியம், சிற்பம், கட்டடம், பதிப்போவியம் என்பன சம்பந்தப்பட்ட வரலாறும், உத்திமுறைகள், ஊடகங்கள் (Methods & Materials) பற்றிய மிகவும் அடிப்படையான விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் கோட்பாடும், செயல் முறையும் ஒன்றிலிருந்து ஒன்று விஞ்ஞானத்தைப் போல பிரிக்க முடியாதனவாக இருப்பதுடன் ஒன்றைவிட்டு மற்றதைப் புரிந்து கொள்ள முடியாதனவாகவும் உள்ளன.

பரீட்சை என்ற ரீதியில் மாணவன் ஒருவன் கோட்பாடு பற்றிய வினாப் பத்திரத்திற்கும் நிலைப் பொருட்காட்சி-

யைப் பார்த்து வரையும் செயன்முறைக்கும் கட்டாயம் தோற்ற வேண்டியும் கற்பனைப் படவாக்கம் அல்லது வடிவமைப்பில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றான். இந்த அடிப்படையில் மாணவர்களின் அவதானம், காட்சி ஞாபகம் (Visual memory) கற்பனையாற்றல், பிரயோகிக்கும் திறன், செயல்நுட்பம் என்பதை வளர்ப்பதையும், சோதிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஓர் பாடத்திட்டமாகவும் பரீட்சை முறையாகவும் இது காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கையில் உள்ள சிறந்த பாடத்திட்டங்களில் ஒன்று என்று இதனைக் கூற முடியும். மறுதலையாக இதுதான் குறிப்புகளுக்குள்ளும் (Notes) டியூட்டரிகளினுள்ளும் சமன்பாடுகளாக்கப்பட்ட எமது கல்வியினுள் பிரச்சினையும் ஆக்கியுள்ளது. இதன் காரணத்தை யாரும் இலகுவில் இப்போது புரிந்து கொள்ளமுடியும்.

உதாரணமாக சித்திர - கோட்பாடு பற்றிய விளக்கங்களுக்கு குறிப்பிட்ட படைப்பை அல்லது ஓவியத்தை நாங்கள் சொந்தமாகப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்ளாமல் வெறும் குறிப்புக்களைப் (Notes) பாடமாக்கி விடையளிக்க முடியாது. அங்கு உங்கள் தகவல் திறனல்லாமல் அழகியல் முடிவும் காட்சி ஞாபகமுமே சோதிக்கப்படுகின்றது.

எனவே இந்தப் பாடத்திட்டத்தை நாங்கள் அணுகும் முறையில் தான் பிரச்சினை உள்ளது. இதை மற்றைய பாடத்திட்டங்களைப் போல் தகவல் சமன்பாடுகளினுள் இலகுவாக அடக்கிக் கொள்ள முடியாது. இந்தப் பாடத் திட்டம் தனது கடைசித் தெரிவாக சித்திரப் பாடத்தையும் தனது அரச உத்தியோகத்திற்கும் ஓய்வூதியத்திற்குமான கடைசி சந்தர்ப்பமாக சித்திர ஆசிரியர் தொழிலையும் தெரிவு செய்பவர்களுடன் சமரசம் செய்ய மறுக்கின்றது என்பதே எனது அவதானமாகும். இதுவே இந்தப் பாடம் சம்பந்தமாக சொல்லப்படும் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு காரணம் எனலாம்.

அவையாவன :

1. மாணவர்களுக்கு வழிகாட்ட ஆசிரியர்களால் முடியாதிருத்தல்.
2. வேண்டப்படும் கோட்பாட்டு பகுதிகளுக்கான போதிய தகவல்கள் அல்லது விடயங்கள் ஆசிரியர்களிடம் இல்லாதிருத்தல் / தமிழில் இல்லாதிருத்தல்.
3. பரீட்சைத் தாள்கள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படுகையில் பெருமளவு சிங்களச் சொற்கள் அப்படியே தமிழில் அச்சடிக்கப்பட்டிருத்தல் - இது சித்திரம் என்றால் சிங்களம் என்றாகி விடுகின்றது.
4. பாடசாலைகளில் மாணவர்கள் உலக கலை வரலாறு சம்பந்தமாக படங்களைப் பார்க்க புத்தகங்கள் இல்லாமல் இத்தல்.
5. ஆசிரியர்களும் மாணவர்களும் பாடவிதானத்திலும் பரீட்சைத் தாளிலும் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதைப் புரியாதிருத்தல்.
6. எல்லாவற்றுக்கும் மேல் இதற்கு தனியார் வகுப்புகளிற்குப் (Tution) போக முடியாதிருத்தல்.

இந்த அடிப்படையில் சித்திர ஆசிரியர்களிடம் காணப்படும் வளப்பற்றாக்குறை என்பது, பாரிய பிரச்சினையாக உள்ளது. அதேவேளை சித்திரம் கற்றல் கற்பித்தல் நிலைகளில் ஓர் அணுகுமுறை மாற்றமும் (attitude change) அடிப்படையானது. இந்தியாவின் மிக முக்கியமான ஓவியரும் கலை விமர்சகரும், மிக முக்கியமான ஆசிரியருமான K.G சுப்பிரமணியம் சொன்னதை நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். "ஒருவர் படைப்பாளியாக (ஓவியராக) இருத்தல் என்பதே படைப்பாக்கத்தை (ஓவியத்தை) கற்பித்தற்கான ஒரே வழியாகும்" அந்த வகையில் எமது ஆசிரியர்கள் ஓவியர்களாக இருக்கும்போது சித்திர ஆசிரியர் தொழில் என்பது ஓர் தொழிலாக அல்லாமல் தெரிவாக, வாழ்க்கையாக மாறும் போது சித்திர பாடம் பற்றிய பற்றாக்குறைகளும் கஷ்டங்களும் விலகிவிடும்.

உண்மையான ஆர்வமுள்ள மாணவன் கண்டுபிடிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவான். எங்காவது மாணவர்கள் ஓவியத்தை விரும்பி, துணிந்து கற்கிறார்கள் என்றால் அங்கு இந்த ஆசிரியரை நாங்கள் இன்றும் இனங்காண முடியும்.

---

*'தமிழ் போன்ற பழைய மொழிகளில் சமூகவளர்ச்சியினைக் காட்டும் சுவடுகளை சொல்வழிவங்களாக காண முடிகிறது. சமூகவரலாறு காட்டும் சொற்களில் ஒன்றாகத் தமிழில் 'பொது' எனும் சொல்லைக் காணலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியத்திலும் மக்களின் அன்றாடப் பேச்சுமொழியிலும் இந்தச் சொல் தவறாமல் இடம்பெறுகிறது. மக்களைக் குறிப்பதாகவும், இடத்தைக் குறிப்பதாகவும், நிறுவனங்களை குறிப்பதாகவும் இந்தச் சொல் நம்மால் பயன் படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் பொதுவிடயம், ஊர்ப்பொது , பொதுக்கோயில் என்றவாறு முன்னொட்டாக நின்று பலபொருள் உணர்த்தும் சொல்லாக இது அமைந்திருக்கிறது. 'பொத்தம் பொது' என்று இச்சொல் இரட்டித்துப் பேச்சுத்தமிழில் நம்மால் வழங்கப்படுவதுண்டு.'*


- முனைவர் தொ. பரமசிவம், பொதுவும் தோழமையும் எனும் கட்டுரை, புதுவிசை இதழ் 6, பக்30, 2001

இம்மாத வெளியீடு

# இலங்கையில் முகாமைத்துவக் கல்வி

மா. சின்னத்தம்பி

தலைவர், கல்வியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பக்கம்

xiv + 268

அளவு

145mmx215mm

விலை

ரூ 450

ISBN

955 9429 68 X

**பொருளடக்கம்:** I எண்ணக்கரு, II முகாமைத்துவ கல்வி வளர்ச்சி, III கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, IV கலைத்திட்டம், V பிரச்சனைகளும் பலவீனங்களும், VI முகாமைத்துவ கல்வி அபிவிருத்தி, நூல் விபரப்பட்டியல், சுட்டி

**வெளிவரவுள்ள கல்வியல்துறைசார் நூல்கள்**

- நவீன கல்விச் சிந்தனைகளின் போக்கு
  பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
  கல்விப் பீடம்
  கொழும்புப் பல்கலைக்கழகம்
- ஒப்பீட்டுக் கல்வி
  பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
  கல்விப் பீடம்
  கொழும்புப் பல்கலைக்கழகம்
- வகுப்பறைகளில் கல்வி உளவியல்
  திரு. உலகநாதர் நவரட்ணம்
  பணிப்பாளர்
  தமிழ் மொழிப் பிரிவு
  தேசிய கல்வி நிறுவனம்
- செயல்வழி ஆய்வு: ஓர் அறிமுகம்
  திரு. தை. தனகராஜ்
  முன்னாள் பணிப்பாளர்
  தமிழ் மொழிப் பிரிவு
  தேசிய கல்வி நிறுவனம்

**குமரன் புத்தக இல்லம்**

361 1/2, டாம் வீதி, கொழும்பு 12
தொ.பேசி : 242 1388
கைபேசி : 071 410 3489
தொலைநகல்: 242 1388
மின் அஞ்சல்: kumbh@sltnet.lk

3 மெய்கைவிநாயகர் தெரு
குமரன் குடியிருப்பு
சென்னை - 26
இந்தியா
தொ.பேசி: 2362 2680

இணையத் தளம்: www.kumaranbook.com

எமது அடுத்த வெளியீடு

சர்வதேச கல்வி நிறுவனம் (International Academy of Education), சர்வதேச கல்வி பணியகம் (International Bureau of Education), யுனேஸ்கோ (UNESCO) ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூற் தொடரின் (Educational Practices Series) தமிழாக்கம்

இவ் வரிசையின் முதல் வெளியீடு

# பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்?

**(How Children Learns)**

கலாநிதி ஸ்டேலா வொஸ்னியாடோ



தமிழ் மொழிப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மொழிபெயர்ப்பு
திருமதி. புஷ்பா சிவகுமாரன்

பக்கம்
60

ISBN
955 9429 69 8

விலை
ரூ 90

## இவ்வரிசையில் வெளிவரவுள்ள ஏனைய நூல்கள்

1. கற்பித்தல் (Teaching)
2. பெற்றோரும் கற்றலும் (Parents and Learning)
3. பயனுறுதி வாய்ந்த கல்விசார் நடைமுறைகள் (Effective educational practices)
4. கணிதத்தில் மாணவரின் அடைவினை மேம்படுத்தல் (Improving student achievement in Mathematics)
5. போதித்தல் (Tutoring)
6. மேலதிக மொழிகளைக் கற்பித்தல் (Teaching Additional Languages)
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்? (How children learns?)
8. நடத்தைப் பிரச்சினைகளைத் தவிர்த்தல் - பயனுடைய வழிமுறைகள் (Preventing Behaviors- What works)
9. பாடசாலை ஊடாக HIV/AIDS நோய்களைத் தவிர்த்தல் (Preventing HIV/AIDS in Schools)
10. கற்றலுக்கான ஊக்கல் (Motivation to learn)
11. கல்வி மற்றும் சமூக மன வெழுச்சிசார் கற்றல் (Academic and Social emotional learning)
12. வாசிப்பை கற்பித்தல் (Teaching Reading)
13. பாடசாலைகளினூடாக முன்பள்ளி நிலையில் மொழியறிவை மேம்படுத்தல் (Promoting pre-school language)

DREAM STATION

அகண்ட ஆழ்ந்த அறிவிற்காய்

“நூல் பண்பாட்டையும், நூலகப் பண்பாட்டையும் உருவாக்க ஒன்றிணைவோம்”

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 13ம், 14ம், 15ம், திகதி வலி. தெற்கு பிரதேச சபையால் சுன்னாகம் நூலகத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் BOOK LABம் அகவிழியும் இணைந்து பிரதேச சபையின் அனுசரணையுடன் புத்தகக்கண்காட்சியும் விற்பனையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---

“ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும், வாசிப்புக்களுமே”

---


BOOK LAB

148, பரமேஸ்வராச் சந்தி
பலாலி வீதி, திருநெல்வேலி
Tel : 0777-840318
E-mail : booklab@gmail.com